விலை : 20.00
பக்கங்கள் : பதினாறு + பதினாறு

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

சங்கு 16 வள்ளுவர் ஆண்டு 2046 ஆவணி 06 ஞாயிற்றுக்கிழமை (23.08.2015) தொலைபேசி 222 3378, தொலைநகல் 222 7829 ஒலி 247

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக் கட்டணம்
1000/= மட்டுமே

# இலங்கை விவகாரம் குறித்து அகாஷியுடன் - ரமபோசா



(கொழும்பு)

இலங்கையின் சமாதான முயற்சிகள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு தொடர்பில் இலங்கைக்கான ஜப்பானிய சிறப்புத் தூதுவர் யசூஷி அகாஷியுடன் தென்னாபிரிக்க பிரதி ஜனாதிபதி சிறில் ரமபோசா பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன. (15ஆம் பக்கம் பார்க்க)



## கைக்குண்டு மீட்பு



(கரணவாய்)

வெடிக்காத நிலையிலிருந்த கைக்குண்டு ஒன்று பருத்தித்துறைப் பொலிஸாரினால் நேற்றுக் காலை மீட்கப்பட்டுள்ளது.

வடமராட்சி மாயக்கைவாணி குடியிருப்பு விளையாட்டு மைதானதத்துக்கு அருகில் உள்ள பற்றைக்குள்ளே இருந்தே மேற்படி கைக்குண்டு 15 ஆம் பக்கம் பார்க்க...

## இரண்டு வருடங்களுக்கு கட்சி தாவத் தடை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியும்ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைக்கும் தேசிய அரசாங்கத்தின கால எல்லை முடியும்வரை கட்சி தாவல்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. 15 ஆம் பக்கம் பார்க்க....

## வாழ்த்துகின்றோம்


இன்றைய தினம் நடைபெறவுள்ள தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள் அனைவரும் சிறந்த பெறுபேறுகளைப் பெற வாழ்த்துகிறோம்.



- வலம்புரி கல்விப்பிரிவு

### பிரதமர் ரணில் ஏற்பாடு செய்த

## தேநீர் விருந்துபசாரத்தை புறக்கணித்தார் மகிந்த!



(கொழும்பு)

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க மீண்டும் பதவியேற்ற நிகழ்வு முடிவடைந்தவுடன், இந்நிகழ்வில் கலந்து கொண்ட அனைவருக்கும் ஜனாதிபதி செயலகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேநீர் விருந்துபசார நிகழ்வில் மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிகழ்வில் ஜனாதிபதி மைத்திரிபால 15 ஆம் பக்கம் பார்க்க....

### த.தே.கூ தேசியப்பட்டியல் இழுபறி

## தலா 2 1/2 வருடங்களாக நால்வருக்கு வழங்க முடிவு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவியை இரண்டரை, இரண்டரை வருடமாக நால்வருக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதில் நடைபெற்று முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களும் உள்வாங்கப்படவுள்ளதாக அறிய முடிகின்றது.

நடைபெற்று முடிந்த பாராளுமன்ற தேர்தலில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்ட தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு(இலஙகை தமிழரசுக் கட்சி) பதின் நான்கு ஆசனங்களை பெற்று பெரு வெற்றியீட்டியிருந்தது. இந்த பெரு வெற்றியின் அடிப்படையில் இரு போனஸ் ஆசனங்கள் கூட்டமைப்பு வசம் கிடைக்கப்பெற்றன.

இதில் கூட்டமைப்பு பெற்ற போனஸ் ஆசனங்களை யாருக்கு வழங்குவது 15 ஆம் பக்கம் பார்க்க....

## மகிந்தவின் ஆதரவாளர்களை ஓரம் கட்டுகிறார் மைத்திரி

### அதிரடி பதவி நீக்கல்கள் தொடர்கின்றன

(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளரான ரி.பி.எக்கநாயக்க ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழுவில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

இது தொடர்பாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் பிரதிச் செயலாளர் விஸ்வ வர்ணபால மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பிரதி பொதுச் செயலாளர் துமிந்த திசநாயகக ஆகியோர் அவருக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

இதேவேளை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிறைவேற்றுக் குழுவில் இருந்து எஸ.எம்.சந்திரசேன, குமார வெல்கம மற்றும் பவித்ரா வன்னியாராச்சி ஆகியோர் நீக்கப்பட்டுள்ளனர்.

மகிந்த ராஜபக்ஷவின் தீவிர ஆதரவாளர் 15 ஆம் பக்கம் பார்க்க....

## காத்தான்குடியில் வன்முறை

### பெண்கள், பொலிஸ் உட்பட பலர் காயம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு காத்தான்குடி பிரதேசத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக் கிழமை மாலை முதல் இரவு வரை நீடித்த தேர்தலுக்கு பின்னரான வன்முறைகளின் போது பெணகள் மற்றும் பொலிஸ் கான்ஸ்டபிள் உட்பட பலர் காயமடைந்துள்ளார்கள். இவர்களில் சிலர் அரச மருத்துவமனையில் தொடர்ந்தும் சிகிச்சை பெற்றுவரு 16 ஆம் பக்கம் பார்க்க....



போதைப்பொருள் அற்ற சமுதாயத்தை உருவாக்குவோம்
SISIL WORLD
மின்சார சேமிப்பு up to 50%
SONY SAMSUNG TCL
இல.106, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே.0212219291
இல.125, கே.கே.எஸ் வீதி, சுன்னாகம் தொ.பே.0212242335
இல.17/3, கண்டி வீதி, கிளிநொச்சி. தொ.பே.0212283755
இல.106, கண்டி வீதி, வவுனியா.
ரூ.47,999/= FAN இலவசம்
ரூ.54,999\=
ரூ.59,999\=
6,000/=
ரூ.37,999\=
(C-1889)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

நடுவுநிலை தவறா நன்மை காக்கும் உங்கள் நாளிதழ்

# நாட்டு மக்களின் சுகதுக்கங்களை அறிந்து கொள்வது தலைவனின் கடமை

## கிண்ணியாவில் ஜனாதிபதி மைத்திரி உரை

(கொழும்பு)

நாட்டு மக்களின் சுகதுக்கங்களை அறிய வேண்டியது ஒரு தலைவனின் கடமை என்பதால் அதனை அறிந்து கொள்வதற்காக இங்கு கிண்ணியாவிற்கு வந்தேன் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

நேற்று சனிக்கிழமை பகல் கிண்ணியா மத்திய கல்லூரி அப்துல் மஜீத் மண்டபத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹ்மத் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், முன்னாள் அமைச்சர் எம்.கே.ஏ.டி.எஸ்.குணவர்த்தன, பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.எம். மஹ்ரூப், இம்ரான் மஹ்ரூப், தயாகமகே, முன்னாள் முதலமைச்சர் நஜீப் ஏ மஜீத் உட்பட பலர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி மேலும் கூறியதாவது,

8 மாதங்களுக்கு முன்னர் நான் ஜனாதிபதி தேர்தல் பிரசாரத்திற்காக இங்கு வந்தேன். அப்போது இப்பகுதி முழுவதும் பெரு வெள்ளத்தினால் மூழ்கியிருந்தது. நீங்கள் மிகவும் கஷ்டத்தின் மத்தியில் வாழ்ந்து கொண்டிருந்தீர்கள். அவ்வாறான ஒரு சூழ்நிலையில் நீங்கள் உங்கள் வாக்குகள் மூலம் அமோக வெற்றியை எனக்குத் தந்தீர்கள்.

நீங்கள் அழைப்பு விடுத்து இன்று நான் இங்கு வரவில்லை. அன்று எனக்கு வாக்களித்து வெற்றியைப் பெற்றுத் தந்த உங்களை சந்தித்து உங்களது சுக துக்கங்களை அறிந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவே இங்கு நான் வந்தேன். நீங்கள் சுதந்திரமாக வாழ வேண்டும் என்பதற்காகத்தான் எனக்கு அன்று வாக்களித்தீர்கள். இன்று இங்கு வந்து உங்களை பார்க்கும் போது நீங்கள் சந்தோசமாக இருப்பதை அறிகின்றேன்.

இப்பகுதிக்குத் தேவையான அபிவிருத்திகளை தர வேண்டியது எனது பொறுப்பாகும். அதற்காக நான் உங்கள் தலைவர்களோடு இணைந்து செயற்பட்டு வருகின்றேன். அண்மையில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் நீங்கள் உங்கள் புதிய தலைவர்களை தெரிவு செய்து அனுப்பியுள்ளீர்கள். ஜனவரி 8-ம் திகதி தந்த வெற்றியை உறுதிப்படுத்தும் வகையில் பலமான பாராளுமன்றம் அமைய இந்த தேர்தலை நீங்கள் பயன்படுத்தியுள்ளீர்கள்.

நாட்டின் புதிய பிரதமராக ரணில் விக்ரமசிங்க பதவியேற்றுள்ளார். அதனை நீங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிந்திருப்பீர்கள். இனனும் சில தினங்களில் புதிய அமை ச்சரவை நியமிக்கப்படவுள்ளது. எனவே, இந்த புதிய அரசின் மூலம் நாங்கள் இந்நாட்டைக் கட்டியெழுப்ப திடசங்கற்ம் பூண்டுள்ளோம் என தெரிவித்த ஜனாதிபதி, பொதுமக்களால் முன்வைக்கப்பட்ட பிரச்சினைகளை செவி மடுத்ததுடன் அவற்றுக்குரிய தீர்வைப் பெற்றுத் தருவதாகவும். வாக்குறுதி அளித்தார். (செ12)

## ஐ.தே.கட்சி 19 சுதந்திரக்கட்சிக்கு 16

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் 19 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவிகள் வழங்கப்பட உள்ளதுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை சேர்ந்த 16 பேருக்கும் அமைச்சரவை அந்தஸ்துள்ள பதவிகள் வழங்கப்பட உள்ளன.

இதனடிப்படையில் அமைச்சரவையின் எண்ணிக்கை 35 ஆக இருக்கும் என கூறப்படுகிறது.

ஹரின் பெர்னாண்டோ, மலிக் சமரவிக்ரம, சாகல ரத்நாயக்க, வஜிர அபேவர்தன, ரவி கருணாநாயக்க, அகில விராஜ் காரியவசம ஆகியோருக்கு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சு பதவிகள் வழங்கப்பட உள்ளது.

கரு ஜயசூரிய சபாநாயகராக தெரிவு செய்யப்பட உள்ளார். இதனால், அவரது பெயர் அமைச்சர் பதவிக்கு பரிந்துரைக்கப்படவில்லை எனக் கூறப்படுகிறது.

இதனிடையே மனோகணேசன் மற்றும் திகாம்பரம் ஆகியோருக்கும் அமைச்சு பதவிகள் வழங்கப்பட உள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. (செ-12)

## ஜனாதிபதி ஆணைக்குழு அமர்வுகள் ஆரம்பம்

(கொழும்பு)

காணாமல் போனோரை கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் அமர்வுகள் நேற்று காலை களுவாஞ்சிக்குடி பிரதேச செயலகத்தில் ஆரம்பமானது.

ஆணைக்குழுவின் தலைவர் ஓய்வுபெற்ற நீதிபதி மெக்ஸ்வல் பராக்கிரம பரணகம தலைமையில் விசாரணைகள் ஆரம்பமாகின. ஆணைக்குழு உறுப்பினர்களான திருமதி மனோரமலிங்கம், திருமதி சுதர்சனா வித்யாரத்ன, ஏ.ரி.ரத்னாயக்கா, எச்.சுமணபால ஆகியோரினால் விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டன.

நேற்றைய அமர்விற்கு 701 காணாமல் போன உறவினர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டதுடன் 200 புதிய விண்ணப்பங்களும் ஏற்கப்பட்டதாக களுவாஞ்சிக்குடி பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

களுவாஞ்சிக்குடி வெல்லாவெளி ஆகிய பிரதேச செயலகப்பிரிவுகளுக்கான விசாரணைகள் இன்றும் நடைபெறவுள்ளன.

நாளை திங்கட்கிழமை வாழைச்சேனை பிரதேச செயலகத்தில் விசாரணைகள் நடைபெறவுள்ளன. (செ-12)


### காணி விற்பனைக்கு

அச்சுவேலி நவக்கிரி விளாத்தியடியில் 14 பரப்பு கல்லுக்காணி உடனடியாக விற்பனைக்கு உண்டு. இரு பகுதிகளாகவும் பிரித்துக் கொடுக்கப்படும். தரகர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு :

0768382614, 0779396578

(1562)

### SPEED

PURIFIED DRINKING WATER

சுத்தமான குடி தண்ணீர்

மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ள

மங்கல நிகழ்வுகள், விடுதிகள், ஹோல்கள் (Hall)

விசேட விலைக்கழிவு வழங்கப்படும்.



ஸ்ரீமுருகன்

தொலைத் தொடர்பகம்

303, கே.கே.எஸ் வீதி.

யாழ்ப்பாணம்.

021 222 5392

(C-1888)

### அக்ஷயா



அழுகுக்கலை பயிற்சியகம்

- அழகுக்கலை பயிற்சிகள் நடைபெறுகின்றன. சாறி பிளவுஸ் (6) பஞ்சாபி (5)
- கறுப்பு, பிறப்பிலே கறுப்பு, கறைகள், கரும்புள்ளிகள், நாட்பட்ட கறுப்பு வடுக்கள் அனைத்தையும் மாற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.
- உதட்டு கறுப்பு, கண் கருவளையம், கழுத்து கறுப்பு நீக்கும் கிறீம்
- ஒட்டிய கன்னங்களை குண்டுக் கன்னங்களாக மாற்றும் குளிசை
- தலைமுடி வளரச் செய்யும் ஆயுர்வேத எண்ணெய்
- உடல், கை, கால் கருமையான புள்ளிகள் நீக்கும் கிறீம், நாட்பட்ட பித்த வெடிப்பு, அலர்ஜிக்குடன் கூடிய பித்த வெடிப்பு நீக்கும் ஆயுர்வேத கிறீம் விற்பனைக்கு உண்டு.
- மார்பு கூட்டும், குறைக்கும், தொய்வு நீக்கும் கிறீம், குளிசை விற்பனைக்கு உண்டு.
- உடல் எடை கூட்டும், குறைக்கும் பால்மா, குளிசை, டொனிக் விற்பனைக்கு உண்டு.
- கருமை, கறுப்பு நீக்கும் வைத்நிங் பேசியல், அழகு மிளிர வைக்கும் கோல்ட் பேசியல் செய்து கொள்ளலாம்.

அக்ஷயா நாவலர் றோட்

தொ.பே :- 0772106155

221, பிறவுன் றோட் சந்தி (அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்ப்பாணம்.

(1564)

### தொழில் முயற்சியாளராக விரும்புபவரா நீங்கள்?

அமெரிக்காவை தலைமையகமாகக் கொண்டியங்கும் யூ.எஸ்.எய்ட் நிறுவனம் வடக்கு,கிழக்கு மாகாணங்களில் உள்ள உற்பத்தி கைத்தொழில் துறைகளில் தொழில் தொடங்க ஆர்வமுள்ளோருக்கு அவர்களது தொழிலுக்கான மூலதனத்தில் 50% ஆன நிதியை நன்கொடையாக வழங்க முன்வந்துள்ளது.

மேற்படி தொழில் முயற்சிகளுக்கான கருத்திட்டங்கள் (Concept paper) தயாரிக்கப்பட்டு எதிர்வரும் 30/09/2015 அன்று அல்லது அதற்கு முன்னராக அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

தொழில் முயற்சி ஒன்றுக்கு ஆகக் கூடுதலாக ஆறுகோடி ரூபாய் வரை நிதி வழங்கப்படுகிறது.

கருத்திட்டங்கள் தயாரிப்பதற்கும் மேலும், ஆலோசனைகள் பெறவும் பின்வரும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

(1561)

தயாளன் - 0779723648

### மருந்தாளர் தேவை

பிரபலமாக இயங்கிவரும் மருந்தகத்திற்கு Srilankan Medical Council இல் பதிவு செய்யப்பட்ட மருந்தாளர் தேவை.

தொடர்புகளுக்கு :- 077 303 2587

(C-1899)

### ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில் 23 - 02 - 1945



ஆண்டவன் அடியில் 18 - 08 - 2015

அமரர் வேலுப்பிள்ளை விவேகானந்தன்

திதி :- நவமி (23.08.2015)

ஆண்டுகள் ஐந்து கடந்தாலும்
ஆறாது உங்கள் பிரிவுத்துயர் அப்பா !
என்றென்றும் உங்கள் அன்பு நினைவுகளுடன்
ஆத்ம சாந்திக்காய் இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

அருந்தியார் வளவு,
அல்வாய் மேற்கு
திக்கம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(C-1897)

இன்று நடைபெறும் தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றி பெற வாழத்துக்கள்.

**What Next!**

பாடசாலை,மாவட்ட, தேசிய, சர்வதேச மட்டத்தில் நடைபெறும் சதுரங்கம், ஒலிம்பியாட், புத்தாக்கம் போட்டிகளில் வெற்றி பெற அழைக்கின்றோம்.

பயிற்சிகள் அடிப்படையிலிருந்து Chess,ஒலிம்பியாட் போட்டிக்கான கணித விஞ்ஞான பயிற்சிகள்.கணித விஞ்ஞான ஆங்கிலச்சொற்கள் உச்சரிப்பு மற்றும் மல்ரிமீடியா மூலமான விளக்கங்களுடன்.ஆங்கில மூலமான கற்றலுக்கு தயார்படுத்தல், விஞ்ஞான புத்தாக்கப்போட்டிக்கான வழிகாட்டல்கள்.

(சி-1898)

**Computer ICT, English, Sinhala**

புலமைப்பரிசிலிற்கும் மேலதிக விபரங்களிற்கும்

MCS Type s <Name> send to 772395895

யாழ் பல்கலைக்கழகத்திற்கு அருகில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழங்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய தேசிய அரசாங்கம் அமைக்கப்பட்டுள்ளது

## ராஜித சேனாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய தேசிய அரசாங்கமொன்று அமைக்கப்பட்டுள்ளதாக முன்னாள் அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதிகளுக்கு அமைய நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் தேசிய அரசாங்கம் உருவாக்கப்பட்டுள்ளது.

தேசிய அரசாங்கம் குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை புதிய விடயமல்ல. கடந்த ஜனவரிமாதம் அளிக்கப்பட்ட வாக்குறுதியேயாகும்.

இரண்டு ஆண்டு தேசிய அரசாங்கத் திட்டத்தில் நாட்டை புதிய அபிவிருத்திப் பாதைக்கு இட்டுச்செல்ல முடியும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் கூடிய ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மத்திய செயற்குழு தேசிய அரசாங்கம் அமைப்பதற்கு இணங்கியிருந்தது.

இந்த தீர்மானம் கட்சி எடுத்த மிக முக்கியமான தீர்மானமாக கருதப்பட வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

தேசிய அரசாங்கம் தொடர்பில் சிங்கள ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த போது அவர் இதனைத் தெரிவித்தார். (இ-7)



## முன்னாள் அமைச்சர் விமலிடம் ஐந்து மணி நேரம் விசாரணை

தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான விமல் வீரவன்சவிடம் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நேற்று முன்தினம் ஐந்து மணி நேரம் விசாரணை நடத்தியுள்ளனர்.

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விமல் வீரவன்சவுக்கு அனுப்பியிருந்த அறிவித்தலுக்கு அமைவாக நேற்று முன்தினம் குறித்த விசாரணைப் பிரிவுக்கு சென்ற விமல் வீரவன்ச விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

விமல் வீரவன்சவுக்கு சொந்தமான சொத்துக்கள் தொடர்பாகவே இவ்விசாரணைகள் நடத்தப்பட்டுள்ளன.

கடந்த வியாழக்கிழமை விமல் வீரவன்சவின் பாரியார் சஷி வீரவன்சவிடம் நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினர் விசாரணை நடத்தியிருந்தனர். இதேவேளை நேற்று முன்தினம் விசாரணை முடிந்த பின்னர் வெளியில் வந்த வீரவன்ச ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையில், தான் உழைத்த சொத்துக்கள் தொடர்பில் ஐந்து மணிநேரம் தன்னிடம் விசாரணை நடத்தப்பட்டதாக தெரிவித்தார். (இ-7)

# ஜனாதிபதி, பிரதமர் தலைமையில் சகல பிரச்சினைகளுக்கும் தீர்வு!

## மனோ கணேசன் நம்பிக்கை

(கொழும்பு)

**ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் சிறந்த அனுபவமுள்ள தலைவர்கள். அவர்களது தலைமைத்துவத்தின் கீழ் நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காணப்படும் என்ற நம்பிக்கை எமக்குள்ளது என தமிழர் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.**

பிரதமரின் சத்தியப் பிரமாண வைபவத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்த போதே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

இன்று இரண்டு முக்கிய நிகழ்வுகள் சிறப்பாக இடம் பெற்றுள்ளன. நாடும் சர்வதேசமும் ஏற்றுக் கொண்ட ஒரு தலைவராகவே ரணில் விக்கிரமசிங்கவைப் பார்க்க முடியும்.

அதேவேளை இலங்கையிலுள்ள இரண்டு பிரதான கட்சிகள் நாட்டின் எதிர்கால நலனுக்காக ஒன்றிணைந்துள்ளன. இதன் மூலம் நாட்டின் புதிய வரலாறு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நாம் ஜனவரி 8 இல் நல்லாட்சியைப் பெற்றுக் கொண்டுள்ளோம். அத்தோடு இப்போது அபிவிருத்தி யுகம் ஆரம்பமாகியுள்ளது. நல்லாட்சியுடன் அபிவிருத்தி ஏற்பட்டால் தான் மக்களுக்கு அதன் பயனைகளை அனுபவிக்க முடியும.

மைத்திரிபால சிறிசேனவும் ரணில் விக்கிரமசிங்கவும் இரு சிறந்த தலைவர்கள். அவர்களின் தலைமைத்துவத்தின் கீழ் நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண முடியும் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

அரசியல் தீர்மானங்களை தொலைபேசி மூலம் எடுக்கின்ற யுகம் முடிவடைந்து விட்டது. தமது செல்வாக்குகளைப் பயன்படுத்தி பொலிஸ்மா அதிபருக்கு தமது அதிகாரங்களைப் பிரயோகிக்கும் காலம் இனி இந்த நாட்டில் கிடையாது.

முறையான விசாரணைகள் நடத்தப்பட்டு நீதிமன்றம் செல்லும் நடவடிக்கைகளே இனி தொடரும்.

கொழும்பு மாவட்டத்தைப் பொறுத்தவரை இம்முறை ஒரு கடுமையான போட்டி இருந்தது. நாட்டின் ஏனைய மாவட்டங்களோடு ஒப்பிடுகையில் இங்குதான் பிரபலமான அமைச்சர்கள் எல்லோரும் போட்டியிட்டார்கள். அவர்களுடன் போட்டி போட வேண்டிய நிலை எமக்கிருந்தது.

நான் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் என்ற வகையில் ஏனைய மாவட்டங்களுக்கும் செல்ல வேண்டிய தேவை எனக்கு ஏற்பட்டது. அதனால் என்னால் இங்கு காலத்தை செலவிட முடியாதிருந்தது. எனினும் மக்கள் என்னை வெற்றி பெற வைத்துள்ளனர். அதற்காக எனது மனமார்ந்த நன்றிகளை அனைத்து மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)



ஐக்கிய அமெரிக்கா, இத்தாலி மற்றும் நெதர்லாந்து ஆகிய நாடுகளுக்கான மூன்று புதிய தூதுவர்கள் தங்களது நியமனக் கடிதங்களை ஜனாதிபதி செயலகத்தில் வைத்து நேற்று முன்தினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கையளித்த நிகழ்வின் போது...

## சு.கவின் பத்து உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பத்து உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் கீழ் இம்முறை நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றியீட்டிய பத்து உறுப்பினர்களுககு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தப்படவுள்ளது.

கடந்த சில மாதங்களாக கட்சியின் தீர்மானங்களுக்கு எதிராக செயற்பட்டமை, கட்சியின் தீர்மானங்கள் இணக்கப்பாடுகளை ஊடகங்களில் வமர்சனம் செய்தமை ஆகிய குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் விசாரணை நடத்தப்படவுள்ளது.

விசாரணைகளுக்காக ஊடக நிறுவனங்களிடமிருந்து ஒளி ஒலிப்பதிவு நாடாக்களைப் பெற்றுக்கொள்ளல் மற்றும் கட்சியை விமர்சனம் செய்தமை குறித்த தகவல்களை திரட்டுதல் ஆகிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

விரைவில் இந்த உறுப்பினர்களுக்கு எதிராக ஒழுக்காற்று விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி தெரிவித்துள்ளது.(இ-7)

## இராணுவத் தளபதிக்கு சேவை நீடிப்பு



(கொழும்பு)

இலங்கையின் இராணுவத் தளபதி லெப்டினன் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வாவிற்கு சேவை நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஓராண்டு கால சேவை நீடிப்பை வழங்க ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நடவடிக்கை எடுத்துள்ளார்.

லெப்டினன் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வாவிற்கு நேற்றுடன் 55 வயது பூர்த்தியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்றுடன் அவர் ஓய்வு பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. எனினும், ஜனாதிபதியின் தீர்மானத்திற்கு அமைய அவரது சேவைக் காலம் மேலும் ஒரு ஆண்டுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி லெப்டினன் ஜெனரல் கிரிஷாந்த டி சில்வா இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார்.

கிரிஷாந்த டி சில்வா, இராணுவ பொறியியற் படைப் பிரிவைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## 72 வேட்பாளர்கள் தேர்தல் பிரசாரத்திற்காக கோடிக்கணக்கில் பணத்தை செலவிட்டுள்ளனர்

நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்ட 72 வேட்பாளர்கள் பிரசாரத்திற்காக கோடிக் கணக்கான ரூபா பணத்தை செலவிட்டுள்ளனர்.

ஊடகங்களில் பிரசாரம் செய்வதற்காக இவ்வாறு பணம் செலவீடப்பட்டுள்ளது.

இலத்திரனியல் மற்றும் அச்சு ஊடகங்களில் தங்களது தேர்தல் பிரசாரத்தை மேற்கொள்ள மட்டும் 50 மில்லியனுக்கும் அதிகளவு பணத்தை இந்த வேட்பாளர்கள் செலவிட்டுள்ளனர்.

ஊடகங்களில் செய்த பிரசாரங்களுக்காக இந்த வேட்பாளர்களில் பத்து பேர் சுமார் 100 முதல 200 மில்லியன் ரூபா பணத்தை செலவிட்டுள்ளனர்.

ஊடகப் பிரசாரங்களைத் தவிர்ந்த ஏனைய பிரசாரங்களுக்காகவும் பாரியளவு பணம் செலவிடப்பட்டுள்ளது.

தேர்தல் கண்காணிப்பு அமைப்புக்களும் பல்கலைக் கழக மாணவர்களும் இணைந்து செய்த ஆய்வுகளின் மூலம் சில வேட்பாளர்கள் பிரசாரத்திற்காக பாரியளவு பணத்தை செலவிட்டமை அம்பலமாகியுள்ளது.

இந்த ஆய்வு அறிக்கை விரைவில் வெளியிடப்படவுள்ளது. இதற்கு மேலதிமாக பிரதான அரசியல் கட்சிகளுக்கு எவ்வாறு பணம் கிடைத்தது எவ்வாறு செலவிடப்பட்டது என்பது குறித்த தகவல்களும் வெளியிப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துருக்கி இராணுவத் தாக்குதலில் 771 குர்து படையினர் உயிரிழப்பு

## ஒரு மாத காலத்தில்

(அங்காரா)

**துருக்கி இராணுவம், குர்து கிளர்ச்சிப் படையினர் மீது நடத்திய தாக்குதலில் கடந்த ஒரு மாதத்தில் 771 பேர் உயிரிழந்ததாக அரச ஊடகம் தெரிவித்துள்ளது.**



துருக்கி அரசு கடந்த ஒரு மாத காலத்தில் "தீவிரவாதத்துக்கு எதிரான போர்" என்று பலமுறை விமானப் படைத் தாக்குதல் நடத்தியிருந்தாலும், 3 முறை மட்டுமே ஐ.எஸ். ஐ.எஸ். தீவிரவாதிகளின் நிலைகள் மீது தாக்கியது.

மீதித் தாக்குதல்கள் அனைத்தையும் குர்து படையினரின் நிலைகள் மீது மட்டுமே மேற் கொண்டு வருகிறது.

குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி என்றழைக்கப்படும், அரசுக்கு எதிரான கிளர்ச்சியாளர்கள் ஈராக் நாட்டில் அமைத்துள்ள முகாம்கள் மீது துருக்கி விமானப் படை கடந்த ஒரு மாதமாகத் தாக்குதல் நடத்தியது. அந்தத் தாக்குதலில் சுமார் 430 குர்து படையினர் உயிரிழந்தனர்.

மேலும் தென்கிழக்கு துருக்கியில் உள்ள குர்திஸ்தான் கிளர்ச்சியாளர்கள் மீது இராணுவம் மேற்கொண்ட தரை வழி தாக்குதலில் சுமார் 260 பேர் கொல்லப்பட்டனர் என்று அரசு நடத்தும் செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், துருக்கி அரசு ஐ.எஸ் ஐ.எஸ் தீவிரவாதிகளுடன் சேர்ந்து தங்களைத் தாக்குவதாக குர்து படையினர் குற்றஞ்சாட்டி வருகின்றனர். (இ-7)

# திருச்சியில் காங்கிரஸ் அலுவலகம் மீது தாக்குதல்; அ.தி.மு.க.எம்.பி.உட்பட 170பேர் கைதாகி விடுதலை



தமிழ்நாடு காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ்.இளங்கோவனைக் கண்டித்து, திருச்சியில் காங்கிரஸ் மாவட்ட அலுவலகம் மீது தாக்குதலில் ஈடுபட்ட எம்.பி குமார் மற்றும 8 பெண்கள் உட்பட அதிமுக வினர் 170 பேர் கைது செய்யப்பட்டனர். பின்னர் மாலையில் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர்.

ஈ.வி.கே.எஸ்.இளங்கோவன் அவதூறாகப் பேசியதைக் கண்டித்து திருச்சியில் நேற்று முன்தினம் காங்கிரஸ் மாவட்ட அலுவலகமான அருணாச்சல மன்றத்தை, அதிமுக இளைஞர்- இளம்பெண்கள் பாசறையினர் முற்றுகையிடப் போவதாக அறிவிக்கப்பட்டது.

இதையடுத்து, அருணாச்சல மன்றம் பகுதியில் மாநகர காவல் துணை ஆணையர் சரோஜ்குமார் தாகூர் தலைமையில் பொலிஸார் குவிக்கப்பட்டனர்.

அதிமுக இளைஞர்- இளம் பெண்கள் பாசறை அமைப்பினர் திருசசி எம்.பி .குமார் தலைமையில் அருணாச்சல மன்றம் நோக்கி, இளங்கோவனைக் கண்டித்து முழகங்களை எழுப்பியவாறு பேரணியாக சென்றனர். அவர்கள் திடீரென காங்கிரஸ் அலுவலகம் மீது கற்கள், செங்கல், முட்டை, தக்காளி, செருப்பு, குச்சிகள், மது போத்தல் போன்றவற்றை வீசினர்.

இதில், காங்கிரஸ் அலுவலக கண்ணாடிகள் உடைந்தன. கட்சி அலுவலகத்தில் வெளியே வைக்கப்பட்டிருந்த பிளக்ஸ் பனரையும் அவர்கள் கிழித்தெறிந்தனர்.

இந்நிலையில், காங்கிரஸ் அலுவலகத்துக்குள் அதிமுகவினர் நுழைந்துவிடாமல் பொலிஸார் தடுத்தனர். மேலும் போராட்டத்தில் ஈடுபட்ட எம்.பி.குமார் மற்றும் 8 பெண்கள் உட்பட அதிமுகவினர் 170 பேர் கைது செய்யப்பட்டனர்.


### காங்கிரஸார் எதிர் போராட்டம்

போராட்டத்தின்போது, அங்கு வந்த காங்கிரஸ் நிர்வாகிகள் சட்டத்தரணி சரவணன், வில்ஸ் முத்துக்குமார், ஜிஎம்ஜி மகேந்திரன், ஜெகதீஸ்வரி உள்ளிட்ட சிலர், அதிமுகவினரைக் கண்டித்து முழக்கங்களை எழுப்பியவாறு கம்புகளுடன் அவர்களை நோக்கிச் சென்றனர்.பொலிஸார் அவர்களை தடுத்து நிறுத்தினர்.

தகவலறிந்து காங்கிரஸ் மாவட்டத் தலைவர்கள் ஆர்.சி.பாபு, ஜெயப் பிரகாஷ் அங்கு வந்தனர். எம்.பி குமாரை கைது செய்ய வலியுறுத்தி முழக்கங்களை அவர்கள் எழுப்பினர். மேலும் வீதி மறியலில் ஈடுபட முயன்ற அவர்களை பொலிஸார் சமாதானம் செய்தனர்.

தாக்குதல் தொடர்பாக எம்பி குமார் உள்ளிட்ட அதிமுகவினர் மீது நடவடிக்கை எடுக்கக் கோரி கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஆர்.சி.பாபு புகார் கொடுத்தார். மேலும், குமாரை எம்.பி பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்ய வேண்டும் என்று மக்களவை சபாநாயகர் சுமித்ரா மகாஜனுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.(இ-7)

# அதிக மதிப்பெண்கள் பெற்ற மலாலா



பாகிஸ்தானில் தலிபான் தீவிரவாதிகளின் ரூபத்தில் எமனை நேருக்குநேர் சந்தித்து உயிர் பிழைத்த மலாலா யூசுப்சாய், அறிவியல், கணிதம் ஆகிய பாடங்களில் "ஏ* மற்றும் ஏ கிரேட்" மதிப்பெண்களை பெற்றுள்ளார்.

பெண்கள் கல்வி கற்கக்கூடாது என்பதை வலியுறுத்திய தலிபான்களின் அடக்குமுறையை எதிர்த்து போராடிய 17 வயது பெண்ணான மலாலா துப்பாக்கியால் சுடப்பட்டார். மரணத்தின் விளிம்பு வரை சென்ற அவர், வைத்தியர்களின் தீவிர முயற்சிக்கு பின் உயிர் பிழைத்து, பெண்களின் கல்விக்காக போராடி வருகிறார்.

பயங்கரவாதிகளிடமிருந்து துப்பாக்கிக்குண்டுகளை பரிசாக பெற்ற போதும், துளியும் அச்சமின்றி தொடர்ச்சியாக பெண் கல்விக்காக குரல் கொடுத்த மலாலா 2014ஆம் ஆண்டு நோபல் பரிசை வென்றார்.

லண்டனில் உள்ள பாகிஸ்தான் தூதரக பாடசாலையில் மலாலாவின் தந்தைக்கு வேலை வழங்க முன்னாள் பாகிஸ்தான் பிரதமர் ஆசிப் அலி சர்தாரி உத்தரவிட்டார். இதையடுத்து, அவர்களின் குடும்பம் இங்கிலாந்தில் உள்ள பர்மிங்ஹாம் நகரில் வசித்து வருகின்றது.

இங்குள்ள பாடசாலையில் மேல்நிலைக் கல்வி பயின்றுவரும் மலாலா, கணிதம், இயற்பியல், தாவரவியல், வேதியியல் ஆகிய பாடங்களில் மதிப்பெண் தரவரிசையில் ஆறு "ஏ* கிரேட்" மற்றும் நான்கு "ஏ கிரேட்"நிலைகளைப் பெறறுள்ளதாக இங்கிலாந்து ஊடகங்கள் தெரிவித்துள்ளன. (இ-7)

# அமெரிக்க குண்டுவீச்சில் ஐ.எஸ். அமைப்பின் துணைத்தலைவர் பலி

அமெரிக்க போர் விமானங்களின் குண்டுவீச்சில் ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தின் 2-ம் நிலை தலைவர்கொல்லப்பட்டதாக வெள்ளை மாளிகை தெரிவித்துள்ளது.

சிரியா மற்றும் ஈராக்கின் பகுதிகளை தங்களது கட்டுப்பாட்டில் வைத்து தனி இஸ்லாமிய நாடாக அறிவித்த ஐ.எஸ். பயங்கரவாதிகளுக்கு எதிராக அமெரிக்கா மற்றும் அதன் சர்வதேச நட்பு நாடுகளும் குண்டு வீசி தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஈராக்கில் மொசூல் அருகே கடந்த 18ஆம் திகதி அமெரிக்க போர் விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்'தின. அப்போது ஐ.எஸ். இயக்க தலைவர்கள் சென்று கொண்டிருந்த வாகனங்கள் மீது அமெரிக்க விமானங்கள் குண்டு வீசியதில் வாகனத்தில் இருந்த ஐ.எஸ். தீவிரவாத இயக்கத்தின் இரண்டாம் தலைவர் பாதில் அகமது அல்-ஹயாலி கொல்லப்பட்டதாக அமெரிக்க வெள்ளை மாளிகை அறிக்கை வெளியிட்டுள்ளது.

குண்டு வீசப்பட்ட வாகனத்தில் பயங்கர வெடிபொருட்கள் இருந்ததாகவும் தொடர்ந்து நடத்தப்பட்ட தாக்குதலில் அபு அப்துல்லா என்ற ஐ.எஸ்ஸின் ஊடக தொடர்பாளரும் கொல்லப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

கொல்லப்பட்ட பாதில் அகமது, ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தின் 2வது தலைவராக இருந்தார். ஈராக், சிரியா, லெபனானில் தாக்குதல் நடத்தும் பொறுப்பை இவர் வகித்து வந்தார். மேலும், அந்த இயக்கத்தின நிதி நிர்வாகம், தகவல் தொடர்பு, ஆயுத கொள்முதல் உள்ளிட்ட பணிகளையும் செய்து வந்தார். ஐ.எஸ். இயக்கத்தின் முதன்மை தலைவர் அபு பக்கர் அல்-பக்தாதி ஆவார்.

பாதில் அகமது கொல்லப்பட்டதால் ஈராக் மற்றும் சிரியாவில் அமெரிக்கப் படைகளுக்கு முன்னேற்றச் சூழல் ஏற்பட்டுள்ளது. (இ-7)

# தெற்கு ஏமனில் கடும் மோதல்; 58 அப்பாவி பொதுமக்கள் பலி



ஏமனின் அரசு ஆதரவுப் படையினருக்கும், கிளர்ச்சி படையினருக்கும் இடையே நடைபெற்று வரும் சண்டையில், அப்பாவி பொது மகக்கள் 58 பேர் உயிரிழந்ததாக மருத்துவ ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

தெற்கு ஏமனில் உள்ள நகரத்தை கைப்பற்றுவதற்காக சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படை மற்றும் கிளர்ச்சி படைக்கும் இடையே நடைபெற்ற சண்டையின் போது 58 அப்பாவி பொது மக்கள் பலியானதாகவும், 50-கதும்மேற்பட்டவர்கள் காயம் அடைந்துள்ளதாகவும் அங்கு பணியில் இருக்கும் மருத்துவ ஊழியர்கள் தெரிவித்துள்ளனர். கடந்த மார்ச் மாதத்தில் இருந்து நடந்துவரும் உள்நாட்டு போரில் கிடடத்தட்ட 4,300 பேருக்கும் அதிகமானோர் இதுவரை பலியாகியுள்ளனர். 21 மில்லியன் மக்கள் புலம் பெயர்ந்துள்ளனர்.(இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல் வழக்குகளிலிருந்து என்னைக் காப்பாற்றுங்கள்

## ஜனாதிபதியிடம் மகிந்த கெஞ்சியதாக இந்திய ஊடகம் கிண்டல்

**(கொழும்பு)**

**ஊழல் வழக்குகளிலிருந்து தன் னைக் காப்பாற்றுமாறு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கெஞ்சியதாக இந்திய ஊடகங்கள் கிண்டலடித்துள்ளன.**

இது தொடர்பாக இந்தியாவின் தமிழ் நாட்டிலிருந்து வெளிவரும் மாலைமலர் பத்திரிகையின் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையில் கடந்த ஜனவரி மாதம் நடந்த ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட மகிந்த ராஜபக்ஷ தனது அமைச்சரவையில் சுகாதார துறை அமைச்சர் ஆக இருந்த மைத்திரிபால சிறிசேனவிடம் தோல்வி அடைந்தார்.

அதை தொடர்ந்து அவர் மீதும் அவரது மனைவி, மகன்கள் மற்றும் தம்பிகள் மீது ஊழல், கொலை மற்றும் மோசடி தொடர்பான வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதிகார துஷ்பிரயோக வழக்குகளும் போடப்பட்டுள்ளன.

எனவே, அவற்றில் இருந்து தப்பிக்க அண்மையில் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று பிரதமராகி விடலாம் என கனவு கண்டார். அதுவும் இந்த தேர்தலில் தகர்ந்தது. அவரது கட்சி தேர்தலில் தோல்வி அடைந்தது. அதை தொடர்ந்து மீண்டும் அவர் மீதும், குடும்பத்தினர் மீதும் போடப்பட்டுள்ள வழக்கு விசாரணையின் பிடி இறுக தொடங்கியுள்ளது.

இதனால் கடும் அதிர்ச்சி அடைந்த மகிந்த ராஜபக்ஷ, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை தொலைபேசியில் தொடர்பு கொண்டு பேசினார.

என்மீதும், குடும்பத்தினர் மீதும் சுமத்தப்பட்டுள்ள கொலை, ஊழல், மோசடி தொடர்பாக தற்போது நடைபெற்று வரும் விசாரணையை தடுத்து நிறுத்துங்கள் என கெஞ்சினார். மேலும் ஜனாதிபதி தலையிட்டு தடுத்து நிறுத்தினால் பாராளுமன்றத்தில் பின்வரிசையில் அமர்ந்து அமைதியாக இருக்க தயார் என்றும் கூறினார்.

ஆனால், அதற்கான சந்தர்ப்பம் தற்போது இல்லை என மைத்திரி அவருக்கு பதிலளித்துள்ளார்.

மேலும், பாராளுமன்ற தேர்தலில் போட்டியிடுவதற்கு முன்னர், இது குறித்து சிந்தித்து இருக்கலாம் என்று அவர் தெரிவித்ததாக தகவல்கள் கூறுகின்றன.

இக்கோரிக்கையை வலியுறுத்தி ஜனாதிப்திக்கு 11 தடவைகள் மகிந்த ராஜபக்ஷ தொலைபேசி எடுத்து பேசியுள்ளார்.

இதற்கிடையே எதிர்க்கட்சி தலைவர் பதவியை ஏற்க மகிந்த ராஜபக்ஷ தயாராக இருப்பதாக அவரது ஆதரவாளரும், முன்னாள் அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார். இந்த ஆட்சியின் ஆயுட்காலம் விரைவில் முடிந்து விடும் என்றும் அவர் ஆருடம் கூறியுள்ளார்.

இந்த ஆட்சியை தேசிய அரசாங்கம் என கூற முடியாது. ஐக்கிய தேசிய கட்சியின் வாலாக ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி இணைக்கப்பட்டுள்ளது. இவர்களால் நாட்டின் பிரச்சினையை தீர்த்து வைக்க முடியாது. எனவே இந்த ஆட்சி விரைவில் வீழ்ச்சியடையும். பின்னர் தமிழ் தேசிய கூட்டமைப்பின் ஆதரவை பெற முயற்சித்தாலும் அதுவும் கைகூட போவதில்லை என்றும் அவர் கூறியுள்ளதாக குறித்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (இ-7)

# ஏற்றுமதி வருமானம் பாரியளவில் வீழ்ச்சி

இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஜூன் மாதம் எடுக்கப்பட்ட ஆய்வின் பிரகாரம் சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அளவில் இலங்கையின் ஏற்றுமதி வருமானத்தில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

இலங்கையின் இயந்திரவியல், விவசாய, கனிய வள ஏற்றுமதிப் பொருட்களின் ஏற்றுமதி குறைவு காரணமாகவே இந்த வருமான வீழ்ச்சி ஏற்பட்டிருப்பதாக புள்ளி விபரவியல் திணைக்கள அறிக்கையிலிருந்து தெரிய வந்துளளது.

கடந்த ஜூன் மாதம் இயந்திர வியல் உற்பத்திகளின் ஏற்றுமதி 1.6 வீதத்தாலும், விவசாய உற்பத்திகளின் ஏற்றுமதி 11. 5 வீதத்தாலும், கனியவள ஏற்றுமதி 1.6 வீதத்தாலும் வீழ்ச்சியடைந்திருப்பதாக மத்திய வங்கி அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்தது.

இவ்வாறான விடயங்கள் காரணமாக இலங்கையின் ஏற்றுமதி வருமானம் பாதிக்கப்பட்டு, வீழ்ச்சியுற்றிருப்பதாகவும் மத்திய வங்கியின் அறிக்கையில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. (இ-7)

# வட மாகாண கல்வி அமைச்சின் செயலாளரின் வாழ்த்துச்செய்தி

(யாழ்ப்பாணம்)

இன்றைய தினம் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் அன்புமிக்க மாணவர்களாகிய வடமாகாணத்தைச் சேர்ந்த 19,061 பேரும் முதன் முதலாக பொதுப் பரீட்சை ஒன்றுக்கு ஆயத்தமாகி இன்று உங்கள் திறமைகளைப் பரீட்சையினூடாகப் வெளிப்படுத்துவதற்கு தயாராகியுள்ளீர்கள்.

இந்நிலையில் உங்களின் இலட்சியம் வெற்றி பெற்று உங்களுக்கும் உங்களை பெற்றெடுத்த பெற்றோருக்கும் உங்களுக்கு கல்வி அறிவு புகட்டிய ஆசிரியர்களுக்கும் பாடசாலைக்கும் மற்றும் சமூகத்திற்கும் பெருமையினை பெற்றுத் தருவதற்கு அனைவரும் சிறப்பான சித்திகளைப் பெற வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து வாழ்த்தி நிற்கின்றேன் என வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளை யாட்டுத் துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் அறிவித்துள்ளார்.

(இ


# மரண அறிவித்தல்

## அமரர் சிவனேஸ்வரி பிறேமச்சந்திரன்



சிந்தாமணிப்பிள்ளையார் கோவிலடி வவுனியாவைப் பிறப்பிடமாகவும் 132 Dyson Road, Edmonton, london N 18 2DJ UK வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி. சிவனேஸ்வரி பிறேமச்சந்திரன் லண்டனில் 17.08.2015 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் பொன்னாவளை, களபூமி காரைநகரைச் சேர்ந்த ஆறுமுகம் பிறேமச்சந்திரனின் அன்பு மனைவியும், பாலசுப்பிரமணியம் பரமேஸ்வரி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற ஆறுமுகம் (இளைப்பாறிய ஆசிரியர்) மற்றும் இந்திராணி தம்பதியரின் மருமகளும் மிதுஷன், மிதுசாலினி, திவ்வியா, சுபேக்கா, சினேக்கா, துர்க்கா, அனுஷன் ஆகியோரின் அன்புத் தாயாரும், மோகன், தயாளன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், தபோநிதி, திருலோகநாயகி, தவச்செல்வி, யோகேஸ்வரன் (லண்டன்), யோகலிங்கம் (ஆசிரியர்) மற்றும் பிறேமளா, சாமினி ஆகியோரின் மைத்துனியும், சற்குணராசா, காலஞ்சென்ற சிவபாலசுந்தரம் மற்றும் வரதராசா, விஜயகுமாரி, தர்சினி ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 27.08.2015, வியாழக்கிழமை அன்று முற்பகல் 10மணியளவில் லண்டனிலுள்ள St.Marylebone Crematoroum, East End Road, London, N2 SE U.K இல்நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு:பிறேமச்சந்திரன் -
Viber- 0094770590178
தொ.பே.இல. 00447845164516
இந்திராணி தொ.பே.இல. 0094212224739

தகவல்:
குடும்பத்தினர்.
53/13, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி.


# ராசி பலன்

23.08.2015
(ஆவணி 06, ஞாயிற்றுக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.04 மணிக்கு
அட்டமி முற்பகல் 9.23 மணிவரை
அனுசம் முன்னிரவு 7.30 மணிவரை
இராகுகாலம் 4.35-6.05 மணிவரை
சுபநேரம் 9.05-10.35 மணிவரை

வளவன்

| | | | |
|---|---|---|---|
| கேது | | | |
| | கிரகநிலை<br>சந்திராஷ்டமம்<br>அச்சுவினி, பரணி<br>சம நோக்கு நாள் | | செவ் |
| | | | சூரி, குரு, சுக் |
| | சந் | சனி | ராகு புத |

**மேடம்:** கணபதியை வழிபட்டு காரியம் தொடங்க வேண்டிய நாள், மற்றவர்களுக்காக பொறுப்புச் சொல்வதைத் தவிர்ப்பது நல்லது, உடல்நலனில் கவனம் தேவை.

**இடபம்:** குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும், நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் ஏற்படும், கௌரவமான நாள்.

**மிதுனம்:** அடுத்தவர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், ஆரோக்கியம் சீராகும், பழைய கடனில் ஒரு பகுதியை கொடுத்து மகிழும் வாய்ப்புண்டு, போசன சுகமுண்டு.

**கடகம்:** தன்னம்பிக்கை துளிர்விடும் நாள், பிரபலமானவர்களின் சந்திப்புகள் இடம்பெறலாம், உதிரி வருமானங்கள் வந்து சேரலாம், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**சிம்மம்:** உறவினர்கள் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கப் பெறுவீர்கள், உஷ்ண சம்பந்தமான ரோகங்கள் ஏற்படலாம், மறக்க முடியாத சம்பவங்கள் இடம்பெறலாம்.

**கன்னி:** உயர்வான சிந்தனைகள் மனதில் தோன்றும், எப்படி நடக்குமோவென நினைத்த காரியம் நல்லபடியாக நடைபெறும், வழிபாடு முன்னேற்றம் தரும், பயணங்கள் கைகூடும்.

**துலாம்:** புத்தி சாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும், தொலைபேசித் தகவல்கள் தொழில் வளர்ச்சிக்கு உறுதுணை புரியும், புதிய பாதை புலப்படும் நாள், சிந்தனை மிகுதியான நாள்.

**விருச்சிகம்:** உறவினர் பகை அகலும், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சுப காரியப் பேச்சுக்கள் நல்ல முடிவுக்கு வரும், அரசியல்வாதிகளால் அனுகூலமுண்டு.

**தனுசு:** கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது, தொழில் வளர்ச்சிக்கு அனுபவம் மிக்கவர்களிடம் ஆலோசனை கேட்பீர்கள், சுபகாரியச் செலவுகள் அதிகரிக்கும் நாள்.

**மகரம்:** பயணங்கள் கைகூடுவதற்கான வாய்ப்புண்டு, வியக்கும் செய்திகள் வீடு வந்து சேரலாம், பணப்பழக்கம் அதிகரிக்கும் நாள், பொதுவாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும்.

**கும்பம்:** அருமையான நாள், ஆதரவு தருபவர்களின் எண்ணிக்கை கூடும், புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும், மனமகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மீனம்:** தடைகள் விலகி தனவரவுகள் கிடைக்கும் நாள், உடல்நலம் சீராகி உற்சாகப்படுத்தும், பயணங்களால் பலனுண்டு, புதிய திட்டங்கள் எளிதில் கைகூடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக வங்கியின் நிதியுதவியுடன் விபத்து அவசர சிகிச்சைப் பிரிவு

## யாழ்.போதனா வைத்தியசாலையில் புதிதாக அமைக்கப்படவுள்ளது

(யாழ்ப்பாணம்)

**யாழ்.போதனா வைத்தியசாலைக்கு உலக வங்கியின் நிதியுதவியுடன் புதிய விபத்து அவசர சிகிச்சை பிரிவு ஒன்று அமைக்கப்படவுள்ளதாக யாழ்.போதனா வைத்தியசாலையின் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார். இப்பிரிவினை அமைப்பதற்கான பணிகள் எதிர்வரும் சிலமாதங்களிற்குள் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.**

யாழ்.போதனா வைத்திய சாலையில் தற்போது விபத்து அவசர சிகிச்சை பிரிவு விபத்து விடுதியான 26 ஆம் விடுதியிலேயே இயங்கி வருகின்றது.

பெரும் இடப்பற்றாக்குறை மத்தியில் இயங்கும் இந்த பிரிவு விஸ்தரிக்கப்பட வேண்டிய தேவை உள்ளது. வைத்தியசாலை ஒன்றுக்கு பிரதான மற்றும் அதிகளவு நோயாளர்கள் தினம் தினம் அனுமதிக்கப்படும் பிரிவாக இந்த விபத்து பிரிவே காணப்படுகின்றது.

ஆகையினால் ஒரு சிறிய இடத்திற்குள் இயங்கும் விபத்து பிரிவினை வேறொரு இடத்தில் புதிதாக அமைப்பதற்கு முடிவெடுத்துள்ளோம். அதி தீவிர விபத்து சிகிச்சை பிரிவினை அமைப்பதற்கு நிதியுதவி வழங்க உலக வங்கி முன்வந்துள்ளது.

உலக வங்கி குறித்த பிரிவிற்கு இரு மாடி கட்டடம் அமைப்பதற்கு தேவையான நிதியுதவியினையே வழங்க முன்வந்துள்ளது.

எனினும் யாழ்.போதானா வைத்தியசாலைக்கு இடவசதி என்பது பெரும் பற்றாக்குறையாக காணப்படுவதனாலும் மேலும் பல பிரிவுகள் விடுதிகள் தேவைப்படுவதனாலும் உலக வங்கியின் நிதியுதவியில் அமைக்கப்படவுள்ள கட்டடத்திற்கான அடிக்கல்லை இரண்டு மாடிகளுக்கு என்றில்லாமல் ஆறு மாடி என்றவகையில் நாட்டியுள்ளோம்.

இதில் இரண்டு மாடிக்கான நிதியுதவியினை உலக வங்கியும் ஏனைய நான்கு மாடிக்கான நிதியுதவியினை சுகாதார அமைச்சிடமிருந்து பெறுவதற்கு தீர்மானித்துள்ளோம். உலக வங்கி இத்திட்டத்திற்கு 300 மில்லியன் ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கு மேலதிகமான நிதியினை சுகாதார அமைச்சே செலவு செய்யவுள்ளது.

இச்சிகிச்சை பிரிவு தனியாக அமைக்கப்படுவதன் மூலம் நோயாளர்கள் எதிர்நோக்கும் காலதாமதம், இட நெரிசல் உட்பட பல பிரச்சினைகளை நிவர்த்தி செய்ய முடியும். மேலும் தற்போதுள்ள விபத்து விடுதியினை விஸ்தரித்து அதிக நோயாளர்களை அனுமதிக்க கூடிய வகையில் அமைத்து கொள்ள முடியும்.

இதேவேளை யாழ்.போதனா வைத்தியசாலையில் தற்போது உள்ள விபத்து சிகிச்சை விடுதியில் இடப்பற்றாக்குறை காரணத்தினால் நிலத்தில் பாய் விரித்து தங்கியிருந்து சிகிச்சை பெற வேண்டிய நிலையும் காணப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ள நோயாளர்கள். மழைகாலங்களில் இவ்வாறு நிலத்தில் இருப்பதனால் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளனர். (இ-4)

யாழ்.செய்திகள்



வடக்கு. மாகாணத்தில் புதிதாக நியமனம் பெற்ற கணித,விஞ்ஞான,ஆங்கில மற்றும் தகவல் தொழில்நுட்ப பாட பட்டதாரி ஆசிரியர்களுக்கான 2வார கால திசை கோட்படுத்தல் பயிற்சிப்பட்டறை யாழ்ப்பாணம்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெற்று வருகின்றது. (படங்கள்:-பொ.சோபிகா)

## இரு சடலங்கள் நேற்று மீட்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தின் இருவேறு இடங்களில் இருந்து இருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் எரிந்த நிலையிலும் மற்றொருவர் நீரில் மூழ்கிய நிலையிலுமே உயிரிழந்து இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. திருநெல்வேலி,கொட்டடி ஆகிய இடங்களிலேயே இருவரும் சடலமாக நேற்றைய தினம் மீட்கப்பட்டுள்ளனர்.

யாழ்.கொட்டடி பகுதியில் உள்ள வாய்க்கால் ஒன்றில் மீட்கப்பட்ட ஆணின் சடலம் கொட்டடி மூன்றாம் ஒழுங்கையைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான பூராஜா கஜேந்திரன் (வயது38) எனும் கடற்தொழிலாளி எனவும், திருநெல்வேலி கேணியடி வைரவர் ஆலயத்திற்கு பின்புறமாக மீட்கப்பட்டவருடைய சடலம் சிவமுத்து கைலாசம் (வயது75) எனும் மூன்று பிள்ளைகளின் தாயார் எனவும் இனங்காணப்பட்டுள்ளார்.

குறித்த இரு சம்பவங்களில் கொட்டடியில் சடலமாக மீட்கப்பட்டவர் மதுபோதை காரணமாக கழிவு வாய்க்காலுக்குள் வீழ்ந்து உயிரிழந்து இருக்கலாம் என யாழ். பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

திருநெல்வேலியில் சடலமாக மீட்கப்பட்ட வயோதிப பெண்மணி மனநிலை பாதிக்கப்பட்டவர் எனவும் சடலம் அருகில் மண்ணெண்ணெய் காணப்படுவதாகவும் கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவ இடங்களுக்கு சென்ற யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி ந.பிரேம்குமார் மரண விசாரணைகளை மேற்கொண்டதோடு, சடலங்கள் பிரேத பரிசோதனைகளுக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை கோப்பாய் மற்றும் யாழ்.பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (இ-4)

## கண்வில்லைகள் வழங்க நடவடிக்கை

கரவெட்டிப் பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவு ஊடாக கண்வில்லைகளுக்கு விண்ணப்பித்திருந்த பயனாளிகளுக்கு கண்வில்லைகள் விரைவில் வழங்கப்படவுள்ளன. இதில் 35 பயனாளிகளது பெயர்ப்பட்டியல் கரவெட்டிப்பிரதேச செயலக சமூகசேவைப்பிரிவின் ஊடாக வெளியிடப்பட்டுள்ளது.

இதற்கமைய ஆர்-சின்னமணி கே.இராஜேஸ்வரி,ரி.தேவபிறேமவதி, ரி.திரவியமலர்,எஸ்.சிவாஜினி,கே.சந்திராதேவி,பி.சின்னையா,ஏ.சுந்தரம், எம்.அழகம்மா,ஏ.தர்மராசா,பி. செல்லத்துரை,எஸ்.இலட்சுமி,வி.சதாசிவம், வி.சின்னவன், வி. சரஸ்வதி, ஆர்.திரவியம்,ஆர்.தங்கவேலாயுதம், எஸ். பொன்னுத்துரை, கே.நல்லம்மா, எ.பாக்கியம், எஸ். தங்கபாக்கியம், எ.லலிதாம்பிகை, எஸ்.கனகர், ஆர். கமலாதேவி,ரி.தவமணி, கே.சறோஜா தேவி,ஜி.தங்கேஸ்வரி,ஆர்.நாகம்மா, பி.மூர்த்தி,பி.கணபதி, ஆர். இராஜேஸ்வரி, எஸ்.கனகன், ஆர். கமலாதேவி, எஸ்.காங்கேசு, எ.தம்பிராசா போன்ற பயனாளிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை கரவெட்டிபிரதேச செயலகசமூக சேவைப் [illegible] கரவெட்டிப் பிரதேச செயலர் எஸ். [illegible] அறிவித்திருக்கிறார். (இ-5-60)

## ‘பிறகு’ திரைப்பட வெளியீடு

(யாழ்ப்பாணம்)

"பிரசன்ன விதானகே" இன் தயாரிப்பில் வெளிவந்துள்ள ''பிறகு'' திரைப்படம் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4 ஆம் திகதி யாழ்ப்பாணம் மஜெஸ்ரிக்கல் திரையிடப்படவுள்ளது.

ஆங்கில உப தலைப்புகளுடன் வெளியாகி இருக்கின்ற இத்திரைப்படமானது சர்வதேச விருதுகளை சுவீகரித்தது மட்டுமன்றி உலகளாவிய தீதியில் 35 இற்கும் மேற்பட்ட பிரசித்தி பெற்ற திரைப்பட விழாக்களில் பங்குபற்றி ஏகோபித்த பாராட்டுதல்களையும் பெற்றுள்ளது.

இத்திரைப்பட ஆரம்ப விழாவில் திரைப்படத்தின் பிரதான பாத்திரத்தை ஏற்று நடித்த இந்திய நடிகை அஞ்சலி பட்டேல் உட்பட திரைப் படத்தில் முக்கிய பங்காற்றிய அனைத்துக் கலைஞர்களும் பங்குகொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

இத்திரைப்படத்திற்கு ஆரம்பத்தில் தணிக்கை குழுவின் அங்கீகாரம் கிடைக்கப்படவில்லை.

இதில் சில காட்சிகளை அகற்றி விடுமாறு தணிக்கைக்குழு ஆரம்பத்தில் கோரியிருந்தது. இதனை திரைப்படத் தயாரிப்பாளர் பிரசன்ன விதானகே ஏற்க மறுத்திருந்தார்.

இப்போது புதிதாக நியமிக்கப்பட்டுள்ள தணிக்கைக் குழு இத் திரைப்படத்திற்கு எந்தவொரு தடையையும் விதிக்காது திரைப்படம் வெளியாவதற்கு அங்கீகாரம் அளித்திருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையின் நூற்றாண்டுவிழா கலந்துரையாடல்

யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலையின் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு விழா தொடர்பான கலந்துரையாடல் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4மணிக்குபாடசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எனவே மேற்படி கலந்துரையாடலுக்கு பாடசாலையின் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு பாடசாலை அதிபர் என்.மகேந்திரராஜா கேட்டுக்கொண்டுள்ளார். (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளை இல்லாதொழிக்கவே நான் நாடாளுமன்றுக்குச் செல்கின்றேன்

## ஹிருணிகா தெரிவிப்பு

(கொழும்பு)

**போதைப்பொருள் பயன்பாடு மற்றும் வர்த்தகத்தை இல்லாதொழிக்கவே தான் நாடாளுமன்றம் செல்வதாக முன்னாள் மேல் மாகாணசபை உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர தெரிவித்துள்ளார்.**

இம்முறை நாடாளுமன்றிற்கு செல்ல முடியும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டிருந்தது.

உண்மையில் அது எவ்வாறு நடந்தேறியது அது மிகப் பெரிய பாக்கியமாகவே கருதப்பட வேண்டும்.

ஏனெனில் நான் தான் நாடாளுமன்றம் செல்லும் வயது குறைந்த பெண் நாடாளுமன்ற உறுப்பினராவேன்.

ரவிகருணாநாயக்க, சுஜீவ சேனசிங்க, ஹர்ச டி சில்வா போன்ற சிரேஷ்ட உறுப்பினர்களுடன் ஒப்பீடு செய்யும் போது நான் அரசியலில் கால் பதித்து இன்னும் இரண்டு ஆண்டுகள் கூட பூர்த்தியாகவில்லை.

கொழும்பு போதைப்பொருள் பிரச்சினைக்கு தீர்வு வழங்க வேண்டும் என்பதே எனது ஆவலாக அமைந்துள்ளது.

மேலும் கொழும்பில் காணப்படும் வளங்கள் மிகவும் வரையறுக்கப்பட்ட வகையிலேயே மக்களுக்கு கிடைக்கின்றது.



கொழும்பில் மூன்று வேளை சாப்பிட வசதியற்றவர்கள் இருக்கின்றார்கள். அந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாண நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

மக்களுக்கு அதி உச்ச சேவையை வழங்குவதே எனது நோக்கம் என கொழும்பு மாவட்டத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடாக போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ள ஹிருனிகா பிரேமசந்திர கொழும்பு ஊடகமொன்றுக்கு தனது எதிர்கால திட்டங்கள் குறித்து செவ்வியளித்துள்ளார். (இ-7)

# தேசிய அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்க்கட்சித் தலைவராக திட்டமிடும் விமல்?

(கொழும்பு)

நாடாளுமன்றில் எதிர்க்கட்சி தலைவர் பதவியை பெற்றுக் ,கொள்வதற்கான செயற்பாடொன்றை தேசிய சுதந்திர முன்னணி தலைவர் விமல் வீரவன்ச ஆரம்பித்துள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது.

தங்கள் கட்சிக்கு கிடைத்திருக்கும் 5 ஆசனங்களுடன் முன்னணியின் பங்கு கட்சிகளின் ஆதரவு மற்றும் சுதந்திர கட்சியில் தேசிய அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவிக்கும்குழுவை இணைத்து கொள்வதற்கு அவர் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக தெரியவந்துள்ளது.

இம்முறை முன்னணியில் போட்டியிட்ட சுதந்திர கட்சி அல்லாத 11 உறுப்பினர்கள் நாடாளுமன் றத்திற்கு தெரிவாகியுள்ளனர்.

அவர்கள் தேசிய அரசாங்கத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து கொண்டுள்ள மையினால் சுதந்திர கட்சியில் மேலும் சில உறுப்பினர்களை இணைத்து கொள்வதற்கு தேசிய சுதந்திர முன்னணி திட்டமிட்டுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்புக்கு எதிர்க்கட்சி பதவியை ஒரு போதும் வழங்க ,விட மாட்டேன் என விமல் வீரவன்ச முன்னர் கூறியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# முன்னணி நிறைவேற்றுச்சபை உறுப்பினர் பதவியிலிருந்து குமார வெல்கம நீக்கம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி நிறைவேற்று சபை உறுப்பினர் பதவியில் இருந்து குமார வெல்கம நீக்கப்பட்டுள்ளார்.

அதனை சுட்டிக்காட்டி முன்னணி மற்றும் சுதந்திர கட்சியின் தற்போதைய செயலாளரினால் குமார வெல்கமவுக்கு கடிதம் ஒன்று நேற்று முன்தினம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த கடிதம் தனக்கு கிடைத்ததாக குமார வெல்கம தெரிவித்தார்.

கடந்த காலங்களில் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி தலைவர் பதவிக்கு சவால் விடும் வகையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவு வழங்கியவர்களில் குமார வெல்கமவும் உள்ளடக்கப்படுவார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

# உயிரியல் மருத்துவ பொறியியலாளர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சின் உயிரியல் மருத்துவ பொறியியலாளர் (நிறை வேற்றுத் தர சேவை வகையின் தரம் III) பதவிக்கான இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வித் தகைமைகள்- பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெறப்பட்ட மின்/ இலத்திரனியல் பொறியியல்/ உயிரியல் மருத்துவ பொறியியல் தொடர்பான பட்டம் ஒன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்ப முடிவுத் திகதியன்று 21 வயதுக்குக் குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். செயலாளர் (பணிப்பாளர்- நிர்வாகம் 7), சுகாதார மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, இல. 385, வண. பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரிக்கு எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 25 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும்.

இப்பரீட்சைக்கான மேலதிக விபரங்களை நேற்று முன்தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)


**வாழ்க்கையில் வெறுப்பா?**

பிரச்சினை எதுவானாலும்,
எம்முடன் தொலைபேசியில்
அல்லது நேரில் பேசுங்கள்.
இரகசியங்களைப் பேணுவோம்.
காலை 9.00 – பி.ப 1.00
மதச்சார்பற்றது
(1539)

**கைகொடுக்கும் நண்பர்கள்**
104, 4ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
021 222 8117, 0779008776

**வீடு வாடகைக்கு**

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரிக்கு அண்மையில் CARPETTED MAIN ROAD முகப்புடன் சமையலறை, சாப்பாட்டறை அடங்கிய 6 அறை மற்றும் விசாலமான GARAGE உடனான வசதியான வீடு. உடன் குடிபுகலாம்.
தொடர்பு:- 077 203 5419 (1553)

**வாடகைக்கு**

யாழ்ப்பாணம், நல்லூர், செம்மணி வீதியில் 6 அறைகள் கொண்ட பெரிய வீடு வாடகைக்கு/ குத்தகைக்கு உண்டு. அரச /தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.
071 815 3674 (1552)

**ஆசிரியை திருமதி. தேவராணி சச்சிதானந்தம் அவர்களின்**
**60 வது பிறந்தநாள் வாழ்த்தும் சேவை நயப்பும்-23.08.2015**
**கல்வித் தகைமை B.Sc (Hons) Dip.in.Education**

சேவை விபரம்
கமு/அக்கரைப்பற்று முஸ்லிம் ம.ம.வி.
01.08.1981-31.08.1987
யா/ பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி-
01.09.1987-05.01.1992
யா/ யாழ். மத்திய கல்லூரி -
06.01.1992-11.01.1996
கிளி/ இராமநாதபுரம் ம.வி.-
12.01.1996-09.05.2011
யா/ கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.-
10.05.2011- 22.08.2015



விஞ்ஞான பட்டதாரி பல விந்தைகள் செய்யும் ஆற்றல்
விருப்புடனே சகல பாடங்களையும் புகட்டும் சகலகலாவல்லி
ஆசிரியப் பணியில் நீங்கள் காட்டிய சேவையின் அர்ப்பணிப்பு
ஆரவாரம் செய்யும் உங்கள் எச்சங்களின் சாதனை அகவை
60 வரை நீங்கள் ஆற்றிய பணி அறிவை ஊட்டி செல்லும்
பணி ஆயுள் காலம் நீண்டு நீடுழி வாழ வாழ்த்தும்

(1560) பாடசாலைச் சமூகம்
யாழ். கொக்குவில் ஸ்தான சி.சி.த.க.பாடசாலை.

**கல்யாண மாலை**

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>கி.பா: 18 செவ் 1 ல்<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: A/L/ கணக்காளர் டுபாய்<br>தொ.இ: B/1171 | பிறப்பு: 1985 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 15<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: A/L/ அரச தொழில்<br>தொ.இ: G/1918 |
| பிறப்பு: 1979 இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 7 1/2<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில் ஜேர்மனி<br>தொ.இ: B/1173 | பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரட்டாதி<br>கி.பா: 13<br>உயரம்: 5'6"<br>தகைமை/தொழில்: BSC, IT/ தனியார் தொழில்<br>தொ.இ: G/1922 |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: கார்த்திகை<br>கி.பா: 22<br>உயரம்: 5'9"<br>தகைமை/தொழில்: GAQ/ அரச தொழில்<br>தொ.இ: B/1177 | பிறப்பு: 1977 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 36<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்: BSC/ ஆசிரியர்<br>தொ.இ: G/1926 |
| பிறப்பு: 1987 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>கி.பா: 17<br>உயரம்: 5'8"<br>தகைமை/தொழில்: O/L/ சொந்த தொழில்<br>தொ.இ: B/1178 | பிறப்பு: 1986 இந்து<br>நட்சத்திரம்: அவிட்டம்<br>கி.பா: 42<br>உயரம்: 5'10"<br>தகைமை/தொழில்: CIMA<br>தொ.இ: G/1930 |

**கல்யாண மாலை**
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊவா மாகாண முதல்வர் பதவி எனக்கு வேண்டும்

## அடம்பிடிக்கிறார் சசீந்திர ராஜபக்ஷ

**ஊவா மாகாண முதலமைச்சர் பதவி தனக்கு மீண்டும் வழங்கப்பட வேண்டும் என சசீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஊவா மாகாண முதலமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, பொதுத் தேர்தலில் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன் ஊவா மாகாண சபையில் அங்கம் வகித்த 6 பேர் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அரவிந்தகுமார், வடிவேல் சுரேஷ், ரவிந்திர சமரவீர, சமிந்த விஜேசிறி, சாமர சம்பத், பத்ம உதய சாந்த ஆகியோர் நாடாளுமன்றத்திற்கு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் மூன்று பேர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பில் ஊவா மாகாண சபையில் அங்கம் வகித்தவர்கள். இவர்களுக்கு பதிலாக மூன்று பேர் விருப்பு வாக்குகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

இந்நிலையில் மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியை சேர்ந்த ஒருவருக்கு முதலமைச்சர் பதவியை வழங்காது, தன்னை அந்த பதவிக்கு நியமிக்க ஆதரவு வழங்குவார் என நம்புவதாக சசீந்திர ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் தேசிய அரசாங்கம் உருவாகினால், மாகாண சபைகளிலும் அதனை நடைமுறைப்படுத்துவது தவறல்ல எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)




# சுனில் ஹந்துன்நெத்திக்கு தேசியப்பட்டியலில் ஆசனம்

மக்களின் கோரிக்கைக்கு அமையவே ஜே.வி.பியின் மாத்தறை மாவட்ட வேட்பாளர் சுனில் ஹந்துன்நெத்திக்கு தேசியப் பட்டியல் ஆசனம் வழங்கப்பட்டது என கட்சியின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்துள்ளார்.

தேர்தலின் பின்னர் மக்கள் விடுத்த கோரிக்கையின் அடிப்படையில் சுனில் ஹந்துனநெத்தியை தேசியப் பட்டியல் ஊடாகநாடாளுமன்றம்கொண்டு வரத் தீர்மானித்தோம்.

ஹந்துன்நெத்தியை ஓர் தோல்வியடைந்த வேட்பாளராக கருதப்பட முடியாது.

வேட்பாளர்களுக்கு இடையில் விருப்பு வாக்கு போட்டி காரணமாக ஹந்துன்நெத்தி தோற்கடிக்கப்படவில்லை.

கட்சிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த வாக்குகளில் சிறிதளவு பற்றாக்குறை ஏற்பட்டமையே, ஹந்துன்நெத்தி நாடாளுமன்றத்திற்கு தெரிவாக முடியாமல் போனதற்கான காரணமாகும்.

சில மாவட்டங்களில் 700 வாக்குகளை கூடுதலாகப் பெற்றுக்கொண்டிருந்தால் எமது கட்சிக்கு ஆசனமொன்று கிடைக்கப் பெற்றிருக்கும்.

அவ்வாறான மாவட்டங்களில் தெரிவாகாத வேட்பாளர்களை தேர்தலில் தோற்றவர்களாக கருதப்பட முடியாது என ரில்வின் சில்வா ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (இ-7)

# வரப்பிரசாதங்களைப் பகிரும் கபடநாடகம்தான் தேசிய அரசு

## ஜே.வி.பி.கடுமையாக சாடல்

ஐ.தே.கவும் சுதந்திரக் கட்சியும் இணைந்து அமைத்துள்ள தேசிய அரசாங்கமானது வரப்பிரசாதங்களை பகிர்ந்து கொள்வதற்கான கபடநாடகம் என்று ஜே.வி.பி. கடுமையாக சாடியுள்ளது.

மேலும் ஐ.தே.கவும் சுதந்திரக் கட்சியும் தேசிய அரசாங்கம் தொடர்பில் கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தமானது நாட்டை முன்னேற்றும் செயற்பாடுகளை உள்ளடக்கிய தொன்றல்ல என்றும், வெறுமனே அமைச்சுப் பதவிகள் மற்றும் வரப்பிரசாதங்களை பகிர்ந்து கொள்வதற்கான ஒன்றேயன்றி வேறில்லை என்றும் ஜே.வி.பியின் பிரசாரச் செயலாளர் விஜித ஹேரத குற்றம்சாட்டியுள்ளார். இது தொடர்பாக தொடர்ந்தும் கருத்து வெளியிட்டுள்ள அவர்,

நாட்டில் தீர்க்கப்பட வேண்டிய ஏராளமான அடிப்படை பிரச்சினைகள் இருக்கும் நிலையில் ஐ.தே.கவும், சுதந்திரக் கட்சியும் தங்கள் உறுப்பினர்களின் பிரச்சினைகளைத தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

சுதந்திரக் கட்சி உறுப்பினர்கள் தேசிய அரசாங்கத்தில் பங்கெடுப்பது பொது மக்கள் அளித்த வாக்குகளுக்கு செய்யும் துரோகம் மட்டுமன்றி, நாட்டு மக்களை ஏமாற்றும் ஒரு விடயமாகும்.

நாட்டுக்கும் பொதுமக்களுக்கும் சேவையாற்ற தேசிய அரசாங்கம் ஒன்று அவசியமில்லை.



தேர்தல் காலங்களில் ஜே.வி.பியுடன் ஐ.தே.க. இரகசிய ஒப்பந்தம் ஒன்றைச் செய்திருப்பதாக குற்றம் சாட்டிய சுதந்திரக் கட்சியினர் இன்று அதே ஐக்கிய தேசியக் கட்சியினருடன் ஒப்பந்தம் செய்து கொண்டு தேசிய அரசாங்கம் அமைத்திருப்பதன மூலம் பொதுமக்களை ஏமாற்ற முற்பட்டது யார் என்பதை புரிந்து கொள்ள முடியும் என்றும் விஜித ஹேரத் மேலும் தெரிவித்துள்ளார். (இ-7)

# 08.2015 23 இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்

- 1305- ஸ்கொட்லாந்தின் நாட்டுப்பற்றாளர் வில்லியம் வொல்ஸ் , இங்கிலாந்தின் முதலாம் எட்வேர்ட் மன்னனால் நாட்டுத் துரோகத்துக்காக குற்றம் சாட்டப்பட்டு தூக்கிலிடப்பட்டார்.
- 1541- பிரெஞ்சு நாடுகாண் பயணி ஜாக்கார்டியேர் கனடாவின் கியூபெக் நகதை அடைந்தார்.
- 1555- நெதர்லாந்தில் கால்வினிஸ்துகளுக்கு முழுமையான உரிமைகள் வழங்கப்பட்டன.
- 1784- மேற்க வட கரோலினா (தற்போது கிழக்கு டென்னசி) பிராங்கிளின் என்ற பெயரில் தனி நாடாக அறிவித்தது. இது ஐக்கிய அமெரிக்காவால் ஏற்கப்படவில்லை.
- 1821- மெக்சிகோ, ஸ்பெயினிடமிருந்து விடுதலை அடைந்தது.
- 1839-- சீனாவின் கிங் சீனர்களுடன் போரிடுவதற்காக ஐக்கிய இராச்சியம் ஹொங்கொங்கைக் கைப்பற்றியது.
- 1914- முதலாம் உலகப்போர்- ஜப்பான் ஜேர்மனியுடன் போரை அறிவித்தது.
- 1939-இரண்டாம் உலகப்போர்- ஜேர்மனியும் சோவியத் ஒன்றியமும் போர்த்தவிப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர். பின்லாந்து, உக்ரைன், போலந்து ஆகியவற்றை தமக்கிடையே பகிர்வது என்றும் இரகசிய முடிவெடுக்கப்பட்டது.
- 1940- இரண்டாம் உலகப்போர்- ஜேர்மனியிடனர் லண்டன் மீது குண்டு வீச்சை ஆரம்பித்தனர்.
- 1948- ஏ.கே. செட்டியார் தயாரித்த காந்தி பற்றிய முதல் வரலாற்றுத் திரைப்படம் தமிழிலும் தெலுங்கிலும் திரையிடப்பட்டன.
- 1952- அரபு லீக் ஆரம்பிக்கப்பட்டது.
- 1966- லூனார் ஆர்பிட்டர் 1 - முதன் முதலாக சந்திரனில் சுற்று வட்டத்திலிருந்து எடுத்த பூமியின் படங்களை லூனார் ஆர்பிட்டர் 1 அனுப்பியது.
- 1973-இண்டெல்சாற் தொலைத் தொடர்பு செய்மதி ஏவப்பட்டது.
- 1975- லாவோசிம் கம்யூனிசப் புரட்சி வெற்றி பெற்றது.
- 1990- ஆர்மேனியா சோவியத் ஒன்றியத்திலிருந்து விடுதலை பெற்றது.
- 1990- மேற்கு ஜேர்மனியும் கிழக்கு ஜேர்மனியும் ஒக்ரோபர் 3 இணையவிருப்பதாகத் தெரிவித்தன.
- 2006- நியூசிலாந்து ஆளுநராக ஆனந்த் சக்தியானந்த் பதவியேற்றார்.

**பிறப்புக்கள்**

- 1754- பதினாறாம் லூயி, பிரெஞ்ச மன்னன் (இ.1793)
- 1868- அய்யன் காளி, தலித் போராளி (இ.1941)
- 1914- சுசுமு ஓனோ, ஜப்பானியத் தமிழறிஞர் (இ.2008)
- 1978- கோபி பிரயன்ட்- அமெரிக்க கூடைப்பந்து ஆட்டக்காரர்

**இறப்புக்கள்**

- 1951- வ.ரா. தமிழ் எழுத்தாளர் (பி.1889)
- 1997- ஜோன் கெண்ட்ரூ, நோபல் பரிசு பெற்றவர் (பி.1961)
- 2000- [illegible] அரசியல்வாதி (பி.1952)

# 50 கோடி ரூ. சேமிப்பு;தேர்தல்கள் ஆணையர் தகவல்

தேர்தலுக்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியிலிருந்து 50 கோடி ரூபா செலவிடப்படவில்லையென தேர்தல் ஆணையாளர மஹிந்த தேசப்பிரிய தெரிவித்துள்ளார்.

கடந்த 17ஆம் திகதி நடைபெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலுக்கான மொத்த செலவுகள் மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. தேர்தலுக்காக மொத்தமாக 400 கோடி ரூபா பணம் செலவாகும் என எதிர்பார்க்கப்பட்டது.

எனினும் தேர்தல் நிறைவின் போது மொத்தச் செலவு 350 கோடி ரூபாவாகவே காணப்பட்டது. சுவரொட்டிகள் மற்றும் கட்அவுட்களை அகற்றுவதற்காக பொலிஸார் கோரியிருந்த தொகையைக் கூட குறைக்க முடிந்தது.

இந்த தடவை தேர்தலின் போது சுவரொட்டிகள் மற்றும் கட்அவுட் பயன்பாடு வெகுவாக வரையறுக்கப்பட்டது.

தேர்தல் செலவுகள் குறைவடைவதற்கு இதுவும் ஓர் முக்கிய காரணியாக அமைந்தது என தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரிய சிங்கள ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார். (இ-7)

# சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | நெல்லியடி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 100 | 70 | 100 |
| உருளைக்கிழங்கு | 100 | 60 | 90 | 90 |
| பச்சைமிளகாய் | 200 | 100 | 200 | 150 |
| தக்காளி | 100 | 70 | 100 | 80 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 50 | 60 |
| கோவா | 80 | 50 | 60 | 80 |
| கரட் | 140 | 100 | 100 | 160 |
| பூசணி | 40 | 30 | 30 | 60 |
| புடோல் | 30 | 30 | 40 | 60 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 100 | 120 |
| பெரிய வெங்காயம் | 80 | 100 | 110 | 120 |
| பாகற்காய் | 80 | 100 | 120 | 100 |
| வெண்டிக்காய் | 50 | 40 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 80 | 100 | 100 | 100 |
| பயற்றங்காய் | 100 | 100 | 90 | 80 |
| லீக்ஸ் | 60 | 100 | 70 | 100 |
| பீற்றூட் | 20 | 30 | 40 | 60 |
| கறிமிளகாய் | 120 | 100 | 120 | 120 |
| முருங்கைக்காய் | 140 | 40 | 120 | 100 |
| போஞ்சி | 200 | 160 | 200 | 160 |
| கத்தரிதம்புள்ள | 80 | 40 | 40 | 80 |
| கீரை - 1 பிடி | 20 | 10 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 80-100 | 60 | 160 |
| தேங்காய் (ஒன்று) | 50 | 30-70 | 40 | 40-50 |
| இராசவள்ளி | 140 | 200 | — | — |
| வெங்காயப்பூ | 140 | 100 | — | 200 |
| முள்ளங்கி | 30 | 40 | 60 | 80 |
| பொன்னாங்காணி | 30 | 40 | 30 | 30 |
| வல்லாரை | 20 | 10 | 20 | 20 |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்கப் போவதேயில்லை

## மகிந்த ராஜபக்ஷ திட்டவட்டம்

(கொழும்பு)

**தேசிய பாதுகாப்புக்கு தலைமைத்துவம் அளிக்கத் தயாராக இருப்பதாகவும் ஆனால் எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்கப் போவதில்லையென முன்னாள் ஜனாதிபதியும் பாராளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



மகிந்த ராஜபக்ஷவினால் கடந்த வியாழக்கிழமை மேல் மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்கவின் வீட்டில் கூட்டப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான கூட்டத்தில், 60 பேர் மட்டும் பங்கேற்றிருந்தனர்.

இந்தக் கூட்டத்தில், சுசில் பிரேமஜயந்த உள்ளிட்ட ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்கள் பலரும் பங்கேற்கவில்லை.

கடந்த வியாழக்கிழமை சுமார் ஒன்றரை மணித்தியாலங்கள் நடந்த இந்தக் கூட்டத்தில், தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொள்ள, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி மத்திய குழுவில் எடுக்கப்பட்ட முடிவுக்கு கடும் எதிர்ப்புத் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன், தாம் உள்ளிட்ட இந்தக் கூட்டத்தில் பங்கேற்ற 60 நாடாளுமன்ற உறுப்பினர்களும், தேசிய அரசாங்கத்தில் இணைந்து கொள்ளப் போவதில்லை என்று, நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இந்தக் கூட்டத்தில், பங்கேற்ற உறுப்பினர்கள், மகிந்த ராஜபக்ஷவை எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்கும் படி வலியுறுத்தியிருந்தனர்.

ஆனால், தாம் எதிர்க்கட்சித் தலைவராகப் பதவியேற்கப் போவதிலலை என்றும், பின்வரிசை உறுப்பினராக நாடாளுமன்றத்தில் அமரப் போவதாகவும், கூறிய மகிந்த ராஜபக்ஷ, தேவைப்பட்டால், தேசிய பாதுகாப்புக்குத் தலைமைத்துவம் அளிக்கத் தயாராக இருப்பதாகவும் தெரிவித்தார்.

எனினும், மகிந்த ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக பதவியேற்பதற்கு இணங்குவார் என்று வாசுதேவ நாணயக்காரவும், பிரசன்ன ரணதுங்கவும் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையே, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பில் 83 பேர் நாடாளுமன்றத்துக்குத் தெரிவான போதிலும் அவர்களில், 60 பேர் மட்டுமே, மகிந்த ராஜபக்ஷவை ஆதரிக்கும் அணியில் தற்போது இடம்பெற்றுள்ளனர்.

ஏற்கனவே மகிந்தவுக்கு ஆதரவான அணியில் இருந்த சுசில் பிரேமஜயந்த உள்ளிட்ட பலரும், அங்கிருந்து விலகி, மைத்திரிபால சிறிசேனவின் பக்கம் சாயத் தொடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (இ-7)

## எதிர்க்கட்சித் தலைவராக சம்பந்தனே தகுதியானவர்

### விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவிப்பு

(கொழும்பு)

தேசிய அரசாங்கம் ஒன்றை அமைக்க நாட்டின் பிரதான இரண்டு கட்சிகள் புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ள இச்சந்தர்ப்பத்தில், நாட்டின் சட்ட திட்டங்களுக்கமைய தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கே எதிர்க்கட்சி தலைவர் பதவி வழங்கப்பட வேண்டும் என கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன தெரிவித்தார்.

மூவின மக்களினதும் ஆதரவைப் பெற்ற பிரதான இரண்டு கட்சிகள் இணக்கப்பாட்டுடன் கூடிய, நாட்டின் முன்னேற்றத்தை கொண்டு செயற்பட உத்தேசித்துள்ளன. இத்தருணத்தில் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துவதில் அக்கறை செலுத்த வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன தேசிய அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளமை தொடர்பில் வினவிய போதே நவ சம சமாஜக் கட்சியின் தலைவர் கலாநிதி விக்கிரமபாகு கருணாரட்ன மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில்.

மூவின மக்களின் பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் இணக்கப்பாட்டுடன் கூடிய, நாட்டின் முன்னேற்றத்துக்கான தேசிய அரசாங்கம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை கைச்சாத்திட்டுள்ளமையை நாம் வரவேற்கின்றோம்.

அந்தவகையில் எமது நாட்டில் பல வருடகாலமாக காணப்படுகின்ற தேசிய இனப்பிரச்சினை தொடர்பில் 13 ஆவது திருத்தத்தை அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். மூவின மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரத்தை பாதுகாத்து நாட்டில் தொடர்ந்தும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த வேண்டும்.

ஐக்கிய தேசியக்கட்சி மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன தேசிய அரசாங்கம் ஒன்றை ஸ்தாபித்துள்ள இந்நிலையில் சட்ட விதிமுறைகளுக்கமைய நாட்டின் பிரதானமான பலம் பொருந்திய மூன்றாவது கட்சியாக தொழிற்படும் தமிழ்த்தேசிய கூட்டமைப்புக்கு எதிர்கட்சிக்கான அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்.

கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கு எதிர்க்கட்சி தலைவர் பதவியும் வழங்கப்பட வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-7)

## வாரம் ஒரு தகவல்

### தூங்க முடியவில்லை

"டாக்டர் நீங்கள் தான் என்னைக் காப்பாற்ற வேண்டும்"

"என்ன பிரச்சினை உங்களுக்கு?"

"மனுசன் நிம்மதியாகத் தூங்க முடியவில்லை"

"ஒரு மனிதன் தன் வாழ்நாளில் மூன்றில் ஒரு பகுதியை தூங்கியேதான் கழிக்கின்றான். தெரியும் அல்லவா?"

" அவர்கள் எல்லாம் கொடுத்து வைத்தவர்கள்"

"அது இருக்கட்டும்... ஒருவன் எப்படி தூங்குகிறான் என்பதை வைத்துக்கூட அவனுடைய மனதைப் புரிந்து கொள்ளலாம்.

"அது எப்படி?" "ஒரு காலை நிமிர்த்தியும் இன்னொரு காலை மடக்கி யும் வைத்துக் கொண்டு தூங்குபவர்கள் இரண்டு வித மான குணாங் களை உடையவர்கள். இவர்கள் எல்லாம் சில நேரங்களில் தங்க ளைப் பலசாலிகளாக காட் டிக்கொள்வார்களாம் ஆனால் அவர்க ளுடைய குணம் இல்லையாம். மனதிற்குள்ளேயே பதுங்குவார் களாம்"

" அப்படியா!"

"ஆமாம்! மனதுக்குள் ஒரு தவிப்பு அல்லது பயம் உள்ளவர்கள் பந்துமாதிரி சுருண்டு படுத்துக் கொண்டு போர்வைக்குள் பதுங்கிக் கொள்வார்கள். அந்தப் பயம் போனதற்குப் பின் நன்றாக படுத்துத் தூங்குவார்களாம்" "டாக்டர் நீங்கள் சொல்வதெல்லாம் தூங்குபவர்களைப் பற்றி என்னைப் போல் தூங்கமுடியாதவனுக்கு ஏதாவது வழியுண்டா... அதைச் சொல்லுங்கள்"

"உங்களால் ஏன் தூங்க முடியவில்லை" "மனைவி தொணதொண என்று பேசிக் கொண்டிருந்தால் எப்படித் தூங்க முடியும்"

"எங்கள் வீட்டிலும் அதே பிரச்சினைதான். அதற்கு வழி இதுதான் இந்தாங்க"

"என்ன இது" "தூக்கமாத்திரை"


"ரொம்ப நன்றி டாக்டர். இதை நான் எப்படி பாவிக்க வேண்டும்"

"இது உங்களுக்கு அல்ல உங்கள் மனைவிக்கு"

**தென்கச்சி கோ.சுவாமிநாதன்**

## சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி வழங்கவே தேசிய அரசாங்கம்

### விமல் வீரவன்ச குற்றச்சாட்டு



(கொழும்பு)

தேசிய அரசாங்கம் என்பது ஐக்கிய தேசியக் கட்சியின் அரசாங்கத்தின் வாலாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை மாற்றுவதாகும். அதே வேளை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை தேசிய அரசாங்கத்துடன் இணைக்கும் போது இரா. சம்பந்தன் எதிர்க்கட்சி தலைவராக தெரிவாவார் என தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

நிதி மோசடி விசாரணைப் பிரிவிற்கு நேற்றுமுன்தினம் அழைகப்பட்டிருந்த வீரவன்ச, விசாரணைகளின் பின்னர் ஊடகங்களிடம் பேசும் போதே இதனை தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசியக் கட்சியின் நிகழ்ச்சி நிரலுக்கு ஏற்ப ஆட வைப்பதே இந்த தேசிய அரசாங்கமாகும்.

அத்துடன் ரணில் விக்கிரமசிங்கவின் சிறுபான்மை அரசாங்கத்திற்கு பெரும்பான்மை பலத்தை வழங்குவதாகும்.

இந்த காட்டிக்கொடுப்புக்கு நாங்கள் இணங்கப்போவதுமில்லை. ஏற்கப்போவதுமில்லை. அங்கீகரிக்கப்போவதுமில்லை. பொதுத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு 95 ஆசனங்கள் கிடைத்துள்ளன.

தேர்தல் சட்டங்களை மீறி, ஐக்கிய தேசியக் கட்சி சகல ஊடகங்களையும் தன்வசப்படுத்தியிருந்த நிலையில், இந்த எண்ணிக்கை கிடைத்தது.

அண்மைய கால வரலாற்றில் 95 உறுப்பினர்களைக் கொண்ட பலமான எதிர்க்கட்சி உள்ளது. கடந்த காலங்களில் சுமார் 40 பேரை கொண்ட எதிர்க்கட்சியே இருந்தது.

அத்துடன் பெரும்பான்மை பலத்தை பெறாத கட்சிக்கு எதிர்க்கட்சியில் இருந்து உறுப்பினர்களை இணைத்து அரசாங்கத்தை ஏற்படுத்துவது அரசியல் காட்டிக்கொடுப்பாகும்.

ஜெனீவா மனிதவுரிமை ஆணைக்குழுவின் அறிக்கை செப்டெம்பர் இறுதியில் வெளியிடப்படவுள்ளது.

இரா.சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவி கிடைப்பது என்பது மனிதவுரிமை ஆணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்படும் போது அதில் உள்ள விடயங்கள் உண்மையானது என உலகம் முழுவதும் எடுத்துச் செல்ல வாகனத்தை பெற்றுக்கொடுத்தது ஆகிவிடும்.


இதனை நாங்கள் ஏற்றுக் கொள்ளப் போவதில்லை. சம்பந்தனுக்கு எதிர்க்கட்சித் தலைவர் பதவியை வழங்கவே, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை ஐக்கிய தேசிய கட்சியுடன் கூட்டுச்சேர வைக்கின்றனர்.

இதனால், நாங்கள் தேசிய அரசாங்கத்திற்கு இணங்கப்போவதில்லை. தேசிய அரசாங்கத்திற்கு இணங்காத ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் மகிந்த ராஜபக்ஷ தலைமையில் நாங்கள் செயற்படுவோம் எனவும் விமல் வீரவன்ச மேலும் தெரிவித்தார். (இ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆவணி மாத இராசி பலன்கள்

## 18.08.2015~17.09.2015



**கல்யாண வாய்ப்புக்கள் கைகூடும் நேரம்! நேர்மையாக நடப்பதன் மூலம் நிம்மதி பெறலாம் என்று சொல்லும் தனுசு இராசி நேயர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது உங்கள் ராசிநாதன் குரு உங்கள் ராசியை பார்க்கிறார். எனவே தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். தொல்லை தந்தவர்கள் விலகுவர்.

“மாடாய் உழைத்து, ஓடாய் தேய்ந்தும்” உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இந்த மாதத்தில் பாடாய்ப்படுத்தியவர்கள் விலகுவர். பம்பரமாய்ச் சுழன்று பணிபுரி வீரர்கள். நாடாளும் நபர்களின் நட்பால் நல்ல காரியம் இல்லத்தில் நடைபெறும். வருமானம் திருப்தி கரமாக இருக்கும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும்.

குருவின் பார்வை பலத்தால் கொடுக்கல், வாங்கல் ஒழுங்காகும். குடியிருக்கும் வீட்டால் ஏற்பட்ட பிரச்சினை அகலும். திடீர் திருப்பங்கள் பலவும் தோன்றும். திருமணப் பேச்சுகள் நல்ல விதமாக முடிவடையும்.

எந்த வரனும் திருப்தியாக அமையவில்லையே என்று ஏங்கியவர்களுக்கு இந்த மாதம் புதிய பாதை புலப்படப் போகின்றது. புகழ்மிக்கவர்கள் உங்களுக்குப் பின்னணியாக இருந்து பொருளாதாரத்தைப் பெருக்கிக் கொடுக்க முன்வரப்போகிறார்கள்.

ஏழரைச் சனி தொடங்கிய சில நாட்களில் வக்ரம் அடைந்து பின்னோக்கி சென்றுவிட்டது. இப்பொழுது இம்மாதத்தில் விரயச் சனியாக வக்ர இயக்கத்தில் வரப்போகின்றது. முதல் சுற்று, மூன்றாவது சுற்று நடப்பவர்கள் எச்சரிக்கையாக செயறபட வேண்டும்.

நடுச்சுற்று நடப்பவர்கள் நல்ல தகவல்களை நாள்தோறும் கேட்டு மகிழ்வர்.

கடைதிறப்பு விழாக்களையும், கட்டடத் திறப்பு விழாக்களையும் நடத்திப் பார்ப்பீர்கள்.

ஒரு சில சமயங்களில் முன் கோபத்தின் விளைவாக முன்னேற்றத்தில் முட்டுக் கட்டைகள் ஏற்படலாம். எனவே, கோபத்தைக் குறைத்துக் கொள்வது நல்லது.

அவ்வாறு செயறபட்டால் கூடுதல் நற்பலன்களைப் பெறமுடியும். விடாது குருவை வழிபட்டால் வெற்றி நிச்சயம் கிடைக்கும். வியாழன் தோறும் விரதம் இருந்து குரு கவசம் பாடி வழிபடுவதன் மூலம், ஆனந்தமயமான வாழ்க்கையை அமைத்துக் கொள்ள இயலும்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 21 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். மீண்டும் செப்டம்பர் 15 ஆம் திகதி சிம்மத்திற்கு வக்ரமாகச் செல்கிறார். உங்கள் ராசிக்கு 7, 10 ஆகிய இடங்களுக்கு அதிபதி வக்ரம் பெறுவது நன்மைதான்.

சமூகத்தில் உங்கள் செல்வாக்கு மேலோங்கும். புதிய தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள்.

ஒப்பந்தங்கள் அடுக்கடுக்காக வந்து சேரும். சிப்பந்திகளால் வந்த சில்லரைத் தொல்லை மாறும். அற்புத வாழ்விற்கு அடித்தளமிடுவீர்கள். உத்தியோக முயற்சியில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு உன்னத வாய்ப்பு வந்து சேரும்.

விருப்ப ஓய்வு பெற்றுக்கொண்டு சுயதொழில் செய்ய முன்வருபவர்கள் குடும்ப உறுப்பினர்களில் யார் பெயருக்குச் செய்ய வேண்டும் என்பதை




ஆராய்ந்து செய்தால் நல்லது.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 24 ஆம் திகதி சுக்ரன் வக்ர இயக்கத்தில் கடக ராசிக்கு செல்கிறார். இதுவும் உங்களுக்கு நன்மையையே வழங்கும். 6-க்கு அதிபதி 8-ல் சஞ்சரிக்கும் பொழுது “கெட்டவன் கெட்டிடில் கிட்டிடும் ராஜயோகம” என்பதற்கு ஏற்ப நல்ல வாய்ப்புகள் இல்லம் தேடி வரும்.

பதவி வாய்ப்புகள் கிடைக்கும். கொடுக் கல், வாங்கல்கள் ஒழுங்காகும். குறுக்கீடு சக்திகள் அகலும்.

**விருச்சிக சனியும் சிம்ம செவ்வாயும்!**

செப்டம்பர் 5 ஆம் திகதி விருச்சிகத்தில் சனி சஞ்சரிக்கின்றார். அதன்பிறகு செப்டம்பர் 17 ஆம் திகதி சிம்மத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார்.

மீண்டும் ஏழரைச் சனி தொடங்குகிறது. ஒரு சிலருக்கு மீண்டும் இட மாற்றம், ஊர் மாற்றம் வரும். வீடு மாற்றங்கள் விருப்பம் போல் அமையும்.

விலகிச் சென்ற உடன்பிறப்புகள் விரும்பி வந்து சேருவர். இம்மாதம் சனிக்கிழமை விரதம் இருந்து ஆனைமுகப் பெருமானையும், ஆறுமுகப் பெருமானையும் வழிபடுவது நல்லது.

**பெண்களுக்கான சிறப்புபலன்கள்**

இம்மாதம் வரன்கள் வீடு தேடி வந்து சேரும். வங்கிச் சேமிப்பு உயரும். கரங்குளிரப் பொருள் குவியும். கருத்து வேறுபாடுகள் அகலும்.

கணவன்-மனைவிக்குள் பிரச்சினைகள் அகலும். உங்கள் பெயரிலேயே தொழில் தொடங்கும் வாய்ப்புகள் ஒருசிலருக்கு உருவாகும். பொதுநலத்தில் பணி புரிபவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும்.

உத்தியோகத்தில் இருப்பவர்களுக்கு மாதத் தொடக்கத்தில் மாறுதல்கள் கிடைக்கலாம். ஊதிய உயர்வு கிடைப்பதற்கான அறிகுறிகள் தென்படும். வியாழன் வழிபாடு வெற்றியை வழங்கும்.

## கல்யாண வாய்ப்புகள் வந்து கைகூடும் நேரம்!

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**



**யோசித்து செயற்பட்டால் யோகங்கள் வந்து சேரும்! சிகரம்போல் உயர தினமும் சிந்தித்துக்கொண்டே இருக்கும் மகர இராசி நேயர்களே!**

ஆவணி மாதக் கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும்பொழுது, மாதத் தொடக்கத்தில் அஷ்டமத்தில் நான்கு கிரகங்கள் சஞ்சரிக்கின்றன. சூரியன், புதன், சுக்ரன், குரு ஆகிய நான்கு கிரகங்களும் 8-ம் இடத்தில் சஞ்சரிப்பதால் வரவைக் காட்டிலும் செலவு இருமடங்காகலாம்.

வாழ்க்கைத் தேவைகள் கடைசி நேரத்தில் தான் கைகூடும். குறிப்பாக உறவினர் பகையும், உள்ளத்தில் அமைதியின்மையும் தோன்றும் நேரமிது. அருகில் இருப்பவர்களை அனுசரித்துச் செல்வதன் மூலமே அமைதியும், ஆதாயமும் கிடைக்கும்.

ராசிநாதன் சனி 10 இல் சஞ்சரிக்கின்றார். உச்சம் பெற்ற சனியால் உங்கள் தொழிலுக்கு எந்த பாதிப்பும் வராது. என்றாலும் கூட உறவினர்களாலோ, நண்பர்களாலோ ஏமாற்றங்களைச் சந்திக்க நேரிடும்.

குறிப்பாக சகோதரர்கள் உங்கள் குணத்தைப் புரிந்து கொள்ளாமல் நடக்கலாம். பூர்வீக இடத்தைப் பிரித்துக் கொள்வதில் குழப்பங்கள் நடக்கும். பலமுறை பஞ்சாயத்து வைத்தும் பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியவில்லையே என்று கவலைப்படுவீர்கள்.

ஒன்பதாமிடத்தில் ராகு இருப்பதால் வீடு மாற்றங்கள் பற்றிய சிந்தனை மேலோங்கும். இருக்கும் வாடகை வீடு திருப்தியாக இல்லையே என்று வேறு வீடு மாறிக் கொள்ளலாமா? என்று சிந்திப்பீர்கள்.

அஷ்டமத்தில் சூரியன் சஞ்சரிப்பதால் அரசுவழித் தொல்லைகள் அதிகரிக்கும். எடுத்த காரியங்கள் எதுவும் முடிவிற்கு வரவில்லையே என்று நீங்கள் நினைக்கலாம். கொடுத்த வாக்கையும் காப்பாற்ற இயலாமல் போகலாம்.

வழிபாட்டினால் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ள இயலும் என்பதை அறிந்து கொள்ளுங்கள். குறிப்பாக அஷ்டமத்தில் சஞ்சரிக்கும் நான்கு கிரகங்களையும் திருப்திப்படுத்த வேண்டும். அதற்குரிய ஸ்தலங்களுக்குச் சென்று வருவதோடு நவக்கிரக வழிபாட்டையும் சனிக்கிழமை தோறும் மேற்கொள்ளுங்கள்.

**வக்ர புதனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 21 ஆம் திகதி கன்னி ராசியில் புதன் வக்ரம் பெறுகிறார். மீண்டும் செப்டம்பர் 15 ஆம் திகதி சிம்மத்திற்கு வக்ரமாகச் செல்கின்றார். இதன் விளைவாக வரவும் செலவும் சமமாகும். நல்ல வாய்ப்புகளை உபயோகப்படுத்திக் கொள்ள முடியாமல் போகலாம். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும். மக்கள் செலவங்களால் பிரச்சினைகள் வராமலிருக்க உங்கள் மேற்பார்வையிலேயே வைத்துக்கொள்வது நல்லது. சிக்கனத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நேரமிது. ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். குடும்ப உறுப்பினர்களில் யாருக்கேனும் ஒருவர் மாற்றி ஒருவருக்கு மருத்துவச் செலவு வந்துகொண்டேயிருக்கும்.

**கடக சுக்ரனின் சஞ்சாரம்!**

ஆகஸ்ட் 24 ஆம் திகதி சுக்ரன் வக்ர இயக்கத்தில் கடக ராசிக்குச் செல்கிறார். இதன் விளைவாக




ஓரளவு நற்பலன்கள் வந்து சேரும். குழந்தைகளின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள்.

அதற்கான சீர்வரிசை சாமான்களையும், தங்கம், வெள்ளி போன்றவற்றை வாங்குவதில் தனிக் கவனம் செலுத்துவீர்கள். மங்கல ஓசை மனையில் கேட்க வழிபிறக்கும்.

**விருச்சிக சனியும், சிம்ம செவ்வாயும்!**

செபரெம்பர் 5 ஆம் திகதி விருச்சிகத்தில் சனி சஞ்சரிக்கப் போகின்றார். அதன்பிறகு செப்ரெம்பர் 17 ஆம் திகதி சிம்மத்தில் செவ்வாய் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவாக தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். துணையாக இருப்பவர்கள் உதவிக்கரம் நீட்டுவர். பாக்கிகள் வசூலாகி பரவசப்படுத்தும்.

பலநாட்களாக நடைபெறாத காரியமொன்று இப்பொழுது நடைபெறும். செவ்வாய் 8-ல் சஞ்சரிக்கப் போவது நல்லதல்ல. நரம்பு, எலும்பு சம்பந்தப்பட்ட வகையில் பாதிப்புகள் ஏற்பட்டு அகலும். இம்மாதம் பிரதோஷ வழிபாடு பெருமை சேர்க்கும்.

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

இம்மாதம் எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படும். இல்லத்தில் உள்ளவர்களின் கோபத்திற்கு ஆளாக நேரிடும். எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது.

பணம் வந்த மறுநிமிடமே செலவாகி விடலாம். பெற்றோர் வழியில் பிரியம் குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். கணவன், மனைவிக்குள் விட்டுக் கொடுத்துச் செல்வதே நல்லது. குழந்தைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக் கொள்ளுங்கள்.

சதுர்த்தியன்று மட்டுமல்ல, சகல நாட்களிலும் பிள்ளையாரை வழிபட்டு பெருமைகளை வரவழைத்துக் கொள்ளுங்கள்.

(தொடரும்)

## யோசித்து செயற்பட்டால் யோகங்கள் வந்து சேரும்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்திய மீனவர்களின் அத்துமீறலை புதிய அரசு தடை செய்ய வேண்டும்

(யாழ்ப்பாணம்)

**இலங்கை கடற்பரப்பினுள் இந்திய மீனவர்கள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதை தடை செய்ய புதிய அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என யாழ். மாவட்ட மீனவ சங்க சம்மேளனத்தின் தலைவர் அந்தோனிப்பிள்ளை எமிலியாம்பிள்ளை தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் இந்திய மீனவர்கள் இலங்கைக்குள் உட்பிரவேசித்தமை எமக்கு பாரிய பிரச்சினையாக இருந்தது.எனினும் குறுகிய காலம் இந்திய மீனவர்களின் வருகை குறைந்திருந்தது. ஆனால் மீண்டும் இந்திய மீனவர்களின் வருகை ஆரம்பித்துள்ளது.

அடுத்து வரும் மாதங்களில் மீன்பிடி தொழில் மேற்கொள்ளக் கூடிய காலமாக இருப்பதால் இந்திய மீனவர் வருகையை தடுத்து நிறுத்த வேண்டும்.

தற்போது இந்திய மீனவர்கள் தாளையடி, வெற்றிலைக்கேணி, கட்டைக்காடு போன்ற பகுதிகளில் அத்துமீறி மீன்பிடியை ஆரம்பித்து விட்டதாக அந்தந்த சங்கங்களால் முறைப்பாடுகள் எமக்கு கிடைக் கப்பெற்றுள்ளது. மீன்பிடிக்கும் காலங்களில் தம்மால் தொழில் செய்ய முடியவில்லை என குற்றம் சாட்டியுள்ளனர்.ஜனாதிபதியுடன் நாம பேச்சுவார்த்தை மேற்கொண்ட போது அவர் கூறியிருந்தார் எல்லை தாண்டி வரும் மீனவர்களை கைது செய்யும் படி.ஆனால் இதுவரையில் ஒன்றும் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

எனவே எல்லை தாண்டி மீன்பிடிப்பவர்களை உடனடியாக கைது செய்வதை உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்.

இந்தியா-இலங்கை பேச்சுவார்த்தை என்று கூறி காலத்தை இழுத்தடிக்காமல் இதற்கு உடனடி தீர்வு கிடைக்க வேண்டும். இந்திய மீனவர்கள் எல்லை தாண்டாமல் இருந்தால் எதுவித பிரச்சினை வரப்போவதுமில்லை, பேச்சுவார்த்தையும் தேவையுமில்லை. இந்தியா -இலங்கை உறவு தொப்புள் கொடி உறவு என்று கூறி எங்களை மயக்க வேண்டாம். றோலர் படகுகளால் அந்த உறவை அறுக்கிறார்கள்.எல்லை தாண்டாமல் உங்கள் எல்லைக்குள் தொழிலை மேற்கொண்டால் பிரச்சினைகள் ஏற்படப்போவதில்லை. கடந்த 30 வருட காலத்தில் இலங்கை மக்கள் பல்வேறு துன்பத்திற்கு ஆளாகியிருந்தோம்.இனிமேலும் எங்களை துன்பப்படுத்த வேண்டாம். எனவே இந்திய மீனவர்கள் இலங்கைக்குள் அத்துமீறி நுழைவதை உடனடியாக தடுத்து நிறுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (இ-9)

## கலை நிகழ்வுகள் அரங்கேறும் அருள்நெறி விழா

இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் கந்த சுவாமி ஆலய உற்சவ காலத்தை முன்னிட்டு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் நடத்தி வருகின்ற யாழ்.மாவட்ட அறநெறிப் பாடசாலை மாணவர்களின் கலைநிகழ்வுகள் அரங்கேறும் அருள் நெறிவிழா தினமும் பிற்பகல் 3மணி தொடக்கம் மாலை 6 மணி வரை நடைபெற்று வருகின்றன.

இதற்கமைய இன்று ஞாயிற்றுக்கிழமை இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப்பணிப்பாளர் திருமதி. ஹேமலோஜினி குமரன் தலைமையில் இடம்பெறவுள்ள அருள்நெறி விழாவில் பிரதம விருந்தினராக சங்கானை, பிரதேச செயலாளர் யு.சோதிநாதன் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளார்.

இதன்போது வரவேற்புரையினை சங்கானை,அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி.ஜெ.அகல்யா நிகழ்த்தவுள்ளார்.கலை நிகழ்வுகளாக கோகுலம் அறநெறிப்பாடசாலை வழங்கும் குழுநடனம்,யோகி கார்த்திகேசு அறநெறிப்பாடசாலை மாணவர்கள், சங்கரத்தை முருகமூர்த்தி அறநெறிப்பாடசாலை மாணவர்களது பேச்சு,துர்க்கையம்மன் அறநெறிப் பாடசாலை கீழ்ப்பிரிவு மாணவர்கள் வழங்கும் நாடகம், தொல்புரம் ஆதி முத்துமாரியம்மன் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் பஜனை,தனி நடனம், மாவடி ஞான வைரவர் அறநெறிப்பாடசாலை மாணவர்கள் வழங்கும் வில்லுப்பாட்டு என்பனவும் இடம்பெறவுள்ளன. (இ-5)

## தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவகாலத்தையொட்டி தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நல்லூர் துர்க்கா தேவி மண்டபத்தில் மாலை 6.45 மணி தொடக்கம் இரவு 8மணி வரை நடைபெற்று வருகின்ற தெய்வீக இசையரங்கில் இன்று ஞாயிற்றுக்கிழமை பொன்னாலை சந்திரபரதகலாலயம் வழங்கும் நடன அரங்கம் நடைபெறவுள்ளது.

இதன்போது நட்டுவாங்கம்-திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன், பாட்டு-திருமதி பங்கயற்செல்வி முகுந்தன், மிருதங்கம்-சி.மகேந்திரன்,கீபோட்-ந.செல்வச்சந்திரன் ஆகியோர் வழங்கவுள்ளனர்.(இ-5)



ஐந்தாம் ஆண்டு புலைமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றும் மாணவர்களுக்கான ஆசீர்வாத நிகழ்வு யாழ். சித்தங்கேணி சிவ சிதம்பரேஸ்வர ஆலயத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது. வீணாகான குருபீட ஸ்தாபகர் சிவஸ்ரீ சபா வாசுதேவ குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் 150 மாணவர்களுக்கு ஆசீர்வாதமும் சிறப்பு வழிபாடும் நடைபெற்றது. சப்ரா கல்வி நிறுவன இயக்குநர் ஜங்கரன் மாணவர்களுக்கான எழுதுகருவியை வழங்கிவைத்தார். (படங்கள்: பொ.சோபிகா)

# பாதுகாப்பு அமைச்சு சட்ட உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பங்கள் கோரல்

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சு சட்ட உத்தியோகத்தர் (நிறைவேற்றுச் சேவை வகுப்பின் III ஆம் தரம்) பதவிக்கு திறந்த அடிப்படையில் ஆட்சேர்த்தல் பதவிக்கான இலங்கை பிரஜைகளிடமிருந்து விண் ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

கல்வி/தொழில்சார் தகைமைகள்- பல்கலைக்கழக மானியங் கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் சட்டம் தொடர்பில் பட்டம் பெற்றிருத்தல் அல்லது உயர் நீதிமன்றத்தில் சட்டத்தரணியொருவராக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல் விண்ணப்பதாரர்கள் விண்ணப்ப முடிவுத் திகதியில் 21 வயதுக்குக் குறையாதவராகவும், 45 வயது க்கு மேற்படாதவராகவும் இருத் தல் வேண்டும்.

செயலாளர், பாதுகாப்பு அமைச்சு, இல. 15/ 5, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு எனும் முகவரிக்கு கிடைக்கக்கூடியவாறு எதிர் வரும் செப்டெம்பர் மாதம் 21 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் பதிவுத்தபாலில் அனுப்பப்பட வேண்டும். இப்பரீட்சைக் கான மேலதிக விபரங்களை நேற்று முன்தினம் வெளியான வர்த்தமானி பத்திரிகையில் பார்வையிடலாம். (இ-7)




நல்லூரானே
எங்கும் அநீதி எங்கே·ஒரு நீதி
என்று தேடிக்காணும் உன் கண்களை
திறந்தருள் புரிவாய் நல்லூர் கந்தா
நல்லவழி எல்லார்க்கும் காட்டிடுவாய்
நல்லை கந்தா



**க.அபர்ணா**
**வட்டுக்கோட்டை**

மாட மாளிகை சூழ்ந்திலங்கும் நல்லைப் பதியுறை வேலனே!
மக்கள் இம்மண்ணில் பட்டுழலும் துயரமதை பாராயோ
கோடானுகோடி மாந்தர்கள் நின் திருத்தலத்தை நாடி
வருகின்றனர்
கொஞ்சமும் உந்தன் மனம் இரங்கவில்லையே எம்மீது
காடாக நாடிங்கு போகிறதே மனிதர் நாயாக அலைந்து
திரிகின்றனர்
கண்ணியமாக நாம் வ்ாழ வழிதேடி உன் திருவருளை
வேண்டுகிறோம்.

**எஸ்.நதிபரன் நல்லூர்**

**நிறைவானவாழ் வெமக்கத் தாருமையா**
அலங்காரக் கந்தனெனும் பெயரோடு-உன்னை
அடியார்கள் தொழுதிடுவர் நிறைவோடு
தலம்வந்து நிதம்பணிவார் தம்மோடு-நாளும்
தண்ணிலவாய் வந்திடையா குமரையா

குறவள்ளி மணங்கவர்ந்த குமரையா- இனியுன்
கோயிலடி மெருகேறும் காணையா
அறப்பணிகள் பலவுமிங்கு அரங்கேறும்-ஆங்கே
அடியார்கள் கூட்டமதும் அலைமோதும்

**செ.சுதாகரன்**
**மட்டுவில் வடக்கு, சாவகச்சேரி**

**நல்லைக் கந்தன் நனிவிருத்தம்**
வேலவா வுன்னை வேண்டி
விழைந்திடு மடியார்க் கெல்லாம்
சாலவே வந்து காத்துச்
சக்தியை நல்கும் தாயே
மாலனின மருகா தொண்டர்
மனத்திருந் தாள்வ தாலே
காலனு மச்சங் கொள்ளும்
கமலனே நல்லைக் கந்தா!



**கலாபூஷணம்,**
**சந்தக்கவிஞர். நவபாலகோபால்**

சரவணா ரெக்ஸ்
SARAVANA TEX
வேறு எங்கும்
கிளைகள் இல்லை
சரவணா ரெக்ஸ்
இல. 526,529, பருத்தித்துறை வீதி, நல்லூர்.
(சிவன் கோவில் அருகில், யாழ்ப்பாணம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னி, யாழ்.தேர்தல் தொகுதிகளில்
# 345876 வாக்குகள் நிராகரிப்பு

## தேர்தல் திணைக்களத் தகவல்படி

(மல்லாவி)

நடைபெற்று முடிந்த 8 ஆவது பாராளுமன்றத் தேர்தலின் போது வன்னி மாவட்டத் தேர்தல் தொகுதிகள் மூன்றிலும் மற்றும் யாழ்ப்பாணம் மாவட்டம் தேர்தல் தொகுதிகள் 11 உள்ளடங்கலாக மொத்தம் 14 தேர்தல் தொகுதிகளிலும் 3இலட்சத்து 4 ஆயிரத்து 11 பேர் வாக்களிப்பில் ஈடுபடாது இருந்ததுடன் வாக்களிப்பில் ஈடுபட்ட 41 ஆயிரத்து 865 வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகளாக இருந்தமையால் மொத்தம் 3 இலட்சத்து 45 ஆயிரத்து 876 வாக்குகள் பயனற்றுப் போயுள்ளதாக தேர்தல்கள் திணைக்களத் தகவல் தெரிவிக்கின்றன.

இது தொடர்பில் தெரியவருவதாவது,

நடைபெற்ற 8 ஆவது பாராளுமன்றத் தேர்தலின் போது கடந்த 2014 ஆம் ஆண்டுக்குரிய வாக்காளர் இடாப்பின்படியே வாக்காளர்கள் வாக்களிப்பில் ஈடுபட்டிருந்தனர்.

இதற்கமைய யாழ்ப்பாணம் மாவட்டத்தின் தேர்தல் தொகுதிகள் 11 இலும் 5 இலட்சத்து 29 ஆயிரத்து 239 பேரும் வன்னித்தேர்தல் மாவட்டத்தின் 3 தொகுதிகளிலும் 2 இலட்சத்து 53 ஆயிரத்து 58 பேருமாக மொத்தம் 7 இலட்சத்து 82 ஆயிரத்து 297 வாக்காளர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.

இந்நிலையில் மொத்த வாக்குகளான 7 இலட்சத்து 82 ஆயிரத்து 297 வாக்காளர்களில் இருந்து 4 இலட்சத்து 78 ஆயிரத்து 286 வாக்காளர்களே இம்முறை வாக்களிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இதில் 41 ஆயிரத்து 865 வாக்குகள் செல்லுபடியற்ற வாக்குகளாக நிராகரிக்கப்பட்டுள்ளன.

4 இலட்சத்து 36 ஆயிரத்து 420 வாக்குகளே செல்லுபடியான வாக்குகளாக இருந்துள்ளன.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 3 இலட்சத்து 10 ஆயிரத்து 335 பேரும் வன்னித் தேர்தல் மாவட்டத்தில் ஒரு இலட்சத்து 67 ஆயிரத்து 951 பேரும் வாக்காளிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இம்முறை நடைபெற்ற பொதுத் தேர்தலில் வன்னி தேர்தல் மாவட்டத்திலேயே அதிக வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இதற்கமைய 16 ஆயிரத்து 641 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.


இதில் வவுனியா மாவட்டத்தில் 6 ஆயிரத்து 423 வாக்குகளும் மன்னார் மாவட்டத்தில் 4 ஆயிரத்து 206 வாக்குகளும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 ஆயிரத்து 12 வாக்குகளும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் 11 தேர்தல் தொகுதிகளிலும் 25 ஆயிரத்து 224 வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மேற்படி தேர்தலில் மக்கள் வாக்களிக்காமல் இருந்தமை மற்றும் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் அதிகரிக்கப்பட்டமை என்பவை தொடர்பாக வடக்கு பகுதியிலுள்ள அரசியல் கட்சிகள், பொது அமைப்புக்கள் என்பன பொதுமக்களுக்கு தேர்தலில் வாக்குமுறை தொடர்பாக தெளிவுபடுத்தி நடைபெறவுள்ள பிரதேச சபைகளின் தேர்தல்களின் போது அதிகூடிய வாக்காளர்கள் சரியான முறையில் வாக்களிப்பில் ஈடுபடுவதற்கு வழிகாட்ட வேண்டும்என சமூக ஆர்வலர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (2-15)




# 9 இலட்சம் ரூபா பெறுமதியான முதிரை மரக்குற்றிகள் பறிமுதல்



(மல்லாவி)

கிளிநொச்சி பொலிஸாரினால் சுமார் 9 இலட்சம் ரூபா பெறுமதியுடைய முதிரை மரக்குற்றிகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதுடன் 2 வாகனங்களை கைப்பற்றியதுடன் அதன் சாரதிகள் இருவரையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். இச்சம்பவம் தொடர்பில் தெரிய வருவதாவது, ஒட்டுசுட்டான் பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நேற்று முன்தினம் காலை பயணித்த இருவாகனங்களை வீதி ரோந்தில் ஈடுபட்ட கிளிநொச்சி பொலிஸார் மறித்துள்ளனர்.

இதன்போது வாகனங்கள் இரண்டினையும் பொலிஸார் சோதனைக்குட்படுத்திய போது அதனுள் முதிரை மரக்குற்றிகள் இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.

இதனையடுத்து வாகனங்கள் பொலிஸாரினால் பறிமுதல் செய்யப்பட்டதுடன் சாரதிகளையும் கைது செய்தனர். இதேவேளை இடைமறிக்கப் பட்ட இருவாகனங்களும் தப்பிச் செல்லமுற்பட்ட வேளை பொலிஸாரின் துரித நடவடிக்கையினால் கைப்பற்றப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தகவல் தெரிவிக் கின்றது.

சந்தேக நபர்கள் இருவரும் கிளிநொச்சி மாவட்ட நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (2-15)

## கடத்திய குற்றச்சாட்டில்
# ஈடுபட்ட சந்தேக நபர்கள் 9பேருக்கு விளக்கமறியல்

(மல்லாவி)

கிளிநொச்சி பிரதேசத்தில் நபர் ஒருவரைக் கடத்திய குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 9பேரையும் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிமன்ற நீதிபதி எம்.ஐ.வகாப்தீன் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பில் தெரிய வருவதாவது,

கிளிநொச்சி பிரதேசத்தில் நபர் ஒருவரை கடத்திய குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் 9 பேர் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

ஏ-32 பாதை வழியாக பூநகரியில் இருந்து மன்னார் நோக்கி பயணித்த டிபென்டர் ரக வாகனம் சோதனைக்குட்படுத்தப்பட்ட போது சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவிக்கினறனர்.

கடத்தப்பட்டவர், சந்தேக நபர்கள் பயணித்த வாகனத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளதுடன் சம்பவம் தொடர்பாக அவரிடம் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

எவ்வாறாயினும் கடத்தப்பட்ட நபர், கேரளா கஞ்சா தருவதாக கூறி மூன்று இலட்சம் ரூபாவை பெற்றுக் கொண்டுள்ளதாக ஆரம்ப கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

எனினும் கஞ்சாவை வழங்காத காரணத்தினால், தாம் அவரை கடத்திச் சென்றதாக சந்தேக நபர்கள்9 பேரும் பொலிஸாரிடம் கூறியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட 9 பேரும் கிளிநொச்சி நீதிமன்ற நீதிபதி எம்.ஐ. வகாப்தீன் முன்னிலையில் பிற்பகல் 2 மணியளவில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். வழக்கினை விசாரணை செய்த நீதிபதி சந்தேக நபர்களை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 4ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார். (2-15)

# மஞ்சள் கோடு வழியாக சென்ற முதியவரை கார் மோதித்தள்ளியது

(திருவையாறு)

வீதியில் போடப்பட்ட மஞ்சள் கோடு வழியாக நடக்க முயன்ற முதியவரை ஏ-9 வீதியூடாக வேகமாகப் பயணித்த கார் மோதியதில் அவர் காயம் அடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.



இச் சம்பவம் நேற்று முற்பகல் 10 மணியளவில் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றுக்கு முன்பாக அமைக்கப்பட்டுள்ள மஞ்சள் கோட்டு கடவையில் இடம்பெற்றது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு நோக்கி ஏ-9 வீதியூடாக வேகமாக பயணித்த கார் வீதியில் போடப்பட்ட மஞ்சள் கோடு வழியாக நடக்க முயன்றமுதியவரைமோதித்தள்ளியது.

இதனால் பிரஸ்தாப நபர் காயம் அடைந்த நிலையில் மேற்படி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

தகவலறிந்த கிளிநொச்சி பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்து சாரதியைக் கைது செய்தததுடன் விசாரணைகளையும் மேற்கொண்னர். (2-273)

## ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து
# மன்னார் மீன் வியாபாரிகள் சங்கத்தினர் அடையாள வேலை நிறுத்தப்போராட்டம்

(மல்லாவி)

மன்னார் நகர சபைக்குட்பட்ட நவீன மீன்சந்தை சுகாதார சீர்கேடாக காணப்படுவதாகவும் அதனை சீர்செய்து தருமாறு மன்னார் நகர சபைக்கு பல தடவைகள் அறிவித்தல் விடுக்கப்பட்டும் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

இதனைக் கண்டித்து மேற்படி நவீன மீன்சந்தை மீன்வியாபாரிகள் சங்கத்தினர் ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த அடையாள வேலை நிறுத்தப்போராட்டம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது. இது தொடர்பில் தெரிய வரு வதாவது,

மன்னார் நகர சபை செயலாளருக்கு மேற்படி நவீன சந்தை மீன் வியாபாரிகள் அண்மையில் மகஜர் ஒன்றையும் வழங்கியிருந்தனர்.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

மீன்சந்தையானது 22.05.2000 ஆம் ஆண்டு இயங்க ஆரம்பித்தது முதல் வருடாவருடம் பல இலட்சம் ரூபா கேள்விப்பத்திரம் மூலம் மீன் சந்தை ஏலம் விடப்படுகின்றது.

மேற்படி சந்தையானது மன்னார் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட காலப்பகுதியிலும் தற்போது நகரசபையாக தரம் உயர்த்தப்பட்ட போதிலும் 15 வருடங்களாக வர்ணம் தீட்டப்பட்டோ அல்லது கட்டடத்திற்கான சீர்திருத்தப் பணிகளோ மேற்கொள்ளப்படாத நிலையில் சுகாதார சீர்கேடாகவும் அடிப்படை வசதிகள் குறைந்தும் காணப்படுகின்றது.

மேலும் சந்தைக்கு அருகாமையில் மரக்குற்றி மாட்டிறைச்சி, கோழி இறைச்சி ஆகிய கடைகள் உட்பட சிற்றுண்டிச்சாலை ச.தொ.ச விற்பனை நிலையம் என்பன காணப்படுகின்ற நிலையில் இப்பகுதி சுகாதார சீர்கேடாக இருப்பதை பொது சுகாதார பரிசோதகர்களின் ஆய்வின் மூலம் கண்டுபிடிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து குறித்த மீன்சந்தையை சுகாதாரத்திற்கு ஏற்ற வகையில் மாற்றி அமைக்காது விடின் சந்தை வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்ப டும் என கடந்த 20 ஆம் திகதி வியாழக்கிழமை பொது சுகாதார பரிசோதகர்களினால் எச்சரிக்கை விடப்பட்டது.

இதனையடுத்து நேற்று முன்தினம் சந்தை வியாபாரிகள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது மலசலகூட வசதி, தண்ணீர் வசதி, மின்சார வசதி, மீன் சந்தைக்கு வர்ணம் தீட்டல், மீன்சந்தையின் நுழைவாயில் பகுதியில் மழை காலங்களில் நீர் தேங்கி நிற்கும் பகுதியை சீர் செய்தல் போன்ற ஐந்து அம்சக்கோரிக்கைகளை முன்வைத்து நகரசபையினர் இதனைச் சீர் செய்து தரவேண்டுமென மகஜர் ஒன்றையும் மீன்சந்தை வியாபாரிகள் சங்கம் மன்னார் நகரசபை அதிகாரிகளிடம் கையளித்துள்ளனர்.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தினால் சந்தை வாடிக்கையாளர்கள் கடலுணவுகளை கொள்வனவு செய்ய முடியாமல் ஏமாற்றத்துடன் திரும்பியதை காணக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. (2-15)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துணிச்சலான நேர்வழியில் வாழ்ந்தால் பிரச்சினைகளும் கவலைகளும் மட்டுமல்ல, எதிரிகளும் அமைதியாகி விடுவார்கள். – நேருஜி

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஜனாதிபதி மைத்திரியின் மகா இராஜதந்திரம்

தமிழ் நாட்டின் முதல்வராக இருந்த கர்மவீரர் காமராஜர் படியாத மேதை என்று புகழப்பட்டவர். மக்கள் பணி என்பதைத் தவிர தன்னலம் என்பது சிறிதும் அறியாச் செம்மல்.

எந்த விடயத்தைப் பற்றி கதைத்தாலும் முடியாது என்று அவர் ஒருபோதும் கூறுவது கிடையாது. **ஆகட்டும் பார்க்கலாம்** என்பதே அவரின் பதில். காமராஜரின் ஆகட்டும் பார்க்கலாம் என்ற சொற்பதத்தை பலரும் உச்சரிப்பது உண்டு.

தன்னடக்கம், பொறுமை, நிதானம் என்ற அத்தனை பண்புகளுக்கும் காமராஜர் சொந்தக்காரராக இருந்தார். இது போன்ற தலைவர்களின் இராஜதந்திரமே இந்த உலகில் இன்றுவரை பேசப்படுகிறது.

அந்த வகையில் இலங்கையின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஒரு வித்தியாசமான தலைவராகக் காணப்படுகிறார். நாட்டில் அமைதி, சமாதானம் என்பவற்றின் அடிப்படை அவரின் பொறுமையும் நிதானமும் என்பது உணரப்பட வேண்டும்.

மகிந்த ராஜபக்ஷ தேர்தலில் நின்றபோது அதனை அவர் தடுக்கவில்லை. அதேநேரம் கட்சியின் தலைமைப் பதவி என்பதனையும் அவர் விட்டுக் கொடுக்கவில்லை.

தேர்தல் முடிந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெரும்பான்மைப் பலத்தை பெறாத போதிலும் அந்தக் கட்சிக்குக் கிடைத்த தேசியப்பட்டியல் எம்.பிக்களை கட்சித் தலைவர் என்ற வகையில் தானே நியமிப்பேன் என்று மைத்திரி அறிவித்த போது மகிந்த ராஜபக்ஷவின் அத்தனை முயற்சிகளையும் மைத்திரி மிக எளிமையாகத் தட்டி விட்டார் என்பது தெளிவாகிறது.

எதிலும் நிதானம், பொறுமை என்பவற்றைக் கடைப் பிடிப்பதன் காரணமாக ஜனாதிபதி மைத்திரியின் இராஜதந்திரம் உச்சப் பயனைத் தருகிறது. இதற்கு மேலாக ஜனாதிபதி மைத்திரியின் மிகப் பெரிய இராஜதந்திரம் அங்கஜன் இராமநாதனுக்கு தேசியப் பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினர் நியமனம் வழங்கியமையாகும்.

வடக்கில் ஐக்கிய தேசியக் கட்சி ஓர் ஆசனத்தை பெற்றிருக்கும்போது ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி என்ற கூட்டுக் கட்சியின் ஊடாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியையும் வடக்கில் கட்டி எழுப்ப வேண்டும் என்று கருதிய ஜனாதிபதி மைத்திரி, அங்கஜனுக்கு தேசியப் பட்டியலில் நியமன எம்.பியை கொடுத்துள்ளார்.

2010ஆம் ஆண்டு நடந்த பாராளுமன்றத் தேர்தலின் போது அங்கஜன் இராமநாதன் யாழ்.மாவட்டத்தில் போட்டியிட்டு தோல்வி கண்டிருந்தார். எனினும் அப்போது மகிந்த ராஜபக்ஷ அங்கஜனுக்கு தேசிய பட்டியலில் இடம்கொடுப்பது பற்றிச் சிந்தித்திருக்கவில்லை.

அன்று மகிந்த ராஜபக்ஷ அங்கஜனுக்கு தேசிய பட்டியலில் எம்.பி பதவி கொடுத்திருந்தால், இன்று அங்கஜன் யாழ்ப்பாணத்தில் வெற்றி பெறுவதற்குச் சாத்தியமாக இருந்திருக்கும்.

ஆக, வடபுலத்தில் தனது கட்சிப் பலத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்று மகிந்த நினைக்காத போதிலும், ஜனாதிபதி மைத்திரி அந்த விடயத்திலும் மிகக் கவனமாகச் செயற்பட்டுள்ளார். மகிந்தவுடன் மிக நெருக்கமாக இருந்த அங்கஜன், ஜனாதிபதி மைத்திரியுடன் சேர்ந்து கொண்ட போது அதுபற்றி எந்தக் கிலேசமும் அடையாமல் அங்கஜனுக்கு எம்.பி பதவி கொடுத்த மைத்திரியின் இராஜதந்திரத்திற்கு தமிழ் அரசியல் தலைமைகள் எங்ஙனம் ஈடுகொடுக்கப் போகின்றன? என்பது தெரியவில்லை.

பழைய சைக்கிளை தூக்கி எறியுங்கள் என்று கூறிய முதியவர் சம்பந்தர் வடக்கில் வெற்றிலை தழைக்கப் போவதை அறியாமல் இருந்ததுதான் மிகப் பெரிய அபத்தம்.

# ஸ்ரீமதி சடையம்மாவின் குருபூசை தினம்



ஈழத்து முதற்பெண் சித்தர் நல்லூர் ஸ்ரீமதி சடையம்மாவின் 79 ஆவது குருபூசைத்தினம் இன்றாகும்.

சிவபூமி என திருமூலரால் சிறப்பிக்கப்பட்ட ஈழத்தில் ஆன்மிக நெறியை வளர்ப்பதில் நல்லூர் தனித்துவம் பெற்ற இடமாகும்.

இந்நல்லூரில் வாழ்ந்து நகுலேச்சரத்தில் சமாதியாகிய சடையம்மா, திருநெல்வேலி கிழக்கில் முருகனை முழுமுதற் கடவுளாகப் போற்றும் உப சுப்பிரமணிய மரபு என வேதாகமங்களில் போற்றப்பட்ட செங்குந்த குலமரபில் வீரகத்திப்பிள்ளை சின்னாச்சிப்பிள்ளை தம்பதியினருக்கு மகளாக 19.08.1865 ஆம் ஆண்டு ரோகினி நட்சத்திரத்தில் முத்துப்பிள்ளை என்ற திருநாமத்துடன் அவதரித்தார்.

கதிரேசு என்பவரை வாழ்க்கைத் துணைவராக ஏற்ற இவர் இரு பெண் பிள்ளைகளின் தாயாகி குறிப்பிட்ட காலத்தில் இல்லற வாழ்வை நீக்கி தலைப் பட்டார் நங்கை தலைவன் தாளே என்ப தற்கமைய நல்லூரானையே தஞ்சம் என நம்பி நல்லூர் தேரடியில்மடம் அமைத்து முழுமைத்துறவுபூண்டுபணிபுரிந்தார்.

நல்லூரில் இருந்து முருகனது அருளைப் பெற்ற இவர் நகுலேச்சரம், கதிர்காமம், நல்லூர், திருச்செந்தூர் ஆகிய இடங்களில் மடமமைத்து பணி புரிந்தார்.

ஈழத்துச் சித்தர் சடையம்மாவின் வாழ்க்கை வரலாற்றை சரவணை ஸ்ரீமான் ஆ.தில்லைநாதபிள்ளை என்பவர் அறுபது பாக்களில் அமைத்துள்ளார்.

இப்பாக்கள் 1957 இல் சோ.சபாபதிப்பிள்ளை என்பவரது முகவுரையுடன் திருச்செந்தூர் ஆர். நெல்லை வடிவேற்பிள்ளையின் அணிந்துரையுடன் சிறு நூலாக வெளிவந்துள் ளது.

போற்றப்படவேண்டிய 05.08.1936 ஆம் ஆண்டு சுக்கிரவார அனுஷ நட்சத்திரத்திலே குறிப்பிட்டபடி உச்சி வீங்கி வெடித்து சமாதி அடைந்தார்.

இவரது குருபூசை திருநெல்வேலி கிழக்கு அருள்மிகு வெள்ளைப் பிள்ளையார் ஆலய சடையம்மா மடத்திலே சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

**சி.பத்மராஜா**

## தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கு வடக்கிலிருந்து 19061 மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

நாடளாவிய ரீதியில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு வடமாகாணத்தில் இருந்து 19 ஆயிரத்து 61மாணவர்கள் தோற்றவுள்ளனர் என வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் விளையாட் டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் செயலாளர் இ.இரவீந்திரன் தெரிவித்துள்ளார். (இ-5)

# தேசியப் பட்டியலில் பெண்களுக்கு அநீதி

## கபே அமைப்பு குற்றச்சாட்டு

(கொழும்பு)

தேசியப் பட்டியலில் பெண்களுக்கு போதுமான அளவு பிரதிநிதித்துவம் வழங்கப்படவில்லை என, கபே அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கீர்த்தி தென்னக்கோன் தெரிவித்துள்ளார்

நடைபெற்று முடிந்த தேர்தலின் பிரகாரம்,ஒரு பெண்ணுக்கு மாத்திரமே தேசியப் பட்டியலில் இடம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மேலும் கடந்த பொதுத்தேர்தலிலும் பார்க்க இத்தேர்தலில், பெண்களுக்கான பிரதிநிதித்துவம் வெகுவாக குறைந்துள்ளதாக கபே அமைப்பு மேலும் சுட்டிக் காட்டியுள்ளது. (இ-7)

# பகிர்வுப் புதுமை மீண்டும் பாரெங்கும் பரவட்டும்

இயேசு நிமிர்ந்து பார்த்து மக்கள் பெருந்திரளாய் தம்மிடம் வருவதைக் கண்டு, “இவர்கள் உண்பதற்கு நாம் எங்கிருந்து அப்பம் வாங்கலாம்?” என்று தம்சீடரான பிலிப்பிடம் கேட்டார். பிலிபபு மறு மொழியாக, ‘இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கு ஒரு சிறு துண்டும் கிடைக்காதே” என்றார். அவருடைய சீடருள் ஒருவரான அந்திரேயா, இங்கே சிறுவன் ஒருவன் இருக்கிறான். அவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன.’ஆனால் இத்தனை பேருக்கு இவை எப்படிப் போதும்?” என்றார். இயேசு, ‘மக்களை அமரச் செய்யுங்கள்” என்றார். அப்பகுதி முழுவதும் புற்தரையாய் இருந்தது. அமர்ந்திருந்த

## பரமபிதா காட்டிய பாதை


ஆண்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஐயாயிரம். இயேசு அப்பங்களை எடுத்துக் கடவுளுக்கு நன்றி செலுத்தி அமர்ந்திருந்தோருக்குக் கொடுத்தார். அவ்வாறே மீன்களையும்பகிர்ந்தளித்தார். அவரகளுக்கு வேண்டியமட்டும் கிடைத்தது.’அவர்கள் வயிறார உண்டபின், ஒன்றும் வீணாகாதபடி, எஞ்சிய துண்டுகளைச் சேர்த்து வையுங்கள்” என்று தம் சீடரிடம் கூறினார். மக்கள் உண்டபின் ஐந்து வாற்கோதுமை அப்பங்களிலிருந்து எஞ்சிய துண்டுகளைச் சேர்த்துச் சீடர்கள் பன்னிரண்டு கூடைகளில் நிரப்பினார்கள்.

பிரச்சினைகளுக்கான உண்மைத் தீர்வு பணத்தால் கிடைத்து விடுவதல்ல. அல்லது அறிவுத் திறமையால் சாதித்து விடக்கூடியவையும் அல்ல. பல சநதர்ப்பங்களில் நாம் இப்படித்தான் பணத்தை வைத்து தீர்க்கப் பார்க்கிறோம். பத்துப்பேரை வைத்து சாதிக்கலாம் என நினைக்கிறோம். பிரச்சினைகளுக்குத் தீர்வுதருவதாக கூறி பணத்தை விரயமாக்கியவர்களை நாம் மிக அண்மையில் பார்த்திருக்கின்றோம். இன்றுவரை [illegible] 5000 பேர். பெண்கள், குழந்தைகள் என பலர் அங்கிருந்திருக்கக் கூடும். பெரிய மூன்று நாட்கள் பசியாக இருக்கும் இவ்வளவு கூட்டத்திற்கு, ஒரு வனாந்தரத்தில், அக்கம் பக்கம் ஆள் அரவம் இல்லாத இடத்தில்,உணவு கொடுக்க வேண்டும். இது அன்று ஒருபெரிய பிரச்சினை.

பணத்தால் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண முற்பட்டால், பிலிப்பு சொன்னதுபோல இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கினாலும் ஆளுக்கு ஒரு சிறு துண்டும் கிடைக்காது. இரண்டாவதாக, பணத்தை வைத்து அல்லது பணத்தைக் கொடுத்து, சோறு போட்டு, அரிசி கொடுத்து, பணம் கொடுத்து, இன்னும் கையூட்டுக்கள்கொடுத்து செய்யும் முயற்சிகள் எல்லாம் பிரச்சினைகளுக்குத் தீர்வு தருவதல்ல.அவை பிரச்சினைகளை பின் விளைவுகளோடு மேலும் பெரிதாக்குபவை.

ஆகவே அந்திரேயா காட்டிய வழியே சரியானது. ‘இங்கே ஒரு சிறுவன் இருக்கிறான். அவனிடம் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன” என அடையாளம் காட்டி, அனைவரின் பங்களிப்புக்கும் அடித்தளமிடுகிறார். கடவுளுக்கு நன்றி செலுத்திய தன் வழியாக ஆன்மீகத்தை ஏற்படுத்தி, அனைவரையும் தங்களிடம் இருப்பதைப் பகிர்ந்துகொள்ளும் பண்பாளர்களாக்குகிறார். பசி பிரச்சினை பறந்தோடுகிறது. ஆகவே ஆன்மீகத்தை அனைத்துப் பிரச்சினையினுள்ளும் அனுமதிப்போம். தீர்வு காண்போம்.

ஒரு சிறுவன் ஆரம்பித்த பகிர்வு, ஒரு பெரிய விருந்தை ஆரம்பித்து வைத்தது. இயேசு அன்று நிகழ்த்தியது ஒரு பகிர்வின் புதுமை. நாம் வாழும் இன்றைய உலகில் இந்த புதுமை அதிகம் தேவைப்படுகிறது. இத்தனை வளங்களும் நவீன வசதிகளும் நிறைந்த இன்றைய உலகில் இன்னும் ஆயிரமாயிரம் மக்கள் பசியிலும் பட்டினியிலும் மடிகின்றார்கள். அண்மையில் கிடைத்த ஒரு புள்ளி



வபரத்தின் படி, ஒவவொரு நாளும் 3.6 நொடிக்கு ஒருவர் பட்டினியால் இறக்கின்றார். உலகத்தின் இன்றைய மக்கள் தொகை 680 கோடி.

உலகில் தினம தினம் உற்பத்தியாகும் உணவு 720 கோடி மக்கள் உண்பதற்கு தேவையான அளவு உள்ளது. இந்த நிலையில், ஒவ்வொரு ஆண்டும் 130 கோடிக்கும் மேலாக மக்கள் பட்டினியில் வாடுகின்றனர். 30 இலட்சம் மக்கள் ஒவ்வொரு ஆண்டும் பசி பட்டினியால் இறக்கின்றனர். இவர்களில் பெரும் பாலோனோர் குழந்தைகள்.

இந்த தேவையற்ற மரணங்கள் நிறுத்தப்பட வேண்டுமானால், இயேசு அன்று ஆற்றிய பகிர்வுப் புதுமை மீண்டும் உலகமெல்லாம் நடைபெற வேண்டும். இயேசு இன்று நம்மிடையே வந்தால் உணவை இன்னும் பலுக செய்வதைவிட இருக்கும் உணவைப் பகிர்ந்து கொள்ளும் புதுமையைச் செய்வார். தனி ஒருவனுக்கு உணவு இல்லையெனில் உலகத்தை அழிப்போம் என்று கோபத்தில் அன்று சொன்னார் பாரதி. உலகத்தை அழிப்பது எளிது. உலகத்தை வாழ வைக்க, வளப்படுத்த பகிர்ந்துண்ணும் மனதை நமக்கு தர வேண்டும் என இறைமகனிடம் வேண்டுவோம். முன்னேற்றத்தின் பெயரால் உலகத்தையும் இயற்கையையும் அழிப்பதை நிறுத்திவிட்டு, உலகைவளப்படுத்த அறிவைவளர்ப்போம். உலகெலாம் அபரிமிதமாய் நிறைந்து இருப்பதை அனைவருக்கும் பகிர்வோம். அனைவரும் நிறைவான அதிசய வாழ்வை வாழ்வோம்.!

**ம.பிரான்சிஸ்க்**
**கத்தோலிக்க சுதந்திரப் பத்திரிகையாளர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜொலிஸ்ரார் வெற்றிக்கிண்ணம்-2015

# ஹாட்லியைற்ஸ் 2வது சுற்றுக்குத்தகுதி



ஜொலிஸ்ரார் வெற்றிக் கிண்ணத்திற்காக ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் வருடாவருடம் நடத்தும் 30 பந்து பரிமாற்றங்களை கொண்ட துடுப்பாட்ட சுற்றுப் போட்டியின் முதலாவது சுற்றில் 5 ஆவது போட்டியில் ஹாட்லியைற்ஸ் அணி ஓல்ட்கோல்ஸ் அணியை 86 ஓட்டங்களால் வெற்றி பெற்று 2 ஆவது சுற்றுக்கு தகுதி பெற்றது. நாளைய சுழற்சி நிகழ்வில் வெற்றி பெற்ற ஹாட்லியைற்ஸ் அணி 30 ஓவர்களில் 9 இலக்குகளை இழந்து 231 ஓட்டங்களை பெற்றனர். கரிகரன்-41,சாகித்தியல்-42, நிதர்ஸன்-25, தீபன்-23,சதீஸ்-53 ஓட்டங்களை பெற்றனர்.

களத்தடுப்பில் களமிறங்கிய ஓல்ட் கோல்ஸ் அணி சார்பாக கோபிநாத்-01,நிரோஸன்-04,நிமால்-02, சிறிகுகன்-01 இலக்குகளை கைப்பற்றினர்.

பதிலுக்கு களமிறங்கிய ஓல்ட் கோல்ஸ் அணி 21 ஓவர்களில் சகல இலக்குகளையும் இழந்து 145 ஓட்டங்களை பெற்றது. மதூஸன்- 50, நிரோஸன்-42 ஓட்டங்களை பெற்றனர். களத்தடுப்பில் ஹாட்லியைற்ஸ் அணி சார்பாக பிரதீஸ்-02, பிரசாத்-08 இலக்குகளை கைப்பற்றினர். இப்போட்டியில் வெற்றி பெற்ற ஹாட்லியைற்ஸ் அணி, றெயின்போ அணியுடன் கலந்து கொள்வார்கள். இப் போட்டியின் மூலம் யாழ்.சென்றல் விளையாட்டுக்கழகத்தின் தரவரிசைப்பட்டியலுக்கு ஹாட்லியைற்ஸ் அணி 6.31 புள்ளிகளையும் ஓல்ட்கோல்ஸ் அணி 2.31 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன. (க)

## தொண்டைமானாறு ஒற்றுமையை வென்றது வடக்கு நக்கீரன் விளையாட்டுக் கழகம்



நெற்கொழு கழுகுகள் வி.க நடத்தும் வடமாகாண ரீதியான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியில் 21.08.2015 அன்று நடைபெற்ற முதலாவது போட்டியில் தொண்டைமானாறு ஒற்றுமை வி.க. எதிர் அல்வாய் வடக்கு நக்கீரன் வி.க சந்தித்தன.

போட்டியின் முதல் பாதி ஆட்டத்தின் 13 ஆவது நிமிடத்தில் தொண்டைமானாறு ஒற்றுமை வீரர் மணிவண்ணன் கோலினை உட்செலுத்தியதன் மூலம் விறுவிறுப்பை ஏற்படுத்தினார்.

இதனை தொடர்ந்து சுதாகரித்துக்கொண்ட நக்கீரன் வீரர்கள் இரண்டாவது பாதியின் 09 ஆவது நிமிடத்தில் ஒரு கோலினை அடிக்க ஆட்டம் 1:1 என்ற கோல் கணக்கில் மீண்டும் சமநிலையானது.

ஆட்ட நேர முடிவில் சமநிலை தவிர்ப்பு உதைகள் தலா 5 வழங்கப்பட்டது. இதில் 5 : 3 என்ற கோல் கணக்கில் நக்கீரன் வெற்றி பெற்று மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியது. (க)

## இன்றைய போட்டிகள்

மாதனை விளையாட்டுக்கழகம் நடத்தும் மென்பந்துப்போட்டியில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8மணிக்கு நடைபெறவுள்ள முதல் போட்டியில் மத்தொனி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து லம்பொதரா விளையாட்டுக்கழகமும் காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ள இரண்டாவது போட்டியில் மல்லாகம் சிறிமுருகன் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கரவெட்டி ஐங்கரா விளையாட்டுக் கழகமும் காலை 11.30 மணிக்கு நடைபெறவுள்ள போட்டியில் கொட்டடி இளந்தளிர் விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து கொக்குவில் பொற்பதி விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளது. (க)

வலம்புரி SPORTS விளையாட்டுச் செய்திகள்

## இசைப்புயல் ரஹ்மானும் கிரிக்கெட் ஜாம்பவானும் சந்திப்பு!



இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் டெண்டுல்கர், இசைப்புயல் ஏ.ஆர்.ரஹ்மானை நேற்று அவரது வீட்டில் சந்தித்து பேசினார்.

சென்னையில் எம்.ஆர்.எப். பவுண்டேசன் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பங்கேற்க இந்திய கிரிக்கெட் ஜாம்பவான் சச்சின் நேற்று சென்னை வருகை தந்தார். பின்னர் இசை அமைப்பாளர் ஏ.ஆர். ரஹ்மானை அவரது வீட்டுக்குச்சென்று சச்சின் சந்தித்தார். அப்போது ஏ.ஆர். ரஹ்மானின தாயாரும் உடன் இருந்தார்.

இந்த சந்திப்பின் போது ஏ.ஆர். ரஹ்மான் இசை அமைக்கும் விதம் குறித்து சச்சின் நேரில் பார்த்தார். சச்சினுக்கு சில ரியூன்களை ஏ.ஆர். ரஹ்மான் இசையமைத்து காண்பித்தார். சந்திப்பு முடிந்ததும், தான் ஏ.ஆர். ரஹ்மானின் தீவிர ரசிகர் என்றும், மரியாதை நிமிர்த்தமாக சந்திக்க வந்ததாகவும் சச்சின் கூறினார். (க)

# நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக்கழக வடமாகாண ரீதியிலான உதைபந்தாட்டம்

மூன்றாம் சுற்றுக்கு முன்னேறியது அந்தோனியார் அணி





நெற்கொழு கழுகுகள் வி.க நடத்தும் வடமாகாண ரீதியான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இரண்டாவது உதைபந்தாட்ட சமரில் வடமராட்சியின்பலம்வாய்ந்த அணியான திக்கம இளைஞர்வி.க. எதிர்த்து மன்னார்அந்தோனியார்புரம் வி.க. மோதியது.

முதல் பாதி நேர ஆட்டத்தின் 14 ஆவது நிமிடத்தில் ஜெயக்குமாரன் சிறப்பான ஆட்டம் மூலம் கோல் ஒன்றை பெற்றுக் கொடுத்தார்.

திக்கம் இளைஞர்களின் பல முயற்சிகளை இலாபகமாக முறியடித்த மன்னார் அந்தோனியார்புரம் இரண்டாவது பாதியின் 10 ஆவது 12 ஆவது நிமிடங்களில் முறையே சுதாசன், அஜின்ரன் ஆகியோர் கோல்களை பெற்றதன் மூலம் 3 : 0 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

சிறப்பான ஆட்டத்தினை வெளிபடுத்தியதுடன் 1 கோலையும் அடித்த சுதர்சன் ஆட்ட நாயகன் பட்டத்தினை தனதாக்கிகொண்டார். இவருக்கான பதக்கத்தினை ஓய்வு நிலை ஆசிரியர் சதாசிவம் அணிவிக்க அணிக்கான பரிசினை உப அதிபர் ஸ்ரீசந்திரா வழங்கி கௌரவித்தார். (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மத்யூஸ் சதம்

# சங்காவின் கடைசி டெஸ்ட் இந்திய அணி முன்னிலை

அணித் தலைவர் அஞ்சலோ மத்யூஸ் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் அடித்த 6 ஆவது சதமும், திரிமன்னேயின் அரைச் சதமும் (62), இந்திய பந்துவீச்சாளர்களுக்கு நேற்றைய 3ஆம் நாளின் முதலாவது செசனில கலக்கத்தை ஏற்படுத்தியிருந்த போதிலும்,

அதன்பின் போட்டியின் 2ஆவது செசனில் இந்திய பந்துவீச்சாளர்களின் கைஓங்க இலங்கை அணி தனது எஞ்சிய 7 விக்கெட்டுக்களை வெறும் 65 ஓட்டங்களுக்கு பறிகொடுத்து 306 ஓட்டங்களுக்கு பரிதாபகரமாக ஆட்டமிழந்தது.

அதன்பின் தனது 2ஆவது இன்னிங்ஸை ஆடிவரும் இந்திய அணி நேற்றைய 3ஆவது நாள் ஆட்டநேர முடிவில் ஒரு விக்கெட்டை இழந்து 70 ஓட்டங்களை எடுத்து 157 ஓட்டங்களால் முன்னிலையில் உள்ளது.


இந்தியா- இலங்கை கிரிக்கெட் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட் போட்டி கொழும்பு பி.சாரா மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் நாணயசுழற்சியில் வென்ற இந்திய அணியின் தலைவர் விராட் ஹோலி, துடுப்பெடுத்தாட முடிவு செய்தார். அதன்படி துடுப்பெடுத்தாடிய இந்திய அணி முதல் இன்னிங்சில் 393 ஓட்டங்கள் எடுத்தது.

ராகுல் (108) சதம் அடித்தார். அணித் தலைவர் விராட் ஹோலி (78), ரோஹித் (79), சஹா (56) ஆகியோர் அரைசதம் எடுத்தனர்.

இலங்கை தரப்பில், ஹேரத் 4, பிரசாத், மத்யூஸ், சமீர ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து களமிறங்கிய இலங்கை





அணி நேற்றைய 2ஆம் நாள் ஆட்ட முடிவில் 3 விக்கெட்டுக்களை இழந்து 140 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

மத்யூஸ் 19 ஓட்டங்களுடனும், திரிமன்னே 28 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர்.

நேற்று 3ஆவது நாள் ஆட்டம் நடந்தது. தொடர்ந்து விளையாடிய திரிமன்னே, அணித தலைவர் மத்யூஸ் பொறுப்பாக விளையாடி ஓட்டங்கள் சேர்த்தனர்.

இந்த ஜோடி 4ஆவது விக்கெட்டுக்கு 127 ஓட்டங்கள் குவித்தது. நிதானமாக விளையாடி வந்த நிலையில் திரிமன்னே 62 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

மறுமுனையில் நிலைத்து நின்று ஆடிய மத்யூஸ் (102) சதம் அடித்தார். அடுத்து களமிறங்கிய சந்திமால் (11), பிரசாத் (5) வரிசையாக ஆட்டமிழந்தனர்.

முபாரக் (22) ஓரளவு நிலைத்து நின்று ஆடிய போதிலும், ஹேராத் (1), கௌஷல் (6) அடுத்தடுத்து வெளியேறினர்.

இதனால் இலங்கை அணி 306 ஓட்டங்களுக்கு அனைத்து விக்கெட்டையும் இழந்தது. சமீர (0) களத்தில் இருந்தார்.

இந்தியா தரப்பில், மிஸ்ரா 4, இஷாந்த், அஸ்வின் தலா 2, யாதவ், பின்னி தலா 1 விக்கெட்டை வீழ்த்தினர்.

இதைத் தொடர்ந்து 2ஆவது இன்னிங்சை தொடங்கிய இந்திய அணியின் தொடக்க ஆட்டக்காரர் ராகுல் (2) பிரசாத்தின் அபார பந்தில் போல்ட் ஆனார்.

நேற்றைய 3ஆவது நாள் ஆட்டநேர முடிவில் இந்திய அணி 29.2 ஓவர்களில் ஒரு விகெட் இழப்புகளு 70 ஓட்டங்கள் எடுத்துள்ளது.

ரஹானே (28), முரளி விஜய் (39) நிதானமாக விளையாடி வருகின்றனர்.

போட்டியின் நான்காம் நாள் ஆட்டம் இன்றாகும். (க)

# தேசிய பட்டியல் முறுகல் சம்பந்தனின் வீடு முற்றுகை

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் வீட்டினை கட்சி ஆதரவாளர்கள் முற்றுகையிட்டுள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசிய பட்டியல் தொடர்பில் தொடர்ச்சியாக இழுபறி நிலை ஏற்பட்டுள்ள நிலையில் தேசிய பட்டியல் தொடர்பில் நேற்று உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டிருந்த நிலையில் இரா.சம்பந்தனின் வீட்டினை வடக்கு மற்றும் கிழக்கினைச் சேர்ந்த கட்சி ஆதரவாளர்கள் பலமணி நேரமாக முற்றுகையிட்டுள்ளனர்.

இதன்போது, தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படவுள்ள உறுப்பினர்களில் தமது கட்சிக்கு முன்னுரிமை வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்து வருவதாகவும தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற தேர்தலில் தோல்வியடைந்துள்ள ஈ.பி.ஆர்.எல்.எப் கட்சியின் தலைவர் சுரேஸ பிரேமச்சந்திரன் மற்றும் வினோநோதராதலிங்கம் ஆகியோருக்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தேசிய பட்டியலில் வாய்ப்பு வழங்குமாறு அவர்கள் கோரிக்கை விடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (செ-11)

## தலா 2 1/2...

என்பது குறித்து பெரும் இழுபறி நிலையே கடந்த சில நாட்களாக நீடித்து வந்தது, இந்நிலையில் இந்த இழுபறி நிலையை முடிவுக்கு கொண்டு வரும் வகையில் நேற்றைய தினம் திருகோணமலையில் தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன் தலைமையில் கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் நீண்ட நேர இழுபறியின் பின்னர் ஒரு முடிவொன்று எட்டப்பட்டது. அதில் கூட்டமைப்புக்கு கிடைத்த இரு ஆசனங்களை இருவருக்கு வழங்கி தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதித்துவத்தை மட்டுப்படுத்தாமல் அதனை இரு காலப்பகுதிகளாக பிரித்து நால்வருக்கு வழங்குவது என்ற முடிவு எட்டப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது.

இதில் பாராளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர்களும் பகுதி பகுதியாக உள்வாங்கப்படலாம் எனவும் நம்பகரமான தகவல்கள் தெரிவிக்கின்றன. இச்செய்தி அச்சுக்கு போகும் வரை கூட்டமைப்பின் தேசிய பட்டியல் உறுப்பினர்களை வெளியிடுவதற்கு கட்சியின் முக்கியஸ்தர்கள் மறுத்துள்ளனர்.

இதேவேளை தேசிய கட்சிகளின் தேசிய பட்டியல் உறுப்பினர்கள் தெரிவு முடிவுற்று பெயர்களும் வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-4)

## தேநீர் விருந்து...

சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதில் கலந்து கொண்ட போதிலும், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவில்லை.

பிரதமராக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற நிகழ்வு முடிவடைந்தவுடன், மகிந்த ராஜபக்ஷ அங்கிருந்து வெளியேறியதாக கூறப்படுகின்றது.

பிரதமராக பதவிப் பிரமாணம் செய்து கொளவதற்கு முன்னர் ரணில் விக்கிரம சிங்க தனது அருகில் வரும்போது, அவருக்கு கை கொடுப்பதற்காக மகிந்த ராஜபக்ஷ சிரித்தவாறு கையை நீட்ட, அதைக் காணாதவர் போல ரணில் விக்கிரமசிங்க தனது ஆசனத்தை நோக்கிச் சென்றிருந்தார்.

இதன்போது மகிந்த ராஜபக்ஷவின் முகத்தில் வாட்டம் ஏற்பட்ட போதிலும், அதனை வெளிப்படுத்தாமல் சிரித்தவாறே கையை மெதுவாக எடுத்துவிட்டார்.

இதன்பின்னர் ஆசனத்தில் அமருவதற்கு முன்னதாக அதே வழியாகச் சென்ற ரணில் விக்கிரமசிங்க மகிந்த ராஜபக்ஷவுக்கு கை கொடுத்துவிட்டு, அருகில் அமர்ந்திருந்த ஏனையவர்களுக்கும் கைகொடுத்துவிட்டு ஆசனத்தில் அமர்ந்தார்.

ரணில் விக்கிரமசிங்கவின் இத்தகைய செயற்பாடு காரணமாகவே குறித்த தேநீர் விருந்தில் மகிந்த ராஜபக்ஷ பங்கேற்கவில்லை என தெரிவிக்கப்படுகின்றது.

அதேவேளை, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த சுசில் பிரேமஜயந்த, திலங்க சுமதிபால மற்றும் துமிந்த திஸாநாயக்க ஆகியோர் இந்த தேநீர் விருந்துபசாரத்தில் கலந்து கொண்டிருந்தனர். (செ-12)

## இலங்கை....

இலங்கையில் கடந்த 17ஆம் திகதி இடம் பெற்ற நாடாளுமன்றத் தேர்தலைத் தொடர்ந்து தேசிய அரசாங்கம் அமைக்கப்படவுள்ள நிலையில் இந்தப் பேச்சு இடம்பெறவுள்ளது.

தென்னாபிரிக்க பிரதி ஜனாதிபதி சிறில் ரமபோசா தலைமையிலான குழுவினர் ஜப்பானுக்கான பயணத்தை நேற்றைய தினம் மேற்கொண்டுள்ளனர்.

ஜப்பான் செல்லும் வழியில் இவர்கள் பயணம் செய்த விமானம் நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்தில் எரிபொருள் நிரப்புவதற்காக தரையிறங்கியது.

அதன்போது மேற்படி தகவல்கள் மரியாதை நிமித்தம் பரிமாறிக் கொள்ளப்பட்டதாக கூறப்படுகிறது.

இலங்கைக்கான சிறப்புத் தூதுவராக சிறில் ரமபோசாவை கடந்த ஆண்டு தென்னாபிரிக்க ஜனாதிபதி ஜேக்கப் சூமா நியமித்திருந்தார்.

இதனையடுத்து அவர் இலங்கைக்கு விஜயம் செய்து அனைத்துத் தரப்பினருடனும் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார்.

இந்நிலையில் இலங்கை விவகாரம் குறித்து தென்னாபிரிக்காவும் ஜப்பானும் தற்போது பேச்சுவார்த்தை நடத்த உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் சமாதானத்தை முன்னெடுக்கும் முனைப்புக்கள், புனர்வாழ்வு மற்றும் புனரமைப்பு போன்ற துறைகள் தொடர்பில் இரு நாடுகளும் பேச்சுவார்த்தை நடத்த உள்ளன.

ஜப்பானுக்கு விஜயம் செய்யும் தென்னாபிரிக்க பிரதி ஜனாதிபதி சிறில் ரமபோசா அங்கு இலங்கைக்கான ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாஷியை சந்தித்து விசேட பேச்சுவார்த்தை நடத்த உள்ளார்.

ஜப்பானுககும் தென்னாபிரிக்காவுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்திக் கொள்ளும்வகையில்அமையவுள்ள இவ்விஜயத்தில் இலங்கை விடயம் முக்கியத்துவம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. (செ-12)

## திருவெண்காட்டில் தெய்வீக உரை

மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய வருடாந்த மஹோற் சவத்தில் இன்று இடம்பெறும் 4ஆம் திரு விழாவில், வீணாகான குருபீடத்தின் பீடாதிபதி வணக்கத்துக்குரிய சிவஸ்ரீ சபா.வாசுதேவக் குருக்கள் தலைமையில் வேத, திருமுறை பாராயணம் இடம்பெறும். இன்று இரவு 7 மணிக்கு இந் நிகழ்வு நடை பெறும். (நு)

## கைக்குண்டு...

மீட்கப்பட்டுள்ளது,

மேற்படி பற்றை ஊடாக பாதை அமைத்து அருகிலுள்ள வயல் வெளிக்கு வழமையாக சென்று வருகின்ற விவசாயி ஒருவரால் குறித்த குண்டு அடையாளம் காணப்பட்டுள்ளது.

உடனடியாக இதுதொடர்பில் பருத்தித்துறை பொலிஸ் நிலையத்துக்கு அறிவிக்கப்பட்டதனை அடுத்து பொலிஸார் அவ்விடத்துக்கு சென்று கைக்குண்டை மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட கைக்குண்டை பாதுகாப்பான முறையில் வெடிக்க வைக்கும் முயற்சியில் பொலிஸார் ஈடுபடவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (செ-5,60)

## இரண்டு வருடங்களுக்கு...

இரண்டு கட்சிகளின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் இந்த தடை கொண்டு வரப்பட்டுள்ளது.

நாட்டின் பிரதான விடயங்கள் தொடர்பில் தீர்வுகளை காண்பதற்காக இரண்டு வருடங்களுக்கு தேசிய அரசாங்கத்தை ஏற்படுத்தும் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டுள்ளது. இந்த உடன்படிக்கையில், ஒரு பந்தியில் இந்த கட்சி தாவல் தடை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

இரண்டு வருடங்களின் பின்னர், மேலும காலத்தை நீடிக்க வேண்டுமாயின் அது இரு தரப்பின் இணக்கத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (செ-11)

## மகிந்தவின்...

களான இவர்கள் தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர்.

தேசிய அரசாங்கத்தை அமைப்பதற்கு எதிர்ப்புத் தெரிவிப்போருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று எச்சரித்திருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் மகிந்த ராஜபக்ஷவின் ஆதரவாளர்களை ஓரங்கட்டும் நடவடிக்கைகளை தீவிரப்படுத்தி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (செ-12)

## காத்தான்குடியில் வன்...

தொடர்புடையவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துமாறு பொலிஸாரை தான் கேட்டுள்ளதாக எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் கூறுகின்றார். பொலிஸ் தகவல்களின்படி இதுவரையில் நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். (செ-12)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தான்குடியில் வன்...

கின்றார்கள்.

சம்பவத்தையடுத்து அந்தப்பிரதேசத்தில் மேலதிக பொலிஸார் பாதுகாபு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளார்கள். நாடாளுமன்ற தேர்தலில் ஐ.ம. சு.முன்னணி வேட்பாளராக போட்டியிட்ட அந்த பிரதேசத்தை சேர்ந்த முன்னாள்துணை அமைசசர் எம். எல். ஏ. எம். ஹிஸ்புல்லாஹ் தோல்வியடைந்திருந்தார்.

நேற்று வெள்ளிகிழமை மாலை தேசியப்பட்டியலின் மூலம் அவர் நாடாளுமன்றத்துக்கு தெரிவானதாக ஊடகங்களில் செய்தி வெளியான போது, அவரது ஆதரவாளர்கள் பிரதான சாலைகளிலும் வீதிகளிலும் இறங்கி பட்டாசுகளை கொளுத்தியும் பேரணிகளை நடத்தியும் ஆரவாரம் செய்தனர்.

இதன்போது ஆரவாரத்தில் ஈடுபட்டவர்களில் சிலர் தமது ஆதரவாளர்களின் வீடுகளுக்குள் புகுந்தும், சாலையால் சென்று கொண்டிருந்த ஆதரவாளர்கள் மீதும் வன்முறைகளில் ஈடுபட்டதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ். மற்றும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி ஆகிய கட்சிகளினால் குற்றச் சாட்டுகள்முன் வைக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவத்தில் இரு பெண்கள் உட்பட தமது ஆதரவாளர்கள் 23 பேர் காயமடைந்துள்ள அதேவேளை 5 பேர் தொடர்ந்தும் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாக அந்த பிரதேசத்திலிருந்து ஸ்ரீல.மு.காங்கிரஸ் வேட்பாளராக போட்டியிட்ட மொகமட் பாறுக் ஷிப்லி கூறுகின்றார்.

வீடுகள், கடைகள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்கள் மீதும் தாக்குதல்கள் இடம்பெற்றுள்ள தாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தேர்தலுக்கு பின்னரான இந்த வன்முறைகள் தொடர்பாக ஸ்ரீல.மு.கா மற்றும் ந.தே. முன்னணி ஆகிய கட்சிகள் தமது வன்மையான கண்டனங்களை வெளியிட்டுள்ளன.

இந்த வன்முறைச சம்பவங்களை கண்டித்தும் ஹிஸ்புல்லாஹ்வுக்கு வழங்கப்படவுள்ள தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் நியமனத்தை மீளாய்வு செய்யக் கோரியும் நேற்று சனிக்கிழமை கொழும் பிலும் காத்தான்குடியிலும் ஆர்பாட்டங்களும் நடைபெற்றுள்ளன. கொழும்பில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் செய்த ந.தே. முன்னணி தமது கோரிக்கை தொடர்பில் மனுவொன்றையும் ஜனாதிபதி செயலகத்தில் கையளித்துள்ளது. இந்த வன்முறைகளுடன்

15ஆம் பக்கம் பார்க்க....

METRO
Travels & Tours (Pvt) Ltd.
எமது சேவைகள் ......
• மிக குறைந்த விலையில் சகல நாடுகளுக்குமான விமான பயண சீட்டுக்கள்....
• சகல நாடுகளுக்குமான காப்புறுதி சேவைகள்....
• இந்தியா, மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கான விசா சேவைகள்...
• வெளிநாட்டு கடவுச் சீட்டுகளுக்கான இலங்கை விசா புதுப்பித்தல்...
• இவை அனைத்தையும் நீங்கள் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய ஒரே இடம் ....
(C-1890)
METRO TRAVELS & TOURS (PVT) LTD
# 272/1, Stanley Road,Jaffna, Sri lanka.
Tel:- 0212219424, 0212224647, 0212217199
Mobile: - 0773798767, 0777881115
Email: - bartheeban@metrotravels.lk

Personal Class-கணினி
*10வருட அனுபவம் வாய்ந்த ஆசிரியரினால் உங்கள் வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.
Ms office 2013, Internet & E-mail, Web Design, Graphic Design,
DTP (Photoshop CC, CorelDraw X7, PageMaker, Adobe Illustrator CC, Adobe Indesign CC)
*சிறுவர்களிற்கான கற்கைநெறி
*பெறுமதிமிக்க சான்றிதழ்கள் வழங்கப்படும்.
*குறிப்பு: கணினி இல்லாதவர்களிற்கு எமது Laptop மூலமாக கற்பிக்கப்படும்
TP:0779672038 ஆசிரியர்: KRC

பணியாளர் தேவை
Electrical - எலக்றிக்கல்
Plumbing - பிளம்பிங்
Hardware - ஹாட்வெயர்
அனுபவம் மிக்க பணியாளர் தேவை
தொடர்புகளுக்கு :-
077 303 2587
077 481 2382
(C-1900)

யாழில் முதன்மையானவர்கள்
“ வானகம் போன் சித்தி ”
சகல விதமான போன்களும் உதிரிப்பாகங்களும் மலிவு விலையில்...
I Phone, Samsung மற்றும் ஏனைய வகை போன்களும் ALL LUMIA PHONE களும் UNLOCK செய்தும் திருத்தியும் கொடுக்கப்படும்.
“ ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள் ”
கவனியுங்கள், சிந்தியுங்கள், செயற்படுங்கள்
இல. 64/16 ஸ்ரான்லி வீதி, சம்பத் வங்கி முன்பாக யாழ்ப்பாணம்.
T.P :- 0777437039 0715231003
குறிப்பு : எமக்கு வேறு கிளைகள் இல்லை.
(C-1887)

STUDY
Hotel Management
in
SINGAPORE
ஆகக்கூடிய கல்வித் தகைமைகள் O/L
➡பாடநெறிக்கட்டணம் 350,000/= 1 வருடம்
➡மாதாந்த பகுதிநேரக் கொடுப்பனவு 100,000/=
100% Guaranteed Visa
Study - Work - Live
UK, USA, Australia, Canada, Swiss, Germany
Latvia, Singapore, Malaysia, China
ICS Study Overseas
77, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்
021- 4926222
Hotline 077 - 3013060
(C-1894)

SPEED LANKA EXPRESS
வெளிநாடுகளுக்கான
தபால் பொதி விநியோக சேவை
உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
Speed Lanka Express (Pvt) Ltd.
135, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே - 077 62 17 926
(C-1886)

SINGER
இப்போது SINGER LED TV க்கு
3 வருட உத்தரவாதம் இலவசம்
சிங்கர் வழங்கும் 3 வருட உத்தரவாதம் இலவசம்
ரூ.25,999/- தொடக்கம்
நீங்கள் வாங்கும் 32" | 24" SINGER | Skyworth | unic
LED TV களுக்கு 3 வருட உத்தரவாதம் முற்றிலும் இலவசம்
*நிபந்தனைகளுக்கு உட்படும்.
யாழ்ப்பாணம் 021-2225408 | சங்கானை | 021-2251100 | சாவகச்சேரி 021-2270197 | கொடிகாமம் 772108889 | நெல்லியடி 021-2264937 |
சுன்னாகம் 021-2240555 | மானிப்பாய் 021-2255343 | கிளிநொச்சி 021-2280199 | 768622213
0115 400 400 singersl.com SINGER Plus
(C-1892)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.08.2015 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

வலம்புரி
# சங்குநாதம்
Sankunatham

வள்ளுவர் ஆண்டு 2046 | 23.08.2015 | தொலைபேசி : 021 222 3378

நாதம் 29





# மிக உன்னதமான மனிதர் ஜனாதிபதி மைத்திரி

உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பு இருந்த ஜனாதிபதிகளில் மிக உன்னதமானவர் மைத்திரி




பாராளுமன்றத் தேர்தல் நடந்து முடிந்தாயிற்று. முன்பு ஒருபோதும் இல்லாத அளவில் தேர்தல் சுமுகமாக-சிறப்பாக நடந்துள்ளது என்ற பாராட்டை தேர்தல்கள் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவும் அவரோடு இணைந்து செயலாற்றிய அதிகாரிகளும் பெற்றுள்ளனர்.

கடந்த ஜனவரி 8 ஆம் திகதி நடந்த ஜனாதிபதித் தேர்தலில் மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகத் தெரிவாகியதைத் தொடர்ந்து இலங்கையின் அரசியல் வரலாற்றில் மிக முக்கியமான மாற்றங்கள் நிகழத் தொடங்கின.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் பிரதமரானார். ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்தவர் ஜனாதிபதியாகவும் ஐக்கிய தேசியக் கட்சியைச் சார்ந்தவர் பிரதமராகவும் இருக்கக்கூடிய ஒரு சூழ்நிலை ஏற்பட்டது. இத்தகையதொரு சூழ்



நிலை முன்பும் ஏற்பட்டதாயினும் இஃது ஜனாதிபதியும் பிரதமரும் மிகவும் இணங்கிச் செயற்படக்கூடியதாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இன்னும் இரண்டு ஆண்டுகள் ஜனாதிபதியாக இருக்கக்கூடியதாக இருந்த போதிலும் ஆயுட்கால ஜனாதிபதியாக வேண்டும் என்ற பேராசையில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலுக்கு அழைப்பு விட்டார்.

கூடவே என்னுடன் தேர்தலில் போட்டியிடும் அந்த வீரன் யார் என அறிய ஆசையாக இருக்கிறேன் என்று கர்ச்சித்த மகிந்த, நெஞ்சை நிமிர்த்தி ராஜபக்ஷ குடும்பத்தின் ஆட்சியே இந்த நாட்டில் நடக்கும் என்ற திமிர்த்தனத்தையும் வெளிப்படுத்தினார்.



என்னோடு போட்டியிடும் அந்த வீரன் யார்? என்று நெஞ்சை நிமிர்த்தி மகிந்த கர்ச்சித்த போது அவர் அருகில் மைத்திரிபால சிறிசேன மிகப் பவ்வியமாக நின்றிருந்தார். தேர்தல் முடிவு மைத்திரி வெற்றி என்பதாக அமைய, பதவியை விட்டுக் கொடுக்காமல் அடம்பிடித்த மகிந்த பின்னர் வெறுங்கையோடு தன் வீடு சென்றமை யாவரும் அறிந்ததே.

இப்போது மைத்திரிபால சிறிசேன ஜனாதிபதியாகப் பதவி ஏற்கிறார். எந்தவித ஆடம்பரமும் இல்லாமல் மிக எளிமையான முறையில் பதவியேற்பு நடந்து முடிகிறது.

என்னை மேன்மைதங்கிய ஜனாதிபதி என்று அழைக்காதீர்கள். எனது மனைவியை இலங்கையின் முதற் பெண்மணி என்றும் கூறவேண்டியதில்லை. எந்த இடத்திலும் கட்டவுட்டுகளை வைக்காதீர்கள் என்ற அறிவித்தல்களை அவர் வெளியிட்ட போது மைத்திரி வித்தியாசமானவர் என்ற எண்ணக்கரு இந்த நாட்டின் அனைத்து இன மக்களிடமும் கருக்கட்டலாயிற்று.

இந்த நினைப்பை மேலும் வலுப்படுத்துவதாக ஜனாதிபதி மைத்திரியின் செயற்பாடுகள் அமைந்திருந்தன.

ஒரு சிறிய பாட்டா கடைக்குள் சென்ற மைத்திரி தனக்கான சப்பாத்தை வாங்கிக் கொண்டமை;

புங்குடுதீவு மாணவி வித்தியாவின் படுகொலைச் சம்பவத்தால் துவண்டு போன வித்தியாவின் குடும்பத்திற்கு ஆறுதல் கூறவும், யாழ்ப்பாணத்து பாடசாலை மாணவிகளைச் சந்தித்து அவர்களை ஆற்றுப்படுத்துவதற்காகவும் அவர் யாழ்ப்பாணம் வந்து போனமை;

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவை சந்திப்பதற்கு வாய்ப்புக் கேட்டபோது அதற்கு இடம் கொடுத்தமை என அனைத்து விடயங்களிலும் ஜனாதிபதி மைத்திரி கனவானாக நடந்து கொண்டார்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தின் போது அறிவித்ததன் பிரகாரம் 19 ஆவது திருத்த சட்டமூலத்தைக் கொண்டு வந்து ஜனாதிபதிக்கு இருக்கக்கூடிய அதிகாரத்தை மட்டுப்படுத்தினார்.

19 ஆவது திருத்த சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்காக அவர் பாராளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்தார்.

எனது அதிகாரத்தைக் குறைப்பதற்கு உங்களின் ஆணையைக் கேட்கிறேன், தாருங்கள் என்று ஜனாதிபதி மைத்திரி கூறிய போது, பாராளுமன்ற உறுப்பினர்கள் பலரின் கன்னங்கள் நனைந்து கொண்டனவாம்.

இன்னும் அதிகாரம் தேவை என்று கேட்கின்ற இந்தக் காலத்தில் இந்தாள் தன் அதிகாரத்தைக் குறைக்க ஆணையைத் தாருங்கள் என்று கேட்பது இந்த நாட்டில் முன்பு நடந்ததுமில்லை, இனிமேல் நடக்கப் போவதுமில்லை என்று எண்ணிய பாராளுமன்ற உறுப்பினர்கள் 19 ஆவது திருத்த சட்டமூலத்திற்கு தமது ஆதரவை வழங்கினர்.

அனைத்தையும் அடக்கமாக இருந்து பார்த்த மைத்திரி தேர்தலுக்கு முன்பாக அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டார். அந்த நடவடிக்கைகள் அனைத்தும் சட்டரீதியானவை. நீதிமன்றத்தின் அங்கீகாரத்தைப் பெற்றவை.

பொதுத்தேர்தலில் தோல்வியுற்ற மகிந்த, அதனைத் தானாகவே ஒத்துக் கொண்டார்.

இனி பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த என்று கூறினால் போதும்.

## மைத்திரியை மன்றாடும் மகிந்த ராஜபக்ஷ

19 ஆவது திருத்த சட்டமூலத்தை ஒருவரைத் தவிர மற்றைய அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஆதரித்தனர் என்ற செய்தி மைத்திரியின் ஆட்சியில் நடந்த முதலாவது முக்கிய மாற்றமாகும்.

தொடர்ந்து பாராளுமன்றத்தை இயங்க வைப்பதில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முட்டுக்கட்டையாக இருந்த போது, பாராளுமன்றத்தைக் கலைத்து பொதுத் தேர்தலை அறிவித்த மைத்திரி தேர்தலின் பின்னரும் ரணில் பிரதமராக இருக்க வேண்டும் என்பதில் இம்மியும் தளர்ந்தாரில்லை.

இதுவே மைத்திரியின் உச்சக்கட்ட நேர்மையின் சான்றாதாரம்.

தேர்தலில் மகிந்த விட்ட தில்லுமுல்லுகள், வேட்பாளர் நியமனங்கள்

ஆனால் மகிந்த மீதும் அவரது குடும்பத்தின் மீதும் எழுந்துள்ள குற்றச்சாட்டுக்கள், தாஜுதீனின் உடலைத் தோண்டி எடுத்ததோடு புதிய அத்தியாயத்தை தோற்றுவித்துள்ளது.

என்ன செய்வது. எல்லாம் விதி.

ஹலோ! மைத்திரி என் குடும்பத்தைக் காப்பாற்றுங்கள் என்று மகிந்த தொலைபேசி ஊடாக மன்றாடுகிறார்.

மகிந்த வெரிசொறி. எதுவும் செய்ய முடியாது என்பதுடன் அந்தத் தொலைபேசி இணைப்பு நிறுத்தப்படுகிறது.

அந்த நிறுத்தம் மகிந்த குடும்பத்தின் மீதான விசாரணையின் ஆரம்பம் என்பதை மட்டும் இவ்விடத்தில் ஆணித்தரமாகக் கூற முடியும்.

விதுரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலடி மாநாடு

ஆலடிப்பிள்ளையார் கோயில் திருவிழா. பண்டிதர் பரமலிங்கத்தின் தெய்வீக உரை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. ஊழிற் பெருவலி என்ற பொருளில் அவர் ஆற்றுகின்ற உரையைக் கேட்பதில் ஏகப்பட்ட மக்கள் கூட்டம்.

அன்பர்களே! ஊழ்வினை என்பது பற்றி வள்ளுவர் மிகத் தெளிவாகக் கூறியுள்ளார். ஊழ்வினை மிகவும் பொல்லாதது. நாங்கள் பயணிக்கும் போது ஊழ்வினை எங்களுக்கு முன்னால் பயணிக்கும்.

எனவே மனிதப்பிறவி எடுத்த நாம் அறத்தை-தர்மத்தைப் பாதுகாக்க வேண்டும். அதை நாம் செய்யாவிட்டால் அதுவே நமக்கு கூற்றுவனாக அமைந்துவிடும்.

இவ்வாறு பண்டிதர் உரையாற்றி முடிய கதிரவனும் உறங்குதிசை நோக்கினான்.

பண்டிதரின் உரையை அடுத்து ஆலடி மாநாடு ஆரம்பமாகியது.

ஆலடி மாநாட்டில் அனைவரும் கூடினர். பண்டிதர் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினர்.

**விதானையார்:** தேர்தல் ஒரு மாதிரியாக நடந்து முடிஞ்சுது. தேர்தல் காலத்தில பேப்பர்களில செய்திகளைக் காண முடியல்ல. முழுவதும் தேர்தல் விளம்பரங்கள்.

**கங்காணி:** தேர்தல் விளம்பரமும் செய்தி தானே! வேட்பாளர்கள் தாம் என்ன செய்தது? என்ன செய்யப் போறம் என்பதை வாக்காளர்களுக்குத் தெரியப்படுத்துவதும் செய்தி தானே!

**வாத்தியார்:** அதுசரி, யாழ்ப்பாணத்தில இருந்து வெளிவாற வலம்புரிப் பத்திரிகையை சீல் வைக்கிற முயற்சியில இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஒரு சட்டத்தரணி கடும் முயற்சி செய்தவர் அல்லோ.

**மூப்பர்:** என்ர கர்த்தரே! ஏனாம் அந்தாள் இப்படிச் செய்தது.

**வாத்தியார்:** நடுநிலையோடு வெளிவார பத்திரிகையில சிலருக்கு இடைஞ்சல் தானே! அதுதான்.

**கங்காணி:** வாத்தியார் நடந்த சம்பவத்தைத் தெளிவாகச் சொல்லுங்களன்.

**வாத்தியார்:** கடந்த 16.08.2015 அன்று வலம்புரி பத்திரிகையின்ர 11 ஆம் பக்கத்தில் வாக்களிப்பது எப்படி? என்றொரு செய்தி. வாக்குச்சீட்டின்ர மாதிரிப் படிவத்தைப் பிரசுரித்து அதற்குக் கீழ் முதல் சின்னத்திற்கு எதிராக X அடையாள மிடுக. அடுத்து இந்த வாக்காளர் அட்டையில் காட்டப்பட்டிருக்கும்படி நீங்கள் ஆதரிக்கும் வேட்பாளர்கள் மூவரது இலக்கங்களுக்கு மேல் X அடையாளமிடுங்கள் என்று பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இதைப்பார்த்த அந்தப் பிரக்கிராசி இது தான் தருணம் எண்டு நினைத்துக் கொண்டு முதல் சின்னத்திற்கு வாக்களிக்குமாறு வலம்புரி சொல்லியிருக்கு.

எனவே அந்தப் பத்திரிகையை சீல் வைப்பதோட அந்தப் பத்திரிகையின்ர பிரதம ஆசிரியரையும் கைது செய்ய வேணும் எண்டு தேர்தல் ஆணையாளருக்கு முறையீடு செய்திருக்கிறார்.

தேர்தல் ஆணையாளரும் தமிழின்ர பொருள் தரு விளக்கம் தெரியா ததால பிரக்கிராசியின்ர முறையீட்டோட வலம்புரி அலுவலகத்தை சீல் வைக்குமாறும் பிரதம ஆசிரியரைக் கைது செய்யுமாறும் யாழ்ப்பாணத் தெரிவத்தாட்சி அலுவலருக்கு உத்தரவிட்டார்.

**மூப்பர்:** என்ர பரமபிதாவே இந்த வேலை செய்தவருக்கு இம்மையும் மறுமையும் நரகம் தான்.

**கங்காணி:** வாத்தியார் பிறகென்ன நடந்தது?

**வாத்தியார்:** தேர்தல்கள் ஆணையாளர் உத்தரவு பிறப்பித்தாலும் எங்கட யாழ்ப்பாணத்து அதிகாரியள் உண்மைநிலையை ஆணையாளருக்கு தெளிவுபடுத்தியதை அடுத்து குறித்த செய்தியில திருத்தம் செய்யுமாறும் உத்தர விடப்பட்டது.

**பண்டிதர்:** அட சங்கதி அப்படியே. அதுதான் பார்த்தன் சிலற்ற முகநூலில நாளை (17ஆம் திகதி) வலம்புரி வெளிவராது என்றவாறு செய்திப் பரிமாற்றம் செய்திருந்தவியள்.

**விதானையார்:** பண்டிதர் ஐயா அதென்ன முதல் சின்னம் [illegible] என்ன பொருள் [illegible] இருக்கு. கொஞ்சம் சொல்லுங்க.

**பண்டிதர்:** முதல் சின்னத்திற்கு வாக்களித்தல் என்பது முதலாவது சின்னம் என்று ஒருபோதும் பொருள் படாது. அப்படி என்றால் முதற் சின்னம் என்று எழுதப்பட்டிருந்தால் முதலாவது சின்னம் என்று பொருள் கொள்ளலாம்.



## வலம்புரிக்கு சீல் வைக்க சட்டத்தரணி கடும் முயற்சி

இது தவிர முதல் சின்னத்திற்கு எதிரே புள்ளடியிடுங்கள். அடுத்து விருப்பு வாக்கு என்று எழுதும் போது முதல் என்பது கட்சிகளை அல்லது சுயேட்சைக் குழுக்களை குறிப்பது தெளிவாகிறது.

அத்துடன் அடுத்து என்ற சொற்பதம் முதல் என்ற சொல்லுக்கு பொருள் தருகின்றது. அதாவது முதலாவதாக நீங்கள் செய்ய வேண்டியது என்ன? என்பதையே முதல் என்ற சொல் சுட்டி நிற்பதை அடுத்து என்ற சொல் தெளிவுபடுத்துகிறது.

**விதானையார்:** என்ன இருந்தாலும் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தைக் கட்டாயம் பாராளுமன்றம் அனுப்பியிருக்க வேணும். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின்ர தந்தை குமார் பொன்னம்பலம் நாட்டின்ர தலைநகரில இருந்து கொண்டு தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுத்தவர். அதால அந்தாளை திட்டமிட்டு சுட்டுக் கொன்றார்கள்.

விடுதலைப்புலிகளின்ர தலைவர் பிரபாகரன் குமார் பொன்னம்பலத் திற்கு மாவீரர் என்ற கௌரவத்தைக் கொடுத்தார்.

கஜேந்திரகுமார் தமிழினத்திற்காக ஜெனீவாவுக்குச் சென்று குரல் கொடுத்தவர். ஆனா எங்கட சனம் அந்த நன்றி எல்லாத்தையும் மறந்து போயிற்று.

**கங்காணி:** விதானையார் தமிழ்மக்கள் நன்றி மறந்துவிட்டினம் என்று சொல்லாதீங்கோ. நடந்தது என்ன என்பது நிச்சயம் வெளிவரும்.

ஆனால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தொடர்ந்தும் தமிழ்மக்களுக்காகப் பாடுபட வேணும் என்பதுதான் என்ர விருப்பம்.

**பண்டிதர்:** கங்காணியார் அரசியல் கதைக்கிறதைக் கைவிடுவம். ஆனால் மாநாட்டில ஒரு தீர்மானத்தை நிறைவேற்றுவம்.

**வாத்தியார்:** பண்டிதர் ஐயா என்ன தீர்மானம்?

**பண்டிதர்:** இலங்கைத் தமிழரசுக் கட்சிக்குக் கிடைத்த வாக்குகளால் அந்தக் கட்சி யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்டத்தில ஏழு பாராளுமன்ற உறுப்பினர்களைப் பெற்றுள்ளது.

தமிழ்மக்களுக்கு இந்தக் கட்சி என்றும் நன்றியுள்ளதாக இருக்க வேணும். தமிழ்மக்களின்ர பிரச்சினையில் வெளிநாட்டில ஒரு கதை உள்நாட்டில இன்னொரு கதை என்றில்லாமல், அப்பாவித் தமிழ் மக்களின் நம்பிக் கையில் மண்ணை அள்ளிப் போடாமல் கடவுளுக்குக் கணக்கு கொடுக்க வேணும்.

அடுத்த தேர்தலுக்கு இனி ஐந்து வருடம் இருக்கு என்றிராமல் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண முயற்சிக்கவேணும் என்ற தீர்மானத்தை இந்த மாநாட்டில நிறைவேற்றும்.


இப்படிப் பண்டிதர் கூற தீர்மானத்தை அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்க பிள்ளையார் கோயில் மணியும் ஒலித்தது. மணி ஒலிக்க மாநாட்டில் இருந்தவர்கள் எழுந்து பிள்ளையார் கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# தென்னைமரம்



**அரசர்** கிருஷ்ணதேவராயரின் அவைக்கு ஒரு நபர் வந்தார்.

அவர் அரசரிடம், "அரசே! என்னுடைய வயலும் பக்கத்து வீட்டுக்காரர் வயலும் அருகருகே உள்ளன. இரண்டுக்கும் இடையில் உள்ள வரப்பில் ஒரு தென்னை மரம் உள்ளது. பக்கத்து வீட்டுக்காரர் அதை எனக்கு விற்றுவிட்டார். நான் தான் அதை நன்றாகப் பராமரித்து வருகிறேன். இன்று அவர் என்னைத் தேங்காய் பறிக்கக் கூடாது என்கிறார். இப்போது அவர் தன் முடிவை மாற்றிக்கொண்டுவிட்டாராம். மரம் திரும்ப அவருக்கு வேண்டுமாம்..." என்று முறையிட்டார்.

அதைக்கேட்டு அவையினர் அனைவரும் திடுக்கிட்டனர். அமைச்சர், "அந்த மனிதாபி மானம் அற்ற மனிதரைக் கைது செய்துவந்து சிறையில் அடைக்க வேண்டும்" என்றார்.

அதற்குள் சேனாதிபதி, அந்த நபரைக் கைது செய்துவரக் தயாராகிவிட்டார்.

அப்போது அரசர் என்ன செய்யலாம்? என்று கேட்பதைப் போல தெனாலிராமனைப் பார்த்தார்.

தெனாலிராமன் புரிந்துகொண்டு, "தாங்கள் அனுமதி தந்தால், இதற்கான தீர்வை நாளைக்குத் தள்ளி வைத்துக்கொள்ளலாம்..." என்றார்.

அரசர், "சரி" எனவே,

தெனாலி அந்த நபரிடம், "நாளைக்கு உன் பக்கத்துவீட்டுக்காரனையும் அழைத்துவா..." என்று அவனை அனுப்பிவிட்டார்.

மறுநாள் அந்த நபரும், பக்கத்து வீட்டுக்காரனும் சபைக்கு வந்தனர்.

இருவரிடமும் நன்கு விசாரித்த பிறகு தெனாலிராமன் சொன்னார்; "அப்படியானால் நீ உன் மரத்தைத் திரும்ப எடுத்துக்கொள்ள விரும்புகிறாய் இல்லையா?" என்றார்.

அதற்கு அவன் "ஆம் ஐயா!" என்றான்.

"சரி! நீ அவனுடைய பணத்தைத் திரும்பக் கொடுத்துவிடு..." என்றார் தெனாலிராமன். அவனும் பணத்தை எடுத்துக் கொடுத்துவிட்டான்.

சபையினருக்கு ஒன்றும் புரியவில்ல. தெனாலி ஏன் இப்படியெல்லாம் செய்கிறார்? என்று திகைத்தனர்.

பிறகு தெனாலி, மரத்தை வாங்கியவரிடம், "சரி... இன்றிலிருந்து அந்த மரம் உன்னுடையது இல்லை..." என்றார்.

அந்த மனிதரிடம் ஏமாற்றம் அடைந்தார். ஆனால், தெனாலி தொடர்ந்தார்.

இன்னொரு விஷயம்... "அந்த மரம் நீ வாங்கும்போது எப்படி இருந்ததோ அப்படியே அதை நீ திரும்பக் கொடுத்துவிட வேண்டும்..." என்று கூறி விளக்கினார்.

"அதாவது, நீ மரத்தை அவரிடம் வாங்கும்போது அம்மரம் காய்க்கத் தொடங்கவில்லை. ஆகவே, அதைத் திரும்ப ஒப்படைப்பதற்கு முன்பு எல்லாக் காய்களையும் பறித்துக் கொண்டுவிடு..." என்றார் வாங்கியவரிடம்.

திரும்பப் பெற்றவரிடம், "காய் இல்லாத மரத்தைதானே நீ விற்றாய்...? ஆகவே, என்றைக்கும் காயில்லாத மரம்தான் உன்னுடையது. அதில் இனிமேல் காய்க்கும் காய்கள் எல்லாம் மரத்தைத் திரும்பக் கொடுத்தவரையே சேரும்... அதை அவர் பறித்துக் கொள்ள அவ்வப்போது நீ அனுமதிக்க வேண்டும் தடுக்கக் கூடாது; நீயும் பறித்துக்கொள்ளக்கூடாது..." என்றார்.

தெனாலியின் இந்தத் தீர்ப்பை அரசர் ஆமோதித்தார்.

திரும்பப் பெற்றவன் முகத்தில் ஏமாற்றம்.

புகார் கொடுத்த நபர் மகிழ்ச்சியுடன் எல்லோரையும் குறிப்பாக தெனாலிராமனை வணங்கிவிட்டுச் சென்றார்.

## பசுமை பரவட்டும்



உணவும் நீரும் அருகினவே
உயிர்கள் வாடி வதங்கினவே
ஏனிந்த துன்பம் யாவருக்கும்?
எண்ணிப்பார்ப்போம் தோழர்களே!

இயற்கை தந்திட்ட செல்வங்களாம்
இனிய வனங்களும் மலைவளமும்
காக்கத் தவறி அழித்திட்டோம்
பொய்த்துப் போனது மழையதுவும்

புகையும் மாசும் நிரம்பியதுவே
பகையாய் ஆனது காற்றதுவே
சுற்றுச் சூழல் பாழ்பட்டதே
புவியின் வெப்பம் மிகுந்ததுவே

சின்னஞ்சிறிய கைகளினால்
செடியும் கொடியும் வளர்த்திடுவோம்
பென்னம்பெரிய மரம் வளர்ப்போம்
நீரிட்டு நாளும் நிழல் நிறைப்போம்

குப்பை கூளங்கள் தவிர்த்திடுவோம்
குடிநீர் சுத்தம் காத்திடுவோம்
துளித்துளி மழையைச் சேர்த்திடுவோம்
சிக்கனமாய் அதைச் செலவிடுவோம்

பள்ளியில் பசுமை பரவட்டுமே
பார்த்திடும் யாரும் மகிழட்டுமே
சுற்றும் சுத்தம் காத்திடுவோம்
சுகந்தக் காற்றை சுவாசிப்போம்

கூடி முயல்வோம் தோழர்களே
கோடி நன்மைகள் நமக்குண்டே
நாளும் நலமாய் வாழ்ந்திடுவோம்!
நமது பள்ளியைப் போற்றிவோம்.

# பிரபஞ்சம் முதுமையடைகிறது!

**விஸ்ரா** தொலைக்காட்டி, வேறு தொலக்காட்டிகள் மூலம் பிரபஞ்சமானது, சதா ஆய்வுக்குட்படுத்தப்பட்டுவருகிறது. இந்த ஆய்வுகளை பலவிஞ்ஞானிகள் பலகோணங்களில் செய்து, பினனர், ஒன்றுகூடிசிலமுடிவுகளைக்கண்டுள்ளனர். இத்தகைய பணியில் ஈடுப்பட்டுள்ள ஒரு அமைப்புத்தான் கலக்சிவெகுசனை சட்டசபைத் திட்டம். இந்த அமைப்பு, (GAMA) இதன்தலைமை விஞ்ஞானி **சிமையோன் டிரைவர்** உட்பட பிரபஞ்சத்தின் வரலாறு பற்றிய சில தகல்களைக் கூறியுள்ளனர்.

அத்தகவல்களில் முக்கியமானதுதான், நம்மைப்போன்று, பிரபஞ்சமும் முதுமையடைந்து வருகிறது என்ற உண்மை.

இருநூறாயிரத்துக்கும் மேற்பட்ட கலக்சிகளை (கோடிக்கணக்கான நட்சத்திரத் திரள்களைக் கொண்ட பால்வெளிகளை) ஆய்வு செய்ததில், அவை இற்றைக்கு இரண்டு பில்லியன் வருடங்களுக்கு முன்பு உற்பத்தி செய்த சக்தியிலும் பார்க்க அரைப்பங்கு சக்தியையே இப்பொழுது உற்பத்தி செய்கின்றன எனக் கண்டறிந்துள்ளனர்.. அதாவது நாம் முதுமையடைகின்ற பொழுது எப்படி சக்தி இழக்கின்றோமோ அப்படி அவையும் சக்தி இழந்திருப்பதாக அவர்கள் தெரிவிக்கின்றனர். இன்னொரு வகையில் கூறினால், பிரபஞ்சம் மங்கலாகி வருகிறது; புதிதாகப் பிறக்கின்ற நட்சத்திரங்களிலும்பார்க்க இறக்கின்ற நட்சத்திரங்களின் எண்ணிக்கை கூடுதலாகக் காணப்படுவதாக அவர்கள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் பிரபஞ்சம் விரிவடைந்து செல்வதும் தொடர்கிறது. நட்சத்திரங்கள் காலும் ஒளியானது, விரிவான [illegible] பரந்து பரவுகிறது என்கின்றனர்.

கலக்சிவெகுசன சட்டசபை (GAMA) திட்டம் என்ற இந்த அமைப்பின் தலைமை விஞ்ஞானி, பிரபஞ்சத்தின் முடிவுக்கு ஒரு ஒரு பிரளய நிகழ்வு இருக்கப்போவதில்லை. மேற்படி அய்வு, வெளிச்சத்தில் ஒரு மெதுவான சரிவை பரந்து பட்டுக் காட்டுகிறது என்று தெரிவித்துள்ளார்.

இது முன்பு பிரபஞ்சத்தின் குறித்த சில பகுதிகளில் மட்டும் மேற்கொள்ளப்பட்டு கண்டுகொள்ளப்பட்ட விடயங்கள், இப்பொழுது, பிரபஞ்சத்தின் ஐந்து திக்குகளிலும் 21 வேறுபட்ட அலைகளின் மீதும் பரந்துபட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவைஇரண்டும்வெறுமனேகொள்கை ரீதியான முடிவுகள் **அல்ல**. சிறந்த செய்முறை ரீதியான முடிவுகள். முன்னைய முடிபை பிந்திய முடிபு மேலும் உறுதிப்படுத்துகிறது. அத்தோடு பிரபஞ்சம் மங்கலாகிவருவதை அவை நிரூபிக்கின்றன.




மேலும் மேற்படி கலக்சிகள், இற்றைக்கு பில்லியன் அல்லதுபில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு, எவ்வளவு சக்தியை வெளிவிட்டிருந்தன. இப்பொழுது எவ்வளவு சக்தியை வெளிவிட்டிருக்கின்றன என்றும் ஒப்பிட்டுள்ளனர். இது ஒரு புதைபடிவ பதிவுதான் என்று (GAMA) இன் தலைமை விஞ்ஞானி தெரிவித்துள்ளார்.


"அன்று முற்றிலும் இளவயதாக இருந்த பிரபஞ்சத்தின் ஒளிக்கதிர்கள், இன்று பலகோடி வருடங்களின் பின் பூமியை வந்தடைகின்றன. அவற்றை நாம் ஆய்வு செய்கின்றோம். இதன் மூலம்பிரபஞ்சத்தின் ஆரம்பகால வரலாற்றைப் படிக்கமுடிகிறது, பிரபஞ்சத்தின் வயதாதல் என்பது, மிக மிக மிக... மெதுவாக நடந்துகொண்டிருப்பது. முடிவில் பிரபஞ்சமானது, ஏதுமற்ற வெறு மையான, துளையாக மாறலாம்" என விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஆனால், இது நிகழ்வதற்கு இன்றிலிருந்த பல பில்லியன் ஆண்டுகள் கடக்கவேண்டியிருக்கும். இப்போதைக்கு பயங்கொள்ளத் தேவையில்லை. எனவும் அவர்கள் அறிக்கை விட்டுள்ளனர்.

தமிழில்-பாமா.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





நடிகை தேவயானி பற்றி?

தொலைபேசிக் காதலை நம்பலாமா?

அரசியலில் மக்களுக்கு என்ன பயன்?

**இன்பா — சுழிபுரம்**

**அரசியலால் மக்களுக்கு என்ன பயன்?**

தமிழ் மக்கள் ஒன்றிணைந்து ஓட்டுப்போட்டு அமோக வெற்றியடையச் செய்து ஒற்றுமை என்பதைக் காட்டினார்களே தவிர அவர்களால் பலன் ஏதும் உண்டா? அதேபோல் தான் அரசியலால் அரசியல்வாதிகளுக்கு பலனே தவிர மக்களுக்கு அல்ல?

**சாம் — தொல்புரம்**

**உங்களுக்காக உங்கள் காதலியும் நண்பனும் காத்திருந்தால் யாரிடம் முதலில் செல்வீர்கள்?**

இருவரையும் சேர்த்து வைத்துவிட்டு ''எங்கிருந்தாலும் வாழ்க....'' என்று பாடிக் கொண்டு சென்றுவிடுவேன்.

**மதி — சுழிபுரம்**

**நல்ல நட்பைப் பற்றி சொல்லுங்க?**

தலைபோகினும் விலை போகா!

**அருமைநாயகம் — சிறுப்பிட்டி**

**கலியுக தத்துவம் ஒன்று சொல்லுங்க பாஸ்?**

ஆழம் அறியவேண்டுமென்றால் காலை விடாதே.......
அடுத்தவனை தள்ளிவிட்டுப்பார்....

**அருண் — பருத்தித்துறை**

**தொலைபேசிக் காதலை நம்பலாமா?**

“ஏன் என்னை நம்பவில்லையா?”
என குமாருக்கு அனுப்பிய எஸ்.எம்.எஸ்ஸை கொப்பி செய்து பேஸ் பண்ணினாள் சுமதி கரனுக்கு.

**தரன் — அச்சுவேலி**

**காதலிக்கும் பெண்களை எப்படி கண்டு பிடிக்கலாம்?**

காதலி தேவை என்று ஒரு போர்ட்டில் எழுதி அதை பிடித்த படி நில்லுங்கள். உங்களை திரும்பிப் பார்க்காமல் செல்லும் பெண்ணை தேடி ஓடிப் பிடித்து விடுங்கள்.



“நூல் புடவைல நீ ரொம்ப அழகா இருக்க...”
“பட்டுப் புடவை கேட்டா வாங்கித் தர துப்பு இல்லை வாயைப் பாரு...”

**உதயநிருஜன் — கோண்டாவில்**

**பெண்களின் மனம் எப்படி இருக்கும்?**

சிலவேளை இருட்டாகவும் சிலவேளை வெளிச்சமாகவும் இன்னும் சிலவேளைகளில் மன்(ம்)மல் பொழுது போலவும் இருக்கும் என்கிறார்கள். நானும் அதை அறிய ஆர்வம் கொண்டு கடந்த முப்பது ஆண்டுகளாக இருட்டிலேயே கிடக்கின்றேன்.

**கபில் — மானிப்பாய்**

**வியாசரே நீங்கள் எங்களை ஏதும் கேள்வி கேட்க நினைத்ததுண்டா?**

செலவழிப்பது என நினைத்தவுடன் உங்கள் மனதில் தோற்றுவது பணமா, நேரமா?

**கோபி — மந்திகை**

**நடிகை தேவயானி பற்றி?**

1994ஆம் ஆண்டு தொட்டால் சிணுங்கி எனும் திரைப்படத்தின் மூலம் அறிமுகமாகி 1996 ஆம் ஆண்டு காதல்கோட்டை வெற்றியுடன் சிறந்த நடிகைக்கான விருதை வென்றதுடன் 2000ஆம் ஆண்டு கலைமாமணி பட்டத்தையும் பெற்றுக்கொண்டார்.2001ஆம் ஆண்டு இயக்குநர் இராஜகுமாரனை திருமணம் செய்து சினிமாவுக்கு முழுக்குப் போட்டுவிட்டு சின்னச் சினிமாவில் கால்பதித்து நடைபோட்டு வருகின்றார்.

**கரன் — கரணவாய்**

**தமிழர்களின் சுதந்திர தினம் எப்போது?**

தமிழனுக்கு முதல் எதிரி தமிழன்தான். ஒன்றாய் ஒரு தட்டில் உண்டு கொண்டே அவன் உண்ணும் உணவில் நஞ்சை விதைக்கும் குணம் கொண்டவர்கள் இருக்கும்வரை சுதந்திர தினம் என்ன சுதந்திர நடை கூட முடியாது.

**அருமை — கொடிகாமம்**

**ஜோக் பிளீஸ்?**

ரம்பக் குளிராக இருக்கிறது போர்வை கொடு என்பதை கேட்டதும் செத்துப்போனான் பிணவறைக் காவலாளி.

**சாந்தி — திருநெல்வேலி**

**மரியாதை கொடுத்து மரியாதை வாங்குவது சரியா?**

''மரியாதையாக சொல்கிறேன் கேட்டுக் கொள்'' என சொல்லப்படுவது பெரும்பாலும் மரியாதை போன பிறகே சொல்லப்படுகிறது.

# தற்போதைய நடிகைகள் குண்டா இருந்தால் எப்படியிருக்கும்










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைக் கலசம்



## முக்தி பெறட்டும்

ஆர்ப்பரித்துக்
கொட்டுகின்ற
அந்திப் பொழுதின்
மழைத்தூறலில்
என் வண்ணங்கள்
அழிந்து போய்விட்டன
சிரித்து சிலாகிக்கும்
உன் உதடுகள்
இரவுகளின் அந்தகாரத்தில்
ஏதேதோ பேசுகின்றது
ஏகாந்த பெருவெளியில்
இரத்தம் சொட்ட
உயிர் அலைந்து
கொண்டிருக்கிறது
அதிகம் நேசிக்கும்
அந்நியோன்னியங்கள்
இருகன்னத்திலும் அறைந்து
கொண்டிருக்கின்றன
மீள முடியாமல்
தவிக்கும் நேரங்களில்
சிலம்பும் சங்கீதமும்
என் ரகசிய முத்திரைகளை
வேவு பார்க்கின்றன
முத்திரைகள் முத்தங்களால்
முக்தி பெறட்டும்

நெடுந்தீவு யோகேஸ்

## போதை அரக்கன் ஒழிய

போதை அரக்கன் ஒழிய
எழுந்தவரே பொழுதொன்றில்
முடிந்திடும்புரட்சியல்ல இது
வெற்றுக்கோசங்களால் மட்டும்
தொற்றுநோயாம் போதையதை
தொலைத்தழிக்க முடிந்திடுமா
மனமாற்றம் கொண்டு
எம் இன மாற்றம் கொண்டு
எம் இன மானம் காத்திடுவோம்
தொட்டிற் பழக்கமது சுடுகாடு மட்டும்
புரிந்து நடந்திடுவோம் வாரீர்

புலோலியூர் வேல்நந்தன்

## இமயம் தொட

உன்னை புரிந்து கொள்ளாதவர்
அவர் தம் செயலால்
உன்னைக்காயப்படுத்துபவர்
சிரித்துக்கொண்டே
அதை வாங்கிக் கொள்
புரியாமை என்பது
பிரிவுகள் அல்ல -ஒருநாள்
புரிந்து கொள்வார்
அப்போது நீ
இயேசுவைப் போல்
பணிந்து நிற்பாய்
பரிசுத்தராய்


மாவை. நா:கஜேந்திரன்

## கேள்விகள்

தெருவோரம் ஒரு மனிதன்
இரப்பது தன் வயிற்றுப் பசிக்காய்
இரு கரங்கள் நீண்ட நிலையில்
விழிப்பார்வை ஒளி குறைந்த
இருள்வாழ்க்கை கொண்ட நிலை
முன்வினையின் பழியெனவாய்
அவனின் முகத்திலறைந்து விட்டு
செல்கிறது ஒரு வார்த்தை
நிதம் நிறைவென எல்லாமிருப்பின்
குறையேதுமில்லையென்ற
வாழ்வின் செருக்கு
பூர்வ புண்ணியத்தின் பூரணமெனில்
மனதைக் குத்திக் கிழிக்கும்
வார்த்தைகளால் இப்போது
எதைத் தேடுகிறது இங்கே நிகழ்காலம்
பாவத்தையா அன்றி புண்ணியத்தையா?

அலெக்ஸ் பரந்தாமன், புதுக்குடியிருப்பு

# மௌனத்தின் தேடல்- 262



## ஏக்கம்

பெற்றோரை இழந்து
சொந்தங்கள் அற்று
யாராவது என்னை
அரவணைப்பாரா?
என்று ஏங்கும் கண்களோடு
துடிக்கும் இதயம்...
படுக்க இடமின்றி
அணைக்கட்டை
அடைந்து
எதிர்கால வாழ்வு பற்றி
ஏங்கும் சிறுவனே!
உனக்கும் ஒரு விடிவு
வரும் காத்திரு

ர. டன்சிகா
மானிப்பாய்

## மதில்மேல் பூனை

பொதுமக்கள் நலன்பேணும்
பண்புதனைக் கைவிட்டு
அதிமேதைகள் போல் நடித்து
காற்றடிக்கும் பக்கம் சாயும்
மதிகெட்ட மனிதர்கள்
எப்பக்கம் சேர்ந்தால்
தம் கைப்பை நிறைக்கலாமென
மதில்மேல் பூனைகளாயிருப்பர்
விழிப்பாய் இருந்திடுவீர்

துரை
தென்மட்டுவில்

## ஒரு ஓடை நதியாகிறது

புராதன காலத்தில்
தந்தை நீராடச் சென்ற பின்
திருஞானசம்பந்தர்
தனிமையில் இருக்க
அளித்தனர் காட்சி சிவன் உமை
இந்தச் சிறுவனோ
தாய் தந்தையர்
சுனாமியில்
தொலைந்தது தெரியாது
தனிமையில் படுத்திருக்க
யாரு காட்சியளிப்பர்
தாய் தந்தையாக

இரா.ஜெ.துஷ்யந்தா
மாதகல்

## வக்கிரம்

பாசமிகு தாய்மார்களே!
ஆவேசம் கொண்டால்
பாவம் இல்லையா?
பாசப் பிள்ளைகள்
என்ன செய்வர்?
பாசத்தை எதிர்பார்க்கும்
பிள்ளைகள்
வக்கிர குணம் கொண்ட
தாயைக் கண்டு
பயந்து நிற்கும்
எதுவும் நடக்கும் நிலை!
வேண்டாமே வக்கிரம்!

சி.சுகிர்தமலர்
உரும்பிராய்

## உயிரும் மெய்யும்

உடல் ஓம்பலுக்கும்
உயிர்களைக் காக்கவும்
நீச்சற் பயிற்சியானது
இன்றியமையாததொன்று
சுவர் இருந்தால்தான்
விரும்பிய சித்திரத்தை
வரைய முடியுமென்பதும்
இதனையே வலியுறுத்தும்
நீரிலிறங்காமல்
ஆரம்பப் பயிற்சியைத் தொடங்கும்
இச்சிறுவனின் செயலானது
சிந்தனைக்கு நல் விருந்து

க.நாகரர்சா, நுணாவில்

## உலகமே

மதில் மேல் பூனை
இருந்தாலும்
சிறுவன் இருந்தாலும்
இருதலைக் கொள்ளி
எறும்புதான்
கருணை காட்ட
குழந்தை உள்ளம் வேண்டும்
சிந்திக்க பெரியோர்
அறிவு வேண்டும்
மதில் மேல் இருந்தாலும்
அவதானமாய் இரு

க.அபர்ணா
வட்டுக்கோட்டை

## கவனயீனம்

சிறுவனே ஆபத்தான
உன் செயலைக் கவனியாமல்
உன் தாய் என்ன
ரீவியில் சின்னத்திரை
நாடகமோகத்தில்
மூழ்கிக்கிடக்கிறாளா?

சு.ஜெயரூபன், பருத்தித்துறை

## பசிவயிறு

கருணை உள்ளம் கொண்டவர்
என்போரை
பலரைப் பார்த்தேன்
அவர்கள் பசி வயிற்றைப்
பார்க்கவில்லை
கடவுளைத் தேடி தேடி
ஓடுகிறார் கோவிலுக்கு
அவர் அங்கே இருக்கிறார் என்று

பா.திவ்யா

# மௌனத்தின் தேடல் -263



**அன்பு வாசகர்களே !**

உங்கள் எண்ணத்தில் தோன்றும்
கவிதைகள் மற்றும் வியாசர்
பதிலுக்கான கேள்விகளை
ஆசிரியர்
'மௌனத்தின் தேடல்'
சங்குநாதம்
இல3,2ம் ஒழுங்கை,
பிறவுண்வீதி,
யாழ்ப்பாணம்.

எனும் முகவரிக்கு 26.08.2015ஆம் திகதிக்கு முன் அனுப்பிவைக்கவும்.

குறிப்பு :- குறைந்த வரிகளில் அமையும் கவிதைகளுக்கே முன்னுரிமை வழங்கப்படும்.

-ஆசிரியர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமையா? பதவியா?

## இலங்கைத் தேர்தல் முடிவு சொல்வது என்ன?

“தமிழ் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த இருவரை அல்லது ஒருவரையாவது அமைச்சரவைக்குக் கொண்டு வர வேண்டும் என்ற எண்ணம் தமிழ் தேசியக் கூட்டணியின் தலைவர் சம்பந்தன், ரணில்ஆகிய இருவருக்குமே உண்டு. இந்த நிலையில், இவர்களுக்குப் பதவியா? அல்லது தமிழர்களுக்கு உரிமையா? என்றுதான் இதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. நில மீட்பு இல்லாமல், இராணுவ வெளியேற்றம் இல்லாமல் இவர்கள் அமைச்சரவைக்குப் போனால், நம்முடைய ஆள் அதிகாரத்தில் இருக்கிறார் என்கிற எண்ணம் வேண்டுமானால், தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படும். அவ்வளவுதான்.”

மீண்டும் ஒரு முறை மரண அடி வாங்கியிருக்கிறார் மகிந்த ராஜபக்ஷே. கடந்த ஜனவரியில் நடந்த ஜனாதிபதி தேர்தலில் தோல்வியடைந்த மகிந்த ராஜபக்ஷ, எப்படியாவது பிரதமராகிவிடலாம் என்று கனவு கண்டார். ஆனால், “என் கனவு கலைந்துவிட்டது” என்று வாக்குமூலம் கொடுக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார். மகிந்த ராஜபக்ஷவின் தோல்வி, இலங்கைத் தமிழ் மக்களுக்கு ஓர் ஆறுதல்.

இலங்கையில் சம உரிமையோடும், கண்ணியத்தோடும் தமிழ் மக்கள் வாழும் சூழல் உருவாக வேண்டும் என்று விரும்புவோரால் வரவேற்க படுகிற ஒன்றாக, கடந்த 17ஆம் திகதி நடைபெற்ற இலங்கை நாடாளு மன்றத் தேர்தலின் முடிவு அமைந்துள்ளது. மகிந்த ராஜபக்ஷ இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை, ரணில் விக்கிரம சிங்க தலைமையிலான ஐக்கிய தேசியக் கட்சி பின்னுக்குத் தள்ளிவிட்டது.



ஐக்கிய தேசியக் கூட்டணி 106 இடங்களையும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 95 இடங்களையும் பிடித்தன.

225 இடங்களைக் கொண்ட இலங்கை நாடாளு மன்றத்தில் தனிப் பெரும்பான்மை பெறுவதற்கு 113 இடங்கள் தேவை. அதற்கு 7 இடங்கள் குறைவாகவே ரணில் கட்சி பெற்றுள்ளது என்றாலும், முஸ்லிம் காங்கிரஸ், ஜே.வி.பி., உள்ளிட்ட கட்சிகளின் ஆதரவு ரணில் கட்சிக்கு இருக்கிறது.

அதிலும் முக்கியமாக, 16 இடங்களை வென்றுள்ள தமிழ் தேசியக் கூட்டணியின் ஆதரவும் ரணிலுக்குத் தான். இதைக் கொஞ்சம் அழுத்தமாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ் தேசியக் கூட்டணியின் ஆதரவோடு தான், பிரதமர் நாற்காலியில் அமர்ந்திருக்கிறார் ரணில். அப்படியென்றால், போரில் பாதிக்கப்பட்ட இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு இதன் மூலம் விடிவு கிடைக்குமா?

இதுகுறித்து சென்னைப் பல்கலைக் கழகத்தின் அரசியல் மற்றும் பொது நிர்வாகத் துறை பேராசிரியர் இராமு.மணிவண்ணன் கூறும்போது,

“ஐக்கிய தேசியக் கட்சி பெற்றுள்ள இடங்களுக்கும், ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி பெற்றுள்ள இடங்களுக்கும் பெரிய வித்தியாசம் இல்லை. [illegible] பெற்றுள்ள இடங்கள் மட்டுமே. இந்தத் தேர்தல் மூலமாக, ‘சிங்களப் பேரினவாதம்’ என்பதற்கு எந்தவித வீழ்ச்சியும் ஏற்பட்டுவிடவில்லை. மகிந்த ராஜபக்ஷவின் கட்சி தோல்வியடைந்தாலும், அது ஒரு வலுவான எதிர்க்கட்சியாக நாடாளுமன்றத்தில் அமர்ந்துள்ளது.



தமிழ் தேசியக் கூட்டணி ரணிலுக்கு ஆதரவு அளிக்கிறது. தமிழர் பகுதிகளில் இருந்து இராணுவத்தை வெளியேற்றாமல், தமிழர்களின் நிலத்தை மீட்காமல், தமிழர்களுக்கு நில உரிமை வழங்காமல், அவர்களின் வாழ்வுரிமையில் எந்தவொரு மாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. இந்தக் கோரிக்கைகளை நிறைவேற்ற வேண்டும் என்று தமிழ் தேசியக் கூட்டணியால் அரசுக்கு அழுத்தம் கொடுக்க முடியும். உரிமைகளுக்கான போராட்டத்தை இவர்கள் நடத்தினால் ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடியும். ஆனால், அதை அவர்கள் செய்வார்களா என்று உறுதியாகச் சொல்ல முடியாது. அவர்களிடம் அதை நான் எதிர்பார்க்கவில்லை.

தமிழ் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த இருவரை அல்லது ஒருவரையாவது அமைச்சரவைக்குக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் தமிழ் தேசியக் கூட்டணியின் தலைவர் சம்பந்தன், ரணில் ஆகிய இருவருக்குமே உண்டு. இந்த நிலையில், இவர்களுக்குப் பதவியா? அல்லது தமிழர்களுக்கு உரிமையா? என்றுதான் இதைப் பார்க்க வேண்டியிருக்கிறது. நில மீட்பு இல்லாமல், இராணுவ வெளியேற்றம் இல்லாமல் இவர்கள் அமைச்சரவைக்குப் போனால், நம்முடைய ஆள் அதிகாரத்தில் இருக்கிறார் என்கிற எண்ணம் வேண்டுமானால், தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படும். அவ்வளவுதான்.

20ஆவது அரசியல் சட்டத் திருத்தம் கொண்டு வருவோம் என்றெல்லாம் ரணில் சொல்லியிருக்கிறார். மூன்றில் இரண்டு பங்கு பலம் இருந்தால் மட்டுமே அதையெல்லாம் செய்ய முடியும். தற்போதைய பலத்தை வைத்துக் கொண்டு முக்கியமான மாற்றங்கள் எதையும் அவரால் கொண்டுவர இயலாது.

இலங்கையில் நடந்த இனப் படுகொலை குறித்து சர்வதேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை மிக முக்கியமானது. ரணில் கட்சி, மகிந்த ராஜபக்ஷ கட்சி என இரண்டுமே அதை ஏற்கவில்லை.

உள்நாட்டு விசாரணை நடந்தாலும் கூட, சர்வதேச நீதிமன்றத்தில் யாரையும் இவர்கள் முன்னிறுத்த மாட்டார்கள். ஆகையால், தமிழர்களுக்கான நீதியைப் பெறுவதற்கு என்ன போராட்டம் நடத்த வேண்டுமோ, அதை நடத்தித்தான் பெற வேண்டும்” என்றார்.

தனது கட்சியின் வெற்றி உறுதியான நிலையில், “இலங்கை மக்கள் அனைவரும் சம அந்தஸ்துடன், இணக்கத்துடன் வாழக் கூடிய புதிய தேசத்தை உருவாக்குவோம்” என்று அழைப்பு விடுக்கும் அறிக்கை ஒன்றை வெளியிட்டார் ரணில்.

ஜூனியர் விகடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுகர்வுக் கலாசாரத்தால் விழுங்கப்படும் தேசியம்



நடந்து முடிந்த தேர்தல் ஊழல்களற்றுச் சுதந்திரமாக நடைபெற்றதென்பது மிக முக்கியமானதொரு அம்சம். ஒரு புள்ளடியை இடுவதன் மூலம் மக்கள் சொல்லும் செய்திகள் பன்முகமானவை. அது மட்டுமல்ல மக்கள் எனப்படுபவர்கள் ஒருமைத தன்மையான கூட்டமுமல்ல. எனவே வாக்களிப்பு முடிவுகளும் பலவிதமாக வியாக்கியானப்படுத்தப்படவும் கூடியவை.

இத்தேர்தல்களின் மூலம் கண்மூடித்தனமான இனவாதப்போக்கைக் கொண்டவர்களே பெரும்பான்மையானவர்கள் என்ற போக்குச் சற்று மாறியிருக்கிறது. நாட்டின் சமூக பொருளாதார சூழலியற் கட்டமைப்புகளை மோசமான முறையில் அழிக்கக் கூடிய ஊழல் நிறைந்த குடும்ப அதிகாரத்தை இலங்கை தழுவி அனேகமானவர்கள் நிராகரித்திருக்கிறார்கள். மேலும் குறிப்பிடக்கூடிய ஒரு அம்சம் இத்தேர்தலில் இடதுசாரிகள் பின்னடைவைச் சந்தித்திருக்கின்றமையாகும்.

அமைக்கப்படப்போகிற ஐக்கிய தேசியக் கட்சி தலைமையிலான அரசாங்கம் நாட்டிலுள்ள ஏனைய இனங்களை எப்படி அணுகப்போகிறது என்பதை இப்பொழுதே எதிர்வுகூற முடியாது. ஆயினும் வரப்போகும் அரசாங்கத்திற்கு இலங்கையில் நிலவும் இனப்பிரச்சனைக்கு தீர்வை- தமிழ்த்தேசிய இனத்தை முஸ்லிம் களை திருப்திப்படக்கூடிய ஒரு தீர்வை வழங்க வேண்டிய கடப்பாடு உள்ளது.

இங்கே நான் நியாயமான தீர்வு என்ற சொல்லைப் பயன்படுத்தவில்லை. நியாயங்கள் இவ்வுலகில் கிடைப்பதில்லை. அவை எடுத்துக் கொள்ளப்படவேண்டியவை் போராடிப்பெறப்படவேண்டியவை. நியாயத்தை எடுத்துக்கொள்வ்தற்கான வலு வரும் போதுதான் அதனை எடுத்துக கொள்ள முடியும். இவ்வலு ஒரு மக்கள் கூட்டத்தின் அகபுறச்சூழ்நிலைகளிற் தங்கிய விடையம். இப்பொழுது வலுவற்றிருக்கிறோம் என்பதை ஒத்துக்கொள்வது உண்மையிலும் ஒரு மக்கள் கூட்டம் தனக்குக் கிடைக்க வேண்டியவை கிடைக்கவில்லை என்பதை மறந்ததாக ஆகாது.

தமிழ்மக்கள் இத் தேர்தலிற் சொன்ன முக்கியமான செய்தி எங்களை எங்கள பாட்டிற் சீவிக்க விடுங்கோ என்பதுதான்.

சுதந்திரத்தின் பின்னர் தமிழர்கள் வன்முறை நிறைந்த போராட்டவழியைச் தெரிவு செய்வதற்கு 3 தசாப்தங்கள் எடுத்தது. இதுவும் அகப்புறச் சூழ்நிலைகள் கூறிப்பாகப் புறச் சூழ்நிலைகள் சாதகமாக இருந்ததாலேயே சாதகமானது. ஆயினும் அவ்வழியும் மிகமிகக் கொடூரமான முறையிற் நசுக்கப்பட்டபோது எமது இனத்தின் ஆன்ம வலுவும் சேர்ந்துதான் நசுங்கியது. இவ்விடத்தில் ஒன்றைக் கவனிக்க வேண்டும். தாம் யாருக்கப் போராடுகிறார்களோ அந்த மக்கள், தருகிற செய்தியை அவர்களுக்காகப் போராடுகிற அமைப்போ கட்சியோ புரிந்துகொள்ள வேண்டும். (நிக்கராகுவாவில் 90களில் டானியல் ஒட்டேகா மக்கள் ஆதரவு குறைந்த போது. ஆயுதப்போராட்டத்தை விட்டு நாடாளுமன்ற வழிக்குத் திரும்பயிருந்தார்)

ஒரு இனம் தானுண்டு தன் வேலையுண்டு என இருக்க முனைவது பிழையான பிற்போக்குத்தனமா? அரசியல் அறிவீனமா?

இல்லை. தமிழ்ச் சமூகம் கடந்த 3 தசாபதங்களாகக் கடந்து வந்த பாதையைப் பார்த்தோமென்றால் அவர்களின் இம்முடிவு முற்றிலும் அரசியல் ரீதியானது என்பது புரியும்.

எனவே இச் செய்தியைச் சொல்வதற்கு அவர்களுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டால் யார் கிடைப்பார்? தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்து முழங்கிய சம்ஸ்டி கூடக் கிடைக்கக் கூடிய ஒன்றல்ல என்பது தமிழர்களுக்குத் தெரியும். ஆனால் முக்கியமானது என்னவென்றால் தமிழ் தேசியக்கூட்டமைப்பைத் தெரிவு செய்தால் தீர்க்க முடியாத முரண்பாடுகளுக்குள்ளும் இராணுவம் மற்றும் புலனாய்வுக் கெடுபிடிகளுக்குள்ளும் தாங்கள் சிக்க வேண்டிவராது என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார கள். தேர்தல் முடியத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களோடு ஒரு சோலிக்கும் போகாது. அவர்கள் தங்களுடைய சோலியைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். தங்களுடைய சட்டைப்பையை நிரப்புகிற வழியைப் பார்த்துக்கொண்டிருப்பார்கள். தீவிரமான அரசியற்கோரிக்கைகள் அரசியல் ஆர்பாட்டங்கள் எதுவுமிருக்காது. தனிப்பட்டவர்களின் தேவைகள் அவரை இவரைப் பிடித்துப் பின்கதவால் நிறைவேற்றப் பட்டுவிடும்.

நவீன உலகில் மக்களின் சிந்தனை மற்றும் பொதுப்புத்தி என்பன தனியே உள்நாட்டு நிலைமைகளால் தீர்மானிக்கப படுவதில்லை. இவை உலகளாவிய நிலமைகளால் தீர்மானிக்கப்படுகின்றன. மக்களின் பொதுப்புத்தியும் இளைய தலைமுறைகளின் சிந்தனையும் நுகர்வுக்கலாசாரத்தை நோக்கி வழி நடத்தப்படுகின்றன. உலகாளாவிய இடது சாரிகளின் வீழ்ச்சிக்கு இதுவும் ஒருகாரணம். நாடுகளை அகலத் திறந்து வீடுகளை அகலத்திறந்து மக்களை இனம் மதம் மொழி பேதமற்ற நுகர்வுக்கலாசாரத்தின் ஒரு பகுதியாக்கவே உலகளாவிய முதலாளித்துவ கலாசாரம் விரும்புகிறது. அதனைச் சாதிக்கக் கூடிய அரசாங்கங்களையே இக்கலாசாரம் வரவேற்கின்றது் ஊக்குவிக்கிறது் பாதுகாக்கிறது (ஒரு நாடு சீனரஸ்சிய அமெர்க்க சார்பு நிலைகளில் எதனை எடுத்துக் கொண்டாலும் அடிப்படையில் அவை முதலாளித்துவ நலன் பேணும் அமைப்புக்களே) இந்த நூற்றாண்டில் இவ்வணுகு முறையில் உலகளாவிய முதலாளித்துவம் வெற்றியும் அடைந்துள்ளது. வடகொரியாவையும் கியூபாவையும் தவிர உலகின் அனைத்து நாடுகளும் இக் கட்டமைப்புக்குள் தான் இருக்கின்றன் இயங்குகின்றன. (அண்மையில் கியூபாவிலும் அமெரிக்கா தனது தூதரகத்தைத் திறந்து விட்டது.) தொலைத்தொடர்பு சாதனங்கள், ஊடகங்கள், மற்றும் சமூக வலைத்தளங்களினூடாக உருவாக்கப்பட்டுள்ள உலகக் கிராமத்தில் பாறைகளில் முட்டிக் கொள்ளக் கூடிய, தீயுக்குள் பாயக்கூடிய பிள்ளைகள் உருவாக்கப்படுவது தடுக்கப்படுகிறது. தீவிரமான அரசியல் நிலைப்பாடுகள் கண்காணிக்கப்படுகின்றன.

உலகை வழி நடத்தும் நுகர்வுக்கலாசாரத்தின் ஒரு பகுதியாக வாருங்கள் எனப் விடுதலைப் புலிகளுக்கு வேண்டுகோளும் அச்சுறுத்தலும் வைக்கப்பட்டது. விடுதலைப் புலிகள் அதனை புரிந்து கொள்ளக் கூடிய நிலையில் இருக்கவில்லை. ஆனால், தமிழ் மக்கள் புரிந்து கொண்டுவிட்டார்கள். இனிமேற் கடவுள் கேட்டாலும் அவர்கள் திரும்பமாட்டார்கள்.

ரணிலின் தலைமையின் கீழ் வடக்கு கிழக்கு முழுமையாக உலக முதலீட்டுக்குத் திறந்து விடப்படுமென்றே எதிர்பார்க்கலாம். இது மக்களின் அரசியற் சிந்தனையில் மாற்றங்களைக் கொண்டு வரும். மேலும் இதன் மூலம் ஒரு வகையில் தமிழர்கள் தமக்கான மூலதனத்தை அரசியற் பிரக்ஞையுடன் உருவாக்கவும் சாத்தியங்கள் தோன்றலாம் ஆனால் இது பிரிவினைக்கான சாத்தியங்களைத் தோற்றுவிக்காது.

இவை எல்லாவற்றையும் பார்க்கும் போது தமிழர்களது நியாயமான அரசியற் கோரிக்கைகளை அடைவதற்கான அரசியற்தளம் முற்றிலும் வேறுபட்டதாகி விட்டது என்பது புரியும். இதன் வழி நாடாளுமன்ற அரசியலை மையப்படுத்திய கட்சி அரசியல் தமிழர்களின் அரசியற்பயணத்தின் தவிர்க்க முடியாத பகுதியாகிறது.

ஈழம் சுயநிர்ணய உரிமை சுயாட்சிப் பிரதேசம் சமஸ்டி உச்சக்கட்ட அதிகாரப பகிர்வு போன்றவை இலட்சிய நிலமை களாக மாறியுள்ளன. இலட்சியத்தை அடைய ஒவ்வொருவருக்கும் உரிமையுள்ளது. ஆனால் இவை மிக நீண்டதூர இலக்குகள். இவற்றைக் கைவிட வேண்டிய தில்லை. அதே நேரத்தில் இலங்கை என்னும் ஒருமையான அலகுள் இயங்கவும் வேண்டும். இந்த இயக்கம் இரண்டு பரிமாணங்களைக் கொண்டது. ஒன்று நாடாளுமன்றக் கட்சி அரசியல். மற்றையது நாடாளுமன்றத்திற்கு வெளியிலான அரசியல்.

கட்சி அரசியல் என்று வரும்போது சிறுபான்மை இனக்கட்சிகள் தம்மைச் சனநாயகப்படுத்த வேண்டும். ஒவ்வொரு கட்சியும் முறையான யாப்புடன் கூடியதாகவும் பெருந்தொகையான பதிவு செய்யப்பட்ட அங்கத்தவர்களைக் கொண்டதாகவும் இருப்பது சனநாயகத்திற்கு அவசியமானது. கட்சியின் உறுப்பினர்களும் தலைவர்களும் குறித்த கால இடைவெளிகளிற் உறுப்பினர்களால் சனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட வேண்டும். கட்சியின் கருத்தியல் நடத்தை மற்றும் பொருளாதாரச் செயற்பாடுகளைக் கண்காணிக்கும் சுயாதீனமான பொறிமுறைகள் உருவாக்கப்பட வேண்டும். கட்சிகள் கிராம மட்டங்கள் வரை தமது செயற்பாடுகளை விரிக்க வேண்டும். கட்சிகள் மக்களின் தேவைகள் மற்றும் உணர்வுகள் குறித்து விழிப்புணர்வையும் கொண்டிருக்க வேண்டும். கட்சிகளின் உறுப்பினர்களும் தலைவர்களும் அவர்களது வேலை நேரங்களில் மக்களால் அணுகப்படக்கூடியவர்களாக இருக்க வேண்டும். இவை சாத்தியமற்ற விடையங்கள் அல்ல.

கட்சிக்கு வெளியிலான அரசியல் என்பது நாங்கள் எங்களுக்குள் நிலவும் உள்முரண்பாடுகள் ஒடுக்குமுறைகள் கலாசாரச் சீரழிவுகள் பிற்போக்கான அம்சங்கள் குறித்த, விழிப்புணர்வை அடைவதைக் குறிக்கிறது. இந்த விழிப்புணர்வின் மூலம்தான் எங்களது கூட்டு ஆன்மா வலுவடைவதற்கான வழியைக் கண்டடையமுடியும். நாங்கள் ஒரு தேசிய இனம் எனவே எங்களுக்குள் ஒற்றுமை வேண்டும் எனக்கூறுவது அடிப்படையிலே பிழையானது. ஒற்றுமை என்ற சொல்லே ஒடுக்குமுறைக்கான முதற்படிதான். ஒரு இனத்தினுள் உள்ள பல்வேறு கூறுகளும் ஒற்றுமையுடன் இருக்க முடியாது. பதிலாக அக்கூறுகள் ஒவ்வொன்றும் தமக்கான சரியான பிரதிநிதித்துவத்துடன் ஒடுக்குமுறையற்ற நோக்கங்களுக்காக சேர்ந்து வேலை செய்ய முடியும். இதற்கான சிந்தனை வலுவைத்தான் நாங்கள் உருவாக்க முனைய வேண்டும்.

ஊழலற்ற செயற்திறன் கொண்ட சனநாயக் சிந்தனையுள்ள கட்சிகள்- பொது நோக்கங்களுக்காக இணைந்து வேலை செய்யும் வலுவுடைய கட்சிகள் உருவாகிச் சமூகத்துள் நிலவும் பிற்போக்கான அம்சங்களைக் களைவதற்கான உரையாடலும் ஆரம்பிக்கப்படும் போதுதான் நாங்கள் வலுவடைவோம். அதுவரையிற் கூட்டமைப்பு ஐந்து வருடங்களுக்குத் தன்பாட்டுக்குப் போகும். நாங்கள் எங்கள் பாட்டுக்குப்போவோம்.

எங்களுக்காக நாங்கள் செய்யவேண்டியவை நிறைய உண்டு. நுகர்வுக் கலாசாரத்திலிருந்து விடுபடுவதற்கு, உயிர்ப்பாக இயங்கும் சமூகத்தைக் கட்டியெழுப்புவது, இலகுவான விடயமல்ல. விரக்தியின் விளிம்பில் இருக்கக் கூடிய மனிதரை, சமூகத்தை அந்த வட்டத்தைவிட்டு வெளியே கொண்டுவரவேண்டுமானால், வேலை வாயப்பு, ஊதிய உயர்வு அத்தியாவசியப் பொருட்களின் விலைக்குறைப்பு போன்றவற்றின் ஊடாக சமூகப்பொருளாதார வளம் உயர்த்தப்பட வேண்டும்... *பூனைக்கு யார் மணிகட்டுவது?* இதுதானே இன்றைக்கும் உள்ள கேள்வி.

தமிழ்மக்களுக்கான இப்பேற்பட்ட உதவிகள், உதிரியாக, திட்டமிடப்படாமல், சமூகப் பிரக்ஞை, சமூக உயிர்ப்பு, தேசியம் என்பவை கருத்தில் கொள்ளப்படாமல் கடந்த காலத்தில் சில பாராளுமன்ற உறுப்பினர்களால் சுயநல நோக்கோடு மேற்கொள்ளப்பட்டது. அதுவும் புலம் பெயர்ந்த மக்களது உதவிகள் அந்தவகையில் கையாளப்பட்டுக்கொள்ளப்படுவது என்பது தமிழ்மக்கள் பெற்ற வரமா? சாபமா? என்றுதான் கேட்கத் தோன்றுகிறது.

-தேவ அபிராவின் பத்தியிலிருந்து-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மௌனம் கலைகிறது



மதியம் ஒருமணி. உச்சி வெயில் உடம்பை வாட்டி எடுக்கிறது. உள்ளமும் சேர்ந்து கொதித்துக்கொண்டிருக்கிறது அவளுக்கு.

நகரின் சனநடமாட்டம் அதிகமுள்ள வீதியை அண்மித்தபோது, அவளது சைக்கிள் காற்றுக்குறைந்து வளையம் நிலத்தில் இடிக்கிறது.

கரா...கரா..கிறு..கிறு...கரா...கரா... கிறு.. கிறு..என்று அது ஒலி எழுப்பி, அவளது கோபத்தை மேலும் அதிகரிக்கிறது.பாதையில் பயணிப்பவர்கள் அனை வரும் அவளை ஒருமுறை சோகமாய்ப் பார்த்து சைக்கிளையும் ஒருமுறை பார்த்துவிட்டுதமது வேலை யோடு தமது பாதையில் சென்றனர்.

சந்திகளிலும் முச்சக்கர வண்டிகளிலும் நின்றுகொண்டிருக்கும் இளம் வாலிபர்களினது நக்கல்கள், நையாண்டிகள், வசீகரப் புன்னகைகள், பெண்கள் மேல் பார்க்கின்ற அந்தப் பார்வை ... அவளுக்கு பயமும் கோபமும் ஒரு சேர வந்தது.

இதென்னடா பெடியன்கள் ...என்றெண்ணியவாறு மனவருத்தத்துடன் செல்கிறாள்.

கல்வித் திணைக்களத்திலிருந்து இரண்டரைக் கிலோமீற்றர் தூரத்தை-ஒட்டிய வெறும் வயிற்றோடு சைக்கிள் வலித்து வந்த அவளக்கு வயிற்றுக்குள் புகைகிறது. கால்கள், விண்விண் என்று வலிக்கிறது.

சைக்கிளிலிருந்து இறங்கி தென் மேற்குப் பக்கமாக வீதியில் தபால் அலுவலகத்தோடு சேர்ந்திருக்கும் கடையை நோக்கி நடக்கின்றாள்.

பாதையில் ஒரே சனநடமாட்டம். அதிக வாகன இரைச்சல், சந்தைக்குப் போவோர் வருவோர் என இவை எல்லாவற்றிலும் ஒரே ஆரவாரம்.

தினமும் அப்பாதையால் போய் வரும் அவளுக்கு எல்லாமே பழக்கப்பட்டவை. எதிலும் மனம் ஒன்றித்து ரசிக்கும் மனநிலையிலா அவள் இருக்கிறாள்?

சைக்கிள் கடையின் முன் நின்றபடி, அந்த கடைக்காரப் பையனை அழைத்தாள். எழுந்து வந்து சைக்கிளை வாங்கிய அந்தப் பையன் "ரீச்சர் சைக்கிளுக்கு என்ன நடந்தது?" அவனை எங்கோ பார்த்த உணர்வு ஏற்படுகிறது. சிறிது நேரம் யோசிக்கிறாள்... கரன்...கரன்...

எப்பாந்தரத்தில் அவளிடம் படித்தவன் நாட்டுச் சூழலை, குடும்ப சூழ்நிலை காரணமாக அவனால் தொடர்ந்து படிக்கமுடியவில்லை.

சைக்கிளை சரிபார்த்து, காற்றடித்துவிட்டு "ரீச்சர் ரயர் நல்லாத் தேய்ந்து போய்ச்சுது புதுசாகப் போட்டால் நல்லது" என எச்சரிக்கையுடன் சொல்லிக் கொண்டு சைக்கிளைத் தருகிறான்.

இப்படி 3-4 மாதங்களுக்கு முன்னரும் யாரோ சொல்லியிருந்தாலும் அவளும் அதை அறியாதவளல்ல. கையில் பணம் வரவேணுமே எதைச் செய்வதெண்டாலும்...

நீண்ட காலத்தின் பின் கரனைப் பார்த்ததில் அவளுக்கு மகிழ்ச்சி- சின்ன வயதில் குடும்பப் பொறுப்புடன் வேலை செய்வதைப் பார்க்க அவன் மீது ஒரு மதிப்பு ஏற்பட்டது. இருந்தாலும் படிக்கவேண்டிய சிறு வயதில் அவன் தொழில் பார்த்துக் கஸ்டப்படுவதை எண்ணுகையில் வருத்தமாக இருந்தது அவளுக்கு.

கடையிலிருந்து இன்னும் ஐந்து கிலோ மீற்றர் வலித்தால் பாடசாலை வந்துவிடும்.

நிரந்தர நியமனம் பெற்ற உதவி ஆசிரிய உதவியாளர் பட்டியலில் தன் பெயரைப் பார்க்கும் ஆவலில் அம்மா தந்த வெறும் தேநீருடன் புறப்பட்டவளின் வயிறு, காறம்முறாம் என்று உருண்டு புரண்டு உறுமியது... பசியெடுக்கத் தொடங்கிவிட்டதை உணர்ந்தாள். தலையும் இலாசாக வலித்தது.

அரச நியமனம் ஒன்றுக்காக இத்தனை வருட காலமும் பொறுப்போடு நின்றவளுக்கு இப்போ...

இந்தப் பாடசாலையிலுள்ள பல ஆசிரியர்களில், அவள் ஒருத்தியே தொண்டராசிரியர். ஆனால், எந்த வேலையானாலும் மறுக்காமல் முந்திக்கொண்டு செய்வாள் அவள். இதனால், மாணவர்களின் மதிப்பும் மரியாதையம் மட்டுமல்ல சக ஆசிரியர்களின் எரிச்சல், கோபம், அர்ச்சனைகளும்கூட இவளுக்குத்தான் அதிகம். தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம், கல்வியமைச்சரின் தீர்மானம் என அடிக்கடி வரும் பத்திரிகை செய்திகள், எவ்வளவு நம்பிக்கையை அவளுக்கு ஊட்டின. அதனை உறுதிப்படுத்தும்படியான – அதிபர், மற்றும் திணைக்கள அதிகாரிகளின் வலுவூட்டும் வார்த்தைகள்...

இன்று எல்லாமே...

ஏமாற்றம் விரக்தி, சோர்வு, துக்கம் என ஒன்றன் பின் ஒன்றாக அவள் மனதை ஆக்கிரமிக்கத் தொடங்கியிருந்தன.

மாதமொருமுறை அதிபர் தருகின்ற 500 ரூபாய் பணமும் 2 கிலோகிராம் அரிசி, 1 கிலோகிராம் கடலைப்பருப்பு, 1 ரின் மீன் அவளின் தேவைகளைப் எப்படிப் பூர்த்திசெய்யும்? அதற்காக சகோதரர்களிடமும் உறவுகளிடமும் கேட்கும் நையாண்டிச் சொற்கள்... நச்சரிப்புகள்... எவ்வளவு காலம் அவற்றைத் தாங்கி வந்திருக்கிறாள்.

அத்தனைக்கும் அப்பாவின் அரவணைப்பே அவளது மனதுக்கு ஆறதலளித்தது. இருந்தாலும் அப்பாவேசிலசமயம் இவ்வளவுகாலத்துக்கு இப்படி சம்பளமில்லாம் கஸ்டப்பட வேணுமா? என்பது போல பார்ப்பார்...

எல்லாக் கஸ்டத்தையும் தாண்டி, தொண்டர்களுக்கு நியமனம் வழங்கப் பட்டிருக்கெண்ட செய்தி எவ்வளவு மகிழ்ச்சியை அவளிடம் கொடுத்திருந்தது. ஆனால், அது ஒரு நொடிதானும் நிலைக்கவில்லை.

இந்த நேர்முகத் தேர்வுக்கு வேண்டிய சகல ஆவணங்களையும் சரியாகச் சமர்ப்பித்திருந்தும்... சேவை விபரம், அதிபரின் சிபாசுக்கடிதம், ஏனைய சான்றிதழ்கள் எல்லாமே சரியாகத்தான் சமர்ப்பித்திருந்தாள்.

எவ்வளவு நம்பிக்கையுடன் காத்திருந்தாள்...

பாடசாலை வந்து சைக்கிளை விட்டிறங்கி உடலில் ஊறிப் பிசுபிசுத்த வியர்வையை துடைத்துக்கொண்டு அதிபர் முன்னிலையில் போய் நிற்கிறாள்...மீண்டும்.

சைக்கள் வலித்து வந்ததில் அவளுக்குமூச்சுவாங்கியது. அதிபர்நிமிர்ந்து பார்த்தார்.

"திணைக்களத்துக்குப் போயே வருகின்றீர்?" தலையசைத்தாள்...

"நியமனப் பட்டியலில் உம்மடை பேரும் இருக்கோ?"

"இல்லை சேர்..."

சோர்வுற்றிருந்த அவளின் நாவால் வார்த்தைகள் வர மறுக்கின்றன.

"என்னவாம்..."

"அப்பீல் செய்யட்டாம்..."

"எழுதிக் கொடுத்தநீரோ...?"

பொங்கி வந்த அழுகையை நெஞ்சுக்குள் அடக்கியவளாக, கடிதத்தைக் கொடுக்கின்றாள்.

அதிபர் அதில் ஒரு கையெழுத்தைப் பதிந்துவிட்டு, "ரீச்சர் இதுகளுக்குக் கவலைப் படக்கூடாது. அதில பெயர் வந்தவையில சிலர் வெளிநாடு, வேற வேலை, கலியாணம், பிள்ளைகள் என்று போயிருப்பினம். அதனால, வெயிற்றிங்கில உங்கட பெயர் வரும் கவலைப்படாதையுங்கோ..."

அதிபரின் ஆறுதலான வார்த்தைகள், இன்று அவளுக்கு தேறுதலாக அமையவில்லை. ஆனாலும், கடிதத்தை வாங்கித்திரும்புகையில்,

"ரீச்சர் நாளைக்கு கட்டாயம் வந்திடுங்கோ, வலயத்திலிருந்து கடிதம் வந்தது. தமிழ்த்தினப்போட்டிக்கு விண்ணப்பம் வந்திருக்கு. உங்களிடம் இம்முறையும் சிறுகதையும் கவிதையும் பொறுப்புத் தந்தருக்கினம். போன முறையும் வடிவாய்ச் செய்தனீங்கள். மாகாணமட்டம் வரை போனது. இம்முறையும் உங்களைத்தான் நம்பியிருக்கிறன்". என தனது கருமத்தில் கண்ணாக இருப்பதை மேலும் உறுதிப்படுத்த...

பதிலளிக்க வார்த்தைகள் ஏதுமின்றி விரக்தியுடன் பாடசாலையை விட்டு வெளியேறுகின்றாள். மதியம் சாப்பாட்டு நேரம்– கல்வித் திணைக் களத்தில் கதிரையைவிட்டு எழுந்து போய்விடுவார்கள் என்ற அவசரத்தில் சைக்கிளை ஊன்றி ஊன்றி மிதிக்கிறாள். வழியில் கண்டவர்களைக் கண்டும்காணாததுபோல பயணத்தில் கண்ணாயிருந்து திணைக்களத்தினை அடைந்தவளுக்கு இன்னொரு ஏமாற்றம்.

கல்விப் பணிப்பாளர் வெளியே போய்விட்டார் விசாரித்ததில் சாப்பாட்டுக்குப் போனவர் இன்னமும் திரும்பவில்லை எனத்தெரிகின்றது.வெளியில் சிற்றுண்டிச் சாலையில் தண்ணீரைக் குடித்துவிட்டு அலுவலக வாசலிலுள்ள மாமரத்தின்கீழ் காத்திருக்கின்றாள். மெல்லியவாடைக்காற்றுவந்துஉடலை வருடிச்செல்ல அவளுக்குச் சுகமாக இருந்தது.

மனது மட்டும் அந்த வெறுமையான அலுவலகம் போல...

சாப்பிடப்போனவர்கள் ஒவ்வொருவராக வந்துகொண்டிருக்க அவளது பால்ய சினேகிதி பாமினி யாருடனோ சிரித்துப் பேசிக்கொண்டு வருகிறாள்.

பாமினி முதலாம் வகுப்பு முதல் க.பொ.த. சாதாரணதரம் வரை அவளுடன் ஒன்றாய் படித்தவள்.அங்கிலப் பாடமென்றால் "மது.. மது.." என்று வழிந்தபடி இருப்பவள். ஆங்கில பாட நேரம் தவறாமலே எப்படியோ எல்லாம் பார்த்துப் பார்த்து எழுதிவிடுவாள்.

அருகில் வந்ததும் சிறிதாக புன்னயை உதிர்த்துவிட்டு ஒருவித அலட்சியத்தோடு சென்று மறைகிறாள். இன்று அவள்... முகாமைத்துவ உதவியாளர். யாரோ ஒரு அரசியல் வாதியின் அருளால், அரச நியமனத்தில் நிலையாக நின்றுவிட்டாள் அவள்.

நேரமோ மூன்று ஆகிறது. இறுதியாக கல்விப்பணிப்பாளரும் வந்து சேர்ந்தார்.

வெளியே இருப்பவர்களைக் கண்டும் காணாமல் அறைக்குள் போய் அமர்கிறார்.

அந்த அறைவாசலில் பலர் நின்றுகொண்டிருக்கிறார்கள்.

கல்வி அதிகாரியோ யாரையும் உள்ளே அழைப்பதாகத் தெரியவில்லை. தனது கருமத்தில் மட்டும் கண்ணாயிருந்தார்.

உள்ளேபோக எல்லோரும் பயந்தபடி நின்றுகொண்டிருக்கிறார்கள்.

எவ்வளவு நேரந்தான் இப்படி...? மனதுக்குள் தன்னம்பிக்கையையும் துணிவையும் வரவழைத்தபடி உள்ளே போகின்றாள்.

அவரது கவனம் அப்பொழுதும் கலைவதாக இல்லை.

"சேர் மன்னித்துக் கொள்ளுங்கள்" அவளது குரல் தழுதழுத்தது. அப்பொழுதுதான் தலையை நிமிர்த்தி "என்ன வேணும்?" என முறைப்புடன் கேட்கின்றார்.

கையிலுள்ள அப்பீல் கடிதத்தை அவரிடம் நீட்டுகிறாள். கை லேசாக நடுங்குகிறது.

கடிதத்தை வாங்குவதற்கு கையை நீட்டியவாறே... "என்ன இது.." அதிகாரத்துடன் கேட்கின்றார்.

"நியமனம் கிடைக்காதவை எல்லோரும்..."

கடிதத்தை உடைத்துப் பார்த்தவாறே...

"எங்களுக்குத் தொல்லை தாறன் எண்டுதான் எல்லோரும் நிக்கிறியள்" எனவேண்டாவெறுப்பாக பேசுகிறார்.

செய்யிற அநியாயங்கள் ஒரு பக்கம் இருந்தாலும், ஏதோ ஒப்புக் காவது தன் கதையை காதுகொடுத்துக் கேட்பார் என்று எதிர்பார்த்தவளுக்கு, பெரும் அதிர்ச்சியாக இருந்தது...

அப்பீலை வாங்கி மேசைமீது போட்டுவிட்டு கேள்விக்கணைகளைத் தொடுத்தார்.

"ஏ.எல். இருக்குதா?"

"இருக்குது சேர்."

"அதிபர் சிபாரிசு இருக்குதா?"

"இருக்கு சேர்."

"ஏ.எல். என்ன பாடம்?"

"வணிக்க் கல்வி சேர்."

"வணிகக்கல்வியா?"

"ஓம் சேர்"

"எந்தப்பள்ளிக்கூடம்?"

"யா/.......அ.மி.த்.க. பாடசாலை."

"அப்பா என்ன செய்கிறார்?"

கூலிவேலை.

"ஆ...கூலிவேலையா... அப்படியென்றால்..."

"அதுசரி இப்பவும் பள்ளிக்கூடப் பக்கம் போறதா...?"

"சேவையில தொடர்ச்சியாக இருக்கிறீரா?"

"ஓம் சேர்."

"எவ்வளவு காலமாக... எட்டு வருடமாக..."

"இதென்ன பதினைந்து, இருபது வருஷமாய் வேலை செய்யிறவையும் இருக்கினம்." இவ்வாறு... வெளியே நிற்பவர்கள் இவளைப் பாக்கும்பீடி ஏளனமாகக் கதைக்கிறார். அவளுக்கு ஆத்திரமாகவே இருந்தது. கடிதத்தில் அனைத்து விடயங்களும் இருந்தும்.... இந்த மனுஷன்..கடவுளே...!

சேர்! இந்த நியமனத்தில பள்ளிக்கூடப்பக்கம் போகாதவைக்கும் நியமனம் கிடைச்சிருக்கு.

"அதுஎப்படி உனக்குத்தெரியும்?" வார்த்தைகள் கோபாவேசமாய் புறப்பட்டன.

அவளையும் அறியாமல் தனக்கான ஞாயத்துக்காக அவள் மனதிலிருந்து வார்ததைகள் வெடிக்கின்றன... உதடுகள் துடிக்கின்றன.

"சேர் அவ ரூபனியும் என்னோட தான் படித்தவ."

அவர் மறுகணம் அதிர்ந்து பின்னர் தன்னைச் சுதாகரித்தவண்ணம் "யார் அந்த ரூபினி...?" என்றார் ஒன்றுமே தெரியாதவர் போல.

"உங்கள் பெறாமகள் பக்கத்து வீட்டுக்காரிதான் சேர்..."

"ஓ அதுக்கென்ன இப்போ?"

அவ எந்தப்பள்ளிக்கூடத்தில தொடர்ச்சியா படிப்பிச்சு... எத்தினை வருசம் படிப்பிச்சு... தொண்டராசிரியராக நியமனம் கிடைச்சது சேர்? நியமனம் கிடைக்கிறதுக்கு மூன்று மாதம் முதல்தானே படிப்பிக்க வந்தவ. அதைக்கூட தொடர்ச்சியாச் செய்யேல்ல. அவவுக்கு எப்படி நியமனம் கிடைச்சது?"

"என்ன நீர் எங்களையே கேள்வி கேட்கும் அளவுக்கு வந்திட்டீரோ?" என்று கோபத்தோடு கதிரையை பின்னுக்குத் தள்ளி எழுந்து கண்ணை விரித்து...

"போ... வெளியால..."

"என் கண் முன்னே நிற்காதே... அந்த ஊர்ப்புத்தியைக் காட்ட வந்திட்டாய்..." என்றார் கையை வெளிப் பக்கம் நீட்டியபடி.

"ஓம் சேர் நான் வெளியே போகத்தான் போறன். அதற்குமுன் என் கேள்விக்கு உங்களாலபதில்சொல்ல முடியுமா சேர்?" .......................

ஆடிஅடங்கிப்போய் அவள் முன் திகைத்து நின்றவரை தலைநிமிர்ந்து கேட்டுவிட்டு அந்த ஊழல் மோசடிகளையெல்லாம் கண்டுகொள்ள முடியாத மன நிலையுடன் வெளியே இறங்கி சைக்கிளில் புறப்படுகின்றாள்..அவளின் எதிர்காலம்..? காலம் தான் பதில் சொல்ல வேண்டும்.

பி.சீதாராம், பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பூமியைத் தின்று தீர்க்கும் கொள்ளையர்கள் யார்?

“ முதலாளித்தும், இயற்கையின் மேல் தொடுக்கப்படும் தாக்குதலை “வளர்ச்சி” என்று தனது அடிவருடிகளான முதலாளித்துவ அறிஞர்களையும் ஊடகங்களையும் வைத்து பிரச்சாரம் செய்து வருகிறது.

இயற்கையை அழித்தொழிகக்கும் பேரழிவு நடவடிக்கை வளர்ச்சியல்ல என்பதை மக்கள் புரிந்து கொள்வதோடு அதை சர்க்கரை தடவிய பொருளாதார வார்த்தைகளில் நியாயப்படுத்தும் முதலாளிய அடிவருடிகளையும், இந்த நடவடிக்கைகளுக்குத துணை நிற்கும் அரசியல் மற்றும் ஆளும் வர்க்க அடியாட்களையும் அடையாளம் கண்டு செயறபடவேண்டும் ”

பூமியின் “இலக்கு கடந்த நாள” (Earth Overshoot day) கடந்த ஆகஸ்டு 13-ம் தேதி அன்று கடைபிடிக்கப்பட்டது. மத்தீஸ் வாக்கெனெக்கல் என்ற சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்தவரால் ஏற்படுத்தப்பட்ட குளோபல் *ஃபுட்பிரிண்ட் நெட்வொர்க்* (Global Footprint Network) என்ற தன்னார்வ அமைப்பு, ஆண்டு தோறும் பூமியின் இலக்கு கடந்த நாளை அறிவித்து வருகிறது.



பூமியின் சேமிப்பிலுள்ள வளங்கள் மற்றும் மறு உற்பத்திக்கான வளங்களைக் கணக்கிட்டு அதற்கும் மனித இனத்தின் வருடாந்திர சுவீகரிப்பிற்கும் உள்ள சமன்பாட்டை கணக்கிடுவதன் மூலம் இந்த தேதி நிர்ணயிக்கப்படுகிறது.

1970-ம் ஆண்டின் சுவீகரிப்பையும் இயற்கை வளங்களின் இருப்பையும் கணக்கிட்ட இவ்வமைப்பு, அந்த ஆண்டின் “இலக்கு கடந்த நாளை” டிசம்பர் 23-ம் தேதியாக நிர்ண யித்தது. தொடர்ந்து வந்த ஆண்டுகளில் இந்த தேதி படிப்படியாக முன்னேறி, இந்த ஆண்டு ஆகஸ்டு 13-ம் தேதி யாக அறிவிக்கப்படடுள்ளது. அதாவது மனித இனதிற்கு இந்த ஆண்டு பூமி அளிக்க முடிந்திருக்க கூடிய வளங்களை நாம் ஆகஸ்டு 13ம் தேதியோடு தின்று தீர்த்து விட்டோம் என்று பொருளாகிறது. இந்த தேதிக்குப் பின் நாம் சுவீகரிக்கும் பூமியின் ஒவ்வொரு வளமும், நமது தேவைகளும் இயற்கையின் ரிசர்வ் மற்றும் மறு உற்பத்தித் திறனுக்கும் அப்பாற்பட்டதாகும்.

ஒவ்வொரு ஆண்டும் பூமியிலிருந்து உறிஞ்சியெடுக்கப்படும் இயற்கை வளங்களைக் கணக்கிட்டால் இரண்டரை பூமிகளுக்கு ஒப்பான வளங்களை ஆண்டு தோறும் மனித இனம் சுவீகரிப்பதாக கொள்ள முடியும் என்று மேற்படி அமைப்பு அறிவித்துள்ளது. ஜப்பான் தனது அளவை விட 5.5 மடங்கு அதிக நிலப்பரப்பின் வளங்களை சுவீகரிப்பதாகவும், இந்தியா தனது அளவை விட இரண்டு மடங்கு அதிக நிலப்பரப்பின் வளங்களை சுவீகரிப்பதாகவும் இவ்வமைப்பு அறிவித்துள்ளது.

முன்னெப்போதும் இல்லாத வகையில் இயற்கையின் வளங்கள் உறிஞ்சியெடுக்கப்படும் இதே காலகட்டத்தில் தான், முன்னெப்போதும் இல்லாத வகையில், இருப்போரும் இல்லாதோருக்குமான இடைவெளி அதிகரித்துள்ளது. வறுமையில் உழல்வோரின் எண்ணிக்கை வரலாற்றில் எப்போதும் இல்லாத வகையில் இதே காலகட்டத்தில் தான் அதிகரித்துள்ளது.

உலகின் மொத்த வளங்களில் சரிபாதி அளவு ஒட்டு மொத்த மக்கள் தொகையில் வெறும் ஒரு சதவீதம் பேரிடம் குவிந்துள்ளதாக தெரிவிக்கிறது ஆக்ஸ்பாம்.

மேலும், முதல் 80 பணக்காரர்களின் சொத்து மதிப்பானது ஒட்டுமொத்த மனித இனதில் வறுமையில் உழலும் 50 சதவீதமான மக்களின் சொத்து மதிப்பிற்கு ஈடானதாம். அதாவது சுமார் 400 கோடி மக்களின் சொத்து மதிப்பும், வெறும் 80 தனிநபர்களின் சொத்து மதிப்பும் ஒன்று!

இந்த இடைவெளி முற்றுப் பெறாமல் தொடர்ந்து வளர்ந்து வருவது குறித்த அச்சம் முதலாளித்துவ உலகில் மெல்ல மெல்ல வெளிப்படத் துவங்கியுள்ளது.

இருப்போருக்கும் இல்லாதோருக்கும் இடையேயான இடைவெளி அதிகரிப்பது ஆபத்தானது என்று ஐ.எம்.எஃப் தலைவர் கிரிஸ்டின் லகார்டேயும் போப்பாண்டவர் பிரான்சிசும் இப்போது அலறுகின்றனர். எதார்த்த உண்மைகள் மக்களைக் கிளர்ந்தெழச் செய்து முதலாளித்துவ இன்பக் கனவை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து விடக்கூடாது என்ற அச்சத்தின் விளைவே அவர்களின் அலறல்.

எனினும், இயற்கையின் மேல் முதலாளித்துவ உலகம் கட்டவிழ்த்து விட்டுள்ள கூட்டு வல்லுறவு உடனடியாக நிறுத்திக் கொள்ள முடியாத ஒரு நச்சு சுழற்சியில் சிக்கிக் கொண்டுள்ளது. கடந்த ஏழாண்டுகளுக்கும் மேலாக முதலாளித்துவ உலகம் பொருளாதாரப் பெருமந்தத்தில் இருந்து மீள வழி தெரியாமல் திகைத்து நிற்கிறது. பெரிய மீன் சின்ன மீனை விழுங்குவது போல், வல்லரசுகளால் சிறிய நாடுகள் விழுங்கப்படுகின்றன - கிரீஸ் நெருக்கடி இந்த அபாயச் சீரழிவின் சமீபத்திய வெளிப்பாடு.

முடிந்த வரை மூன்றாம் உலக நாடுகளின் வளங்களைக் கொள்ளையிடுவதன் மூலம் இந்த நெருக்கடியில் இருந்து வெளி வந்துவிட முடியும் என்று வல்லரசு நாடுகள் கணக்கிடுகின்றன. இதன் விளைவாக மூன்றாம் உலக நாடுகளின் இயற்கை வளங்களின் மீதும், பல்லுயிர்ச் சூழலின் மீதும் மீளுருவாக்கம் செய்ய முடியாத வகையிலான சுரண்டலை ஏகாதிபத்திய நாடுகள் கட்டவிழ்த்து விட்டுள்ளன.

நாம் தாதுமணல் கொள்ளையன் , கிரானைட் திருடன், ஆற்று மணல் கொள்ளையன், போன்றோரைத்தான் அறிந்துள்ளோம். ஆனால், நாட்டை ஒட்டச் சுரண்டிய இம்முதலைகளைப் போல உலகளாவிய அளவில் பிரம்மாண்டமான இயற்கை வளக் கொள்ளையர்கள் சமீப காலமாக பெருகி வருகின்றனர். இவர்கள் இயற்கையிலிருந்து அநீதியான முறையில் அடிக்கும் கொள்ளை மீண்டும் எந்தக் காலத்திலும் எந்த வகையிலும் மாற்றீடு செய்ய முடியாத பாதிப்புகளை விட்டுச் செல்கிறது.



ஐநா சபையின் உணவு மற்றும் தண்ணீருக்கான அமைப்பு 2025-ம் ஆண்டு வாக்கில் உலக மக்கள் தொகையில் சுமார் 200 கோடி மக்கள் கடுமையான தண்ணீர் பற்றாக்குறையால் பாதிக்கப்படுவார்கள் என்று கணக்கிட்டுள்ளது. இது வரை கண்டறியப்பட்டுள்ள எண்ணைய ரிசர்வ் மேலும் 46 ஆண்டுகளில் தீர்ந்து விடும் என்று பிரிட்டிஷ் பெட்ரோலியம் நிறுவனமே அச்சம் தெரிவித்துள்ளது. இவை தவிர காடுகள், மலைகள் மற்றும் பூமியிலிருந்து கிடைக்க கூடிய வளங்கள் அனைத்துமே எதிர் வரும் நூற்றாண்டுக் காலத்திற்குப் பின் தீர்ந்து விடக் கூடிய அபாயத்தின் விளிம்பில் மொத்த மனித சமூகமும் ஊசலாடிக் கொண்டுள்ளது.

தனது நெருக்கடியில் இருந்து மீள முன்னெப்போதும் இல்லாத வெறியுடன் முதலாளித்துவ உலகம் செயல்பட்டு வருகிறது. நாடுகளின முதலாளித்துவ அரசகள்,தமது சுரண்டலுக்கு பொருத்தமான ஆளும் கும்பல் மூன்றாம் உலக நாடுகளில் அதிகாரத்தில் அமர்வதை உத் திரவாதம் செய்கிறது.

இயற்கையின் மேல் தொடுககப்படும் தாக்குதலை “வளர்ச்சி” என்று தனது அடிவருடிகளான முதலாளித்துவ அறிஞர்களையும் ஊடகங்களையும் வைத்து பிரச்சாரம் செய்து வருகிறது.

இயற்கையை அழித் தொழிககும் பேரழிவு நடவடிக்கை வளர்ச்சியல்ல என்பதை மககள் புரிந்து கொள்வதோடு அதை சர்க்கரை தடவிய பொருளாதார வார்த்தைகளில் நியாயப்படுத்தும் முதலாளிய அடிவருடிகளையும், இந்த நட வடிககைகளுக்குத் துணை நிற்கும் அரசியல் மற்றும் ஆளும் வர்க்க அடியாட்களையும் அடை யாளம் கண்டுகொள்ள வேண்டும்.

ஒன்று, மனித குல விரோதிகளான இவர்கள் தோற்கடிக்கபட வேண்டும் -அல்லது ஒட்டு மொத்த மனித இனமும் அழிந்துபோக வேண்டும். மூன்றாவதென்று ஒரு வாய்ப்பு நம் முன் இனியெப்போதும் இருக்கப் போவதில்லை.

தமிழரசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவை புறக்கணிக்க முடியாது..!



இந்திய மாக்கடலில் தனது செல்வாக்கைச் செலுத்துவதற்கான வாய்ப்பை வழங்குவதா? அல்லது சுயாதீன வெளியுறவுக் கோட்பாடு மற்றும் திறந்த பொருளாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதன் மூலம் இலங்கை தனது தலைவிதியைத் தானே தீர்மானிப்பதா? என்ற இரு வேறு தெரிவுகளில் இன்று, பின்னைய முடிவை, வாக்காளர்கள மக்கள் தீர்மானித்துள்ளனர்..


இலங்கையின நாடாளுமன்றத் தேர்தல், நாட்டின் அரசியல் எதிர்காலத்தை மட்டுமல்ல இந்திய மாக்கடலில் இலங்கையின் பூகோள அரசியல் எதிர்காலத்தையும் வடிவமைப்பதற்கான வாக்குறுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

இலங்கைகு கேந்திர முக்கியத்துவத்தை வழங்குகின்ற இந்திய மாக்கடலின் ஊடாக உலகின் பெரும்பாலான கப்பல் போக்குவரத்துக்கள் இடம்பெறுகின்றன. அத்துடன் 70 சதவீத பெற்றோலிய வளங்கள் கொண்டு செல்லப்படுகின்ற ஒரு பூகோள மையமாகவும் இந்திய மாக்கடல் விளங்குகிறது.

இந்த நாட்டின் மூலோபாய முக்கியத்துவமானது சீனாவிடம் மட்டும் இழக்கப்படவில்லை. இலங்கைத் தீவில் இந்தியா மற்றும் அமெரிக்கா போன்றனவும் செல்வாக்குச் செலுத்த வேண்டும் எனப் போட்டியிடுகின்றன. இந்நிலையில் சீனா இவற்றை முறியடித்து இதன் இருப்பை இந்திய மாக்கடலில் பலப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளது. இலங்கைத் தேர்தலின் பின்னால் சீன ஊடகங்களதெரிவித்திருக்கும் கருத்துக்கள் இதனை மீண்டும் மெய்ப்பினக்கின்றன.

பாராளுமன்ற தேர்தலில் முன்னை நாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தோல்வியடைந்தமை காரணமாக இந்து சமுத்திர பகுதியில் சீனாவின் செல்வாக்கு பாதிக்கப்படலாம் என்ற நிம்மதியற்ற நிலை சீனாவில் காணப்பட்ட அதேவேளை இலங்கை சீனாவை தவிர்க்க முடியாது என அந்த நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

. "இலங்கையின் சீனா சார்பு முன்னாள் ஜனாதிபதி தோல்வியை ஏற்றுக்கொண்டார்" என *தென்சீனா மோர்னிங் போஸ்ட்* தலைப்புச் செய்தியாக தெரிவித்துள்ளது- இதன் மூலம் இந்த தோல்வியில் உள்ள தந்திரோபாய அரசியலை அது வெளிப்படுத்தியுள்ளது.



இதேவேளை சீனா அரசசார்பு *குளோபல் டைம்ஸ்*, "ராஜபக்ச சீனா சார்பு தோற்றத்தை ஏற்படுத்தியது மேற்குலக, இந்திய ஊடகங்கள்" என குற்றம்சாட்டியுள்ளது.

"ஜனாதிபதி சிறிசேன தனது வெளிவிவகார கொள்கைகளிற்கு புதுவடிவம் கொடுத்து வல்லரசுகளுடன் சமமான உறவை பேணுவதற்கு முயற்சிகளை மேற்கொண்டுள்ள அதேவேளை சீனாவை இலங்கை தவிர்க்க முடியாது.

இலங்கைசீனா உறவு பாதிக்கப்படும் என்பது வெளிநாட்டவர்களின் எதிர்பார்ப்பு,சீனா இருதரப்பு உறவுகளை பேணுவதற்கு தனி ஒரு கட்சியில் தங்கியிராது" எனவும் அந்த செய்தித்தாள் தெரிவித்துள்ளது.

"ராஜபக்ச தேர்தலில் போட்டியிடுவதாக அறிவித்த காலம் முதல் இந்தியமேற்குலக ஊடகங்கள் அவரை சீனா ஆதரவு வேட்பாளராக சித்தரித்தன, அவரது தோல்வி சீனாவை விரக்திக்குள்ளாக்கும் எனவும் அவை கூறின" என்றும் சீன செய்தித்தாள்கள் குறிப்பிட்டுள்ளன. இவ்வாறு சீனாவுக்கும் மகிந்தவுக்கும் உள்ள நெருக்கம் உலகறிந்த உண்மை.

இலங்கையின் முன்னை நாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தனக்கு வேண்டியவர்களுக்கு மட்டும் சலுகைகளை வழங்கியிருந்தார். இவரது காலத்தில் ஊழல் மோசடி நிறைந்திருந்தது. 26 ஆண்டுகளாக இலங்கையில் தொடரப்பட்ட யுத்தமானது 2009ல் ராஜபக்சவால் முடிவுக்குக் கொண்டு வரப்பட்ட நிலையில் நாட்டில் வாழும் சிங்கள பெரும்பான்மை மக்கள் மத்தியில் ராஜபக்ச ஒரு போர்க் கதாநாயகனாக விளங்குகிறார்.

மகிந்த ராஜபக்ச இலங்கையின் அதிபராக இருந்த வேளையில், இந்தியாவுடனான உறவு முறிவடைந்திருந்தது. ஏனெனில் தமிழ் இனத்துடன் ராஜபக்சவின் அரசாங்கம் மீளிணக்கப்பாட்டை ஏற்படுத்தத் தவறியமையே இந்த முறிவுக்குக் காரணமாகும்.


ஆனால், முன்பு குறிப்பிட்டிருப்பது போல, ராஜபக்சவின் ஆட்சிக் காலத்தில் சீனாவுடனான உறவு கணிசமானளவு நெருக்கமடைந்திருந்தது. இலங்கையில் சீன நிறுவனங்கள் பல்வேறு கட்டுமான ஒப்பந்தங்களை மேற்கொண்டு அவற்றை அமுல்படுத்தின.

இதன்மூலம் இலங்கையானது ஆசியா தொடக்கம் ஆபிரிக்கா மற்றும் மத்திய கிழக்கு வரை இணைப்பை ஏற்படுத்துவதற்கான சீனாவின் 'பட்டுப்பாதைத் திட்டத்தை' அமுல்படுத்துவதற்கான மிக முக்கிய மையமாக இலங்கையைப் பயன்படுத்துவதில் சீனா வெற்றி கண்டது.

**சீனாவின் பட்டுப்பாதைத் திட்டம் என்பது வெறும் வர்த்தக முயற்சியல்ல. இந்திய மாக்கடல் பிராந்தியத்தில் சீனாவின் கடற்படையினர் எரிபொருட்களை நிரப்புவதற்கும், பதிலீடுகள் செய்வதற்கும், மாலுமிகள் ஓய்வெடுப்பதற்கும் பராமரிப்பை மேற்கொள்வதற்குமான ஒரு தளத்தை சீனாவின் பட்டுப் பாதைத் திட்டம் வழங்குகிறது.**

சீனாவானது பொருளாதார மற்றும் வர்த்தக சார் நலனை மட்டும் அடிப்படையாகக் கொண்டல்லாது இராணுவ நலன்களை அடைந்து கொள்வதற்காகவே இந்திய மாக்கடலைப் பயன்படுத்துகிறது என்பது கடந்த ஆண்டின் இறுதியில் இலங்கையின் கொழும்புத் துறைமுகத்தில் சீனக் கடற்படைக்குச் சொந்தமான நீர்மூழ்கிக்கப்பல்கள் தரித்து நின்றதன்மூலம் உறுதிப்படுத்தப்படுகிறது.

இவ்வாறான செயற்பாடுகள் இலங்கையானது இந்தியாவின் கியூபா என்கின்ற நிலைக்கு மாற வழிவகுத்தது.



இலங்கையின் அதிபர் மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகிய இருவரும் சீனாவுடன் இலங்கை கொண்டுள்ள நெருக்கமான உறவால் இந்தியாவுடனான உறவு விரிசலடைந்துள்ளது என்கின்ற உண்மையை அடையாளங் கண்டு கொண்டனர்.

ராஜபக்சவால் சீனாவுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் இலங்கை கடன்படு நிலைக்குச் செல்வதற்கு மிகமுக்கிய காரணமாக உள்ளதாக, ராஜபக்சவின் சட்டசபையில் சுகாதார அமைச்சராகச் செயற்பட்டுப் பின்னர் ராஜபக்சவுக்கு எதிராக அதிபர் வேட்பாளராகப் போட்டியிட்ட மைத்திரிபால சிறிசேன இலங்கை அதிபர் தேர்தல் பரப்புரையின் போது தெரிவித்திருந்தார்.

இதேபோன்று, 'வெள்ளைக்காரரால் இராணுவத்தைப் பலப்படுத்துவதற்காக கையகப்படுத்தப்பட்ட இலங்கைக்குச் சொந்தமான நிலங்கள் தற்போது வெளிநாட்டுக் காரர்களால் ஒரு சில சிறிலங்கர்களுக்கு கப்பம் செலுத்தி உடமையாக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையானது மேலும் ஆறு ஆண்டுகள் தொடர்ந்தால் எமது நாடு கொலனித்துவ நாடாக மாறும் அபாயம் உள்ளது. அவ்வாறு மாறினால் நாங்கள் அடிமைகளாகி விடுவோம்' என ஜனாதிபதி சிறிசேன தனது தேர்தல் பரப்புரையின் போது எச்சரிக்கை விடுத்திருந்தார்.

சிறிசேனவின் தேர்தல் அறிக்கையில் சீனா எனச் சுட்டிக்காட்டப்படாவிட்டாலும் கூட, இது சீனாவைக் குறிக்கின்றது என்பது தெளிவாகும்.

ஜனாதிபதி சிறிசேன ஆட்சிக்கு வந்ததன் பின்னர் 1.4 பில்லியன் டொலர் பெறுமதியான சீனத் திட்டம் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இத்திட்டமானது சூழல் சட்டத்தை மீறுவதாகவும் இதில் மோசடிகள் இடம்பெற்றுள்ளதாகவும் கூறப்பட்டது. இதுதொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என கட்டளையிடப்பட்டது.

இதற்கும் மேலாக, சட்டத் திருத்தம் ஒன்றை முன்வைத்ததன் மூலம் இரண்டு தடவைகள் மட்டுமே அதிபராக பதவியேற்க முடியும் என்கின்ற சட்டம் நிறுவப்பட்டது. இதனால் பிரதமர் பதவிக்கான அதிகாரங்கள்பலமுற்றுள்ளன.

**முன்னை நாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் அதிகாரத்துவ ஆட்சியானது துருக்கியின் ரஜிப் எர்டோகனுடன் ஒப்பீடு செய்யப்பட முடியும்.**

எர்டோகன், துருக்கியின் பிரதமராக பத்தாண்டுக்கும் மேலாக ஆட்சி செய்த பின்னர் கடந்த ஆண்டு நாட்டின் அதிபராக நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இவரே இவ்வாறு நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதலாவது துருக்கியின் அதிபராவார். எர்டோகனுக்கு துருக்கியில் இஸ்லாமியர்கள் ஆதரவளிக்கின்றனர்.

இதேபோன்று இலங்கையல் சிங்களப்பெரும்பான்மை சமூகத்தவர் மகிந்த ராஜபக்சவிற்குத் தமது ஆதரவை வழங்குகியிருந்தனர்

இலங்கையன் புதிய அரசாங்கம் 'சீனாவை குற்றவாளி போன்று செயற்படுத்துகிறார்' என மகிந்த ராஜபக்ச குற்றம் சுமத்தியிருந்தார்.

எப்படியோ, ராஜபக்சின் பிரதமராகும் கனவு உடைக்கப்பட்டாலும் சீனாவை இலங்கை, கையாள்வது, மிகக் கடினமான விடயமாகவே இருக்கப்போகிறது. சீனா, இந்தியா மற்றும அமெரிக்கா ஆகிய மூன்று வெவ்வேறு சக்திமிக்க நாடுகளின் மத்தியில் தமது கடல்சார் செல்வாக்கை நிலைப்படுத்துவதற்கான இவர்களது போட்டியில் இலங்கை சிக்கவைக் கப்பட்டுள்ளது என்பதும் இலங்கையால் சீனாவைப் முழுவதுமாகப் புறக்கணிக்கவும்முடியாது என்பதையும் ஏற்றுக்கொண்டுதான் ஆக வேண்டும்.

பேராசிரியர்-
BRAHMA CHELLANEY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலத்தால் அழியாத கானங்கள் ...

படம்: உயர்ந்த மனிதன்
பாடல்:நாளை இந்த வேளை பார்த்து ஓடிவா நிலா
பாடியவர்:பி.சுசீலா
இசை:எம்.எஸ்.விஸ்வநாதன்



பால் போலவே வான் மீதிலே
யார் காணவே நீ காய்கிறாய்

நாளை இந்த வேளை பார்த்து ஓடி வா நிலா
இன்று எந்தன் தலைவன் இல்லை சென்று வா நிலா
தென்றலே என் தனிமை கண்டு நின்று போய் விடு
தென்றலே என் தனிமை கண்டு நின்று போய் விடு

வண்ண விழியின் வாசலில் என் தேவன் தோன்றினான்
எண்ணம் என்னும் மேடையில் பொன் மாலை சூடினான்
கன்னி அழகை பாடவோ அவன் கவிஞன் ஆகினான்
பெண்மையே உன் மென்மை கண்டு கலைஞன் ஆகினான்

சொல்ல நினைத்த ஆசைகள் சொல் லாமல் போவதேன்
சொல்ல வந்த நேரத்தில் பொல்லாத நாணமேன்
மன்னன் நடந்த பாதையில் என் கால்கள் செல்வதேன்
மங்கையே உன் கண்கள் இன்று மயக்கம் கொண்டதேன்

இப்பாடலை
SMS மூலம் விரும்பிக் கேட்டவர்கள்:
சாமினி, விஜயமாலா, விஜயலக்சுமி, விஜயராணி, விஜயகுமார், விஜயராகினி, சந்திரராசா, பாபு, அம்பிகா, ரஞ்சன், எஸ். ஜைஸ்னவி, சுகந்தன், சீனுகா, துவாரகன், ஐஸ்வர்யா, செந்தூரன், காவியா, கவிதா, இராசேந்திரம்-கிளிநொச்சி, விேனாஜன்-நீர்வேலி.

*அன்பு வாசகர்களே!*
காலத்தால் அழியாத கானம் பகுதிக்கு நீங்களும் பாடல்களை விரும்பிக் கேட்கலாம். உங்கள் பெயர், முகவரியுடன் விரும்பிக் கேட்பவர்கள் பெயர், முகவரியையும்
**021 567 1543**
எனும் இலக்கத்திற்கு **SMS** செய்யுங்கள்.

## ஈழத்து சினிமா

# திரைக்கதையில் அவள் குறும்பட விமர்சனம்



நேர்கோட்டுத் திரைக்கதையில் எளிமையாகப் பயணிக்கும் இயல்போடு 48 மணித்தியால குறும்படப்போட்டியில் பங்குபற்றிய குறும்படம் திரைக்கதையில் அவள். கணவன் மனைவிக்கு இடையிலான ஒருவகை முரண்பாட்டை இன்னும் ஒரு வித்தியசமான பார்வையில் சொல்ல எத்தனித்து இருக்கின்றது.

நடுவர்க்கக் குடும்பமாக இருந்தாலும் கணவன் முழுமூச்சுடன் திரைப்பட முயற்சியில் இருப்பவர். அவரின் கனவு திரைப்பட உருவாக்கத்திலேயே மையமிடுகின்றது. அதன் கனவுகளில் மிதப்பதால் பொருளாதாரத்தைத் தரும் வேறு வேலைகளுக்குச் செல்வதினை தவிர்த்து வருகின்றார். போதுமான வருவாயில்லாமல் குடும்பத்தின் பொருளாதாரச் சுமைகளைக் குறைப்பதில் மனைவி மிகுந்த துன்பமடைகின்றார். கணவனைப் பலமுறை வேலைக்குப் போகச் சொல்லி குடும்பக் கஷ்டங்களைச் சொல்லி உந்துதல் கொடுத்தும் கணவன் வேலைக்குப் போகாமல் தன் சினிமா கனவுகளில் தொடர்ந்தும் விட்டுக்கொடுக்காமல் மூழ்கியிருக்கின்றார்.

கடனாளிகளும் கொடுத்த பணத்தைப்பெற வீடுதேடி வருகின்றார்கள். ஒரு கட்டத்தில் வாய்த்தர்க்கம் மனைவிக்கும் கணவனுக்கும் இடையில் அதிகரிக்கக் கணவன் மனைவியினை அதியுச்ச கோபத்தில் தாக்கிவிடுகின்றார். மனைவி தனது தாய்வீடு கொஞ்சக்காலம் இருந்து விட்டு வரத் தயாராகுகின்றார். அந்தநேரத்தில் வானொலியில் ஒரு செய்தி. அது அவளை மிகுந்த மகிழ்ச்சிக்கு உள்ளாக்குகின்றது.

குறும்படம் ஆரம்பிக்கும்போது காட்டப்படும் வீடும், கணவன் மேசையில் தலைசாய்த்து தூங்கும் இயல்பும், மனைவி அன்றாட வேலையில் தன்னை வருத்தி இயங்கும் காட்சிகளும் குடும்பத்தின் இயல்பையும் அவர்களுக்கு இடையில் இழையோடும் முரண்பாட்டையும் அற்புதமாகப் வெளிப்படுத்துகின்றது. கணவன் மீது கடும் அதிருப்தியில் மனைவியிருந்தாலும் கணவனைத் தனது நண்பி மட்டந்தட்டும் போது கணவனை விட்டுக்கொடுக்காமல் பேசுகின்ற காட்சி மனைவியின் உளவியல் இயல்பையும் வெளிப்படுத்துகின்றது. இவ்வாறான நுட்பமான காட்சிகளை இயக்குநர் வைத்து மனைவி பாத்திரத்தின்மீது மதிப்பைப் பார்வையாளர்களுக்குக் கூட்டும்விதத்தில் கட்டமைக்கின்றார். மனைவி பலசரக்கு கடைக்குச் செல்லும்போது நீர்படிந்த அழுக்கு வீதியைக் காட்டுவதுகூட அவர்களுக்கு இடையே சுற்றியிருக்கும் வறுமையினைக் கதைக்களத்தினோடு பிரதிபலிக்கின்றது. மனைவியின் மீது கொஞ்சம் பரிவோடு இயங்கி கடனுக்குப் பொருட்கள் கொடுக்க முன்வரும் கடையாளிகள் என்று அவர்களின் வாழ்க்கை வட்டத்தின் இயங்குமுறையும் விட்டுக்கொடுப்பு,பரிவு,கோபம் என்று அனைத்தும் சில காட்சிகளிலே திறமையாகப் பதிவாகின்றது.

உரையாடல் வடிவம் பல இடங்களில் நமது வட்டாரத்தில் இருந்து விலத்தி தென்னிந்திய பாணியில் அபத்தமாக அமைத்திருக்கின்றது. குறிப்பாக மனைவி கணவனை அழைக்கும் விதத்தில் உள்ள வசன அமைப்புகளைக் கோடிட்டுக்காட்டலாம். இவை குறிப்பிடப்படும் பாரிய சறுக்கல்களாக அமைந்திருக்கின்றன. ஒளிப்பதிவு பல இடங்களில் பூரணத்துவம் இல்லாமல் மட்டமாக இருக்கின்றது. லைட்டிங் இல்லாமல் ஒளிப்படம் பிடிக்கப்பட்டுப் படமாகப்பட்டுள்ளதால் குறும்படத்துக்கான உணர்வுகள் மழுங்கடிக்கப்படுவதனை படம் நெடுகிலும் உணரமுடிகின்றது. எடிட்டிங்கில் அவசரத்தன்மை சில இடங்களில் தென்படுகின்றது. இவற்றின் மீதான பாரிய கவனம் எதிர்வரும் படைப்பில் அத்தியாவசியமாகின்றது இயக்குநருக்கு. நடிகர்களின் இயல்பான நடிப்பு மிகவும் யதார்த்தவாதமாக அமைந்திருக்கின்றது குறும்படத்தின் தரத்தைக் கூட்டுகின்றது.

குறும்படத்தின் கிளைமாக்ஸ் மனைவிக்கு மகிழ்ச்சி தந்தாலும் பார்வையாளனை இன்னும் ஒருகோணத்தில் யோசிக்கவைகின்றது. மனைவியின் கசப்பான கஷ்டங்களை இரகசியமாகப் படம்பிடித்து ஆவணப்படப் பிரிவில் தேசியவிருது வேண்டுவது, மனைவியின் துன்பத்தில் தனது கனவை திட்டமிட்டு நிறைவேற்றுவதாகக் கணவன் தரப்பில் அமைந்திருக்கின்றது. இது எந்தளவுக்குச் சரியானது [illegible] வேண்டும்.

-[illegible]ஷ்ணன்-

## ஈழத்துக் கவிதைகள்

### சிங்களத் தோழனுக்கொரு மடல்

அன்பிற்கினிய நந்தசேனா
நேற்றைய மடல்
கிடைத்துக்கொண்டது
அசுரமாய்ப் படிக்கின்றாய் போல்
அவசரத்தில் வரைந்துள்ளாய்
பள்ளிகளில் மகாபொல திட்டங்களாம்
ஆயிரமாயிரம் நூலகம் திறப்பதாய்
மந்திரியார் மைக்கினிலே
அலறினாராம்
நீயுங்கூட எழுதியுள்ளாய்
பத்திரிகைகளும்
பறைசாற்றுகின்றன
முன்னைய இரவில்
நம்மூர் நிகழ்வுகளை
"தினவச" வும் டெய்லி நியுசு கூட
வெளியிடவில்லையா!
வானொலியாவது
அலறியிருக்குமே
இல்லையேல் இந்நற்செய்தியை
மறைத்தனவோ
நந்தசேனா
உந்தன் பள்ளியில் மாத்திரமல்ல
நம் பள்ளிகளிலும் கூட
மகாபொல பலவும் உண்டு
ஆயினும் வேற்றுமையாய்.
பரிசுகளாய் அறிவு உங்களுக்குத்
தரப்படும்
ஆனால் இங்கோ
இருக்கும் அறிவுகளைப்
பறித்துவிடுவர்
இன்னமும் புரியவில்லையா!
நேற்று முன்தினமே-யாழ்
நூல்நிலையம் எரிக்கப்பட்டது
ஓர் இலட்சம் அரிய நூல்கள்
அக்கினியுடன் சங்கமம்
உங்கள் 'பாளி' மொழியின்
கையெழுத்துச் சுவடிகளைக் கூட
விட்டு வைக்கவில்லை
யார் செய்தனரோ?
அடுத்த மடலை -நீ
விரைவாய் அனுப்புவாய்
அனுதாபத்துடன் -அவ்வண்ணம்
மடல் அனுப்பாதே
எம்மிடம் மலையளவு அனுதாபம்
உண்டு
இன்னும் சில நாட்களில்
உந்தன் கடித உறவுகள்கூட
முறிந்து விடும்.
இனவாதம் முற்றுகின்றதல்லவா?

**தோழமைகளுடன் சாள்ஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திரைவிமர்சனங்கள்

# ஜிகினா



தமிழ் சினிமாவில் தற்போதெல்லாம் ஒரு படத்திற்கு ஓப்பனிங் வேண்டும் என்றால் அது பெரிய நடிகர்களின் படங்களாக இருக்க வேண்டும். இல்லையென்றால் யாராவது முன்னணி தயாரிப்பாளர் படத்தை வாங்கி நல்ல முறையில் **Promotion** செய்தால் தான் உண்டு.அந்த வகையில் தொடர்ந்து நல்ல படங்களாக வெளியிட்டு வரும் திருப்பதி பிரதர்ஸின் அடுத்த வெளியீடு தான் இந்த ஜிகினா. விஜய் வசந்த் நடிப்பில் ரவி நந்தா பெரியசாமி இப்படத்தை இயக்கியுள்ளார்.

கதைக்களம்தமிழ் சினிமாவையும் காதலையும் பிரிக்கவே முடியாது. அதேபோல் இன்றைய Trend இளைஞர்களையும் பேஸ்புக்கையும் பிரிக்க முடியுமா? இவை இரண்டையும் இணைத்து ஒரு கதை செய்யலாம் என்று ரவி நந்தா பேஸ்புக் காதலை கையில் எடுத்துள்ளார்.

பேஸ்புக்கில் ஆண்கள் என்றால் சூர்யா, துல்கர் புகைப்படங்கள், பெண்கள் என்றால் சமந்தா, நஸ்ரியா புகைப்படங்கள். இப்படி முகத்தை மறைத்து காதலித்தால் விளைவு என்ன? இது தான் கதைச்சுருக்கம்.

தன் அம்மா இறந்த பிறகு விஜய் வசந்த் தன் நிறம், அழகு, தகுதி அனைத்தையும் நினைத்து நம்மை யார் காதலிப்பார்கள் என்று வருத்தப்பட, அவரின் நண்பர்கள் பேஸ்புக்கில் வேறு ஒருவரின் புகைப்படத்தை வைத்து பெண்களிடம் பேச சொல்கின்றனர்.

விஜய் வசந்திற்கு இதன் மூலம் ஒரு அழகான பெண் கிடைக்க, வாழ்க்கை சந்தோஷமாக செல்கின்றது. அதே பெண்ணை யதார்த்தமாக விஜய் வசந்த் சந்தித்து பழகும் வாய்ப்பு கிடைக்கின்றது, நல்ல நட்பில் எப்படி காதலை சொல்வது என்று தவிக்கின்றார்.

எப்படியாவது 'நான் தான் உங்களுடன் பேஸ்புக்கில் பேசியது, இது தான் என் நிஜ உருவம்' என சொல்ல வரும் தருணத்தில் பல சுவாரசிய மான முடிச்சுகள் உடைய மிகவும் உணர்ச்சிபூர்வமான முடிவை ஜாலியாக கூறியிருக்கிறார் ரவி நந்தா பெரியசாமி.படத்தை பற்றிய அலசல் விஜய் வசந்த் தன் தாழ்வு மனப்பான்மையால் நடிக்கும் ஒவ்வொரு காட்சிகளிலும் கலக்கியிருக்கிறார். தன் காதலை எப்படி சொல்ல வேண்டும் என்று அவர் தவிக்கும் காட்சிகளில் செம்ம ஸ்கோர் செய்கிறார்.ஹீரோயின் சானியா தாராவும் நிறைவான நடிப்பை தந்தாலும், படத்தில் டுவிஸ்ட்டாக வரும் அந்த ஹீரோயினின் நடிப்பு செம்ம யதார்த்தம்.காதலுக்கு ஏது கலர்? இரு மனம் புரிந்துகொண்டால் போதும் என்பதை ஆழமாகவும், அழுத்தமாகவும் கூறியிருக்கிறார் ரவி நந்தா பெரியசாமி. ஜான் பீட்டர் இசையில் அடிக்கடி வரும் அந்த மெலடி பாடல் தாளம் போட வைக்கின்றது.**க்ளாப்ஸ்**படத்தின் இரண்டாம் பாதி, அதிலும் குறிப்பாக கிளைமேக்ஸ் சிரிக்கவும் வைத்து அனை வரையும் சிந்திக்கவும் வைக்கின்றது. பல இளைஞ ர்களின் தாழ்வு மனப்பான் மையை வெள்ளித்திரையில் அழகாக கொண்டுவந்துள்ளார் விஜய் வசந்த்.

சிங்கம் புலி குறைந்த நேரம் வந்தாலும் அனைவரையும் வயிறு குலுங்க சிரிக்க வைத்து விடுகின்றார்.**பல்ப்ஸ்** படத்தின் முதல் பாதியில் அடிக்கடி வரும் பாடல்கள். இதை கொஞ்சம் குறைத்திருக்கலாம். படத்தில் எந்த காட்சிகளிலும் ஒட்டாத செயற்கை தனமான வில்லன் நடிகரின் நடிப்பு.மொத்தத்தில் ஜிகினா என்றாலே கலர்புல்லாக தான் இருக்கும், ஆனால் அதன் 'கறுப்பு'பக்கங்களையும் அழகாக காட்டியுள்ளது இந்த ஜிகினா.

# வாசுவும் சரவணனும் ஒண்ணாபடிச்சவங்க

ஆர்யா சரவணனாகவும் சந்தானம் வாசுவாகவும் நடித்திருக்கும் இந்தப்படத்தில், இன்றைய இளைஞர்களுக்காக, நண்பனா? மனைவியா? இருவரில் யார் முக்கியம்? என்கிற பட்டிமன்றத்தை நடத்தி அதற்கு ஒரு தீர்ப்பையும் சொல்லியிருக்கிறார்கள்.

ஆர்யாவும் சந்தானமும் பிறந்ததிலிருந்தே நண்பர்கள், படித்தது வளர்ந்தது எல்லாம் ஒன்றாகத்தான், நன்றாகப் படித்தார்களோ இல்லையோ நன்றாகக் குடிக்கிறார்கள். குடிப்பதைத் தவிர அவர்களுக்கு வேறு வேலையே இல்லையா என்று யாரும் கேட்டு விடக்கூடாது என்பதற்காக, இருவரும் சேர்ந்து கைபேசி விற்கும் கடையொன்றை நடத்திக்கொண்டிருப்பதாகக் காட்டி அந்தக்கடையில் ஓரிரு காட்சிகளையும் படமாக்கிவிட்டார்கள்.

சந்தானத்துக்கு, பானுவுடன் திருமணம் நடக்கிறது. முதலிரவுகூட நடக்கமுடியாத அளவு நண்பன் ஆர்யாவால் சிக்கல் ஏற்படுகிறது. அதனால் நண்பனைக் கழற்றிவிட முடிவெடுக்கிறார். அதற்காக அவர் செய்யும் வேலைகள் வெற்றி பெற்றதா இல்லையா என்பதே படம். பாடல்காட்சிகள் தவிர மற்ற எல்லாக்காட்சிகளிலும் ஆர்யாவும் சந்தானமும் ஒன்றாகவே இருக்கிறார்கள்.

படத்தில் நாயகி தமன்னா உட்பட வேறு நடிகர் நடிகையரும் இருக்கிறார்களா என்று சந்தேகப்படும் அளவுக்கு



இருவரும் படத்தை ஆக்கிரமித்திருக்கின்றனர். கொஞ்சம் விட்டாலும் சந்தானம்தான் படத்தின் நாயகன் என்று சொல்லிவிடுகிற அளவு காட்சிகள் இருந்தாலும் அதுபற்றிக் கவலைப்படாமல் தன்னுடைய வேலையைச் சிரத்தையாகச் செய்து சந்தானத்தின் எல்லா கலாய்ப்புகளுக்கும் ஈடுகொடுக்கிறார் ஆர்யா.

சந்தானமும் ஆர்யாவும் பேசிக்கொண்டேயிருக்கிறார்கள். சில இடங்களில் சிரிப்பு வருகிறது. ஆர்யா, நாயகி தமன்னாவைப் பார்த்தவுடனே காதல் சொல்லும் காட்சி பழசென்றாலும் பார்க்கிற மாதிரி இருக்கிறது. அவருக்கு தாஜ்மகால் பரிசு கொடுப்பது என்கிற ஒன்றுமில்லாத விடயத்தை வைத்துக்கொண்டு மூன்று நான்கு காட்சிகளைக் கடத்தியிருக்கிறார்கள். யோசித்துப்பார்த்தால் மொத்தப்படமும் அப்படித்தான் இருக்கிறது.

தமன்னா, தனக்குக் கொடுக்கப்பட்ட வேலையைச் செய்திருக்கிறார். அவரையும் சும்மாவிடாமல் குடிக்கவைத்துப் பெருமை தேடிக்கொண்டிருக்கிறார் இயக்குநர். ஆர்யா, சந்தானம், தமன்னா ஆகிய மூவருமே குடித்துவிட்டு வித்யுலேகாராமன் வீட்டுக்குப் போய்த் தகராறு செய்யும் காட்சிகள் ரொம்ப அதிகம். தமன்னாவின் தோழியாக வருகிற வித்யுலேகாவை வைத்துக்கொண்டு குண்டான பெண்கள் பற்றி மோசமாகப் பேசுகிறார்கள். சிரிப்பென்று நினைத்து அவர்கள் செய்திருக்கும் காட்சிகளை கொஞ்சம் கூட ரசிக்கமுடியவில்லை.

கடற்கரையில் உண்ணாவிரதம் இருக்கிற காட்சிகளில் சமகால அரசியலை நையாண்டி செய்திருக்கிறார்கள். ஷகிலாவை வைத்துக்கொண்டு ஊடகங்களையும் வாரியிருக்கிறார்கள். கடைசியாக பட்டிமன்ற நடுவர் போல வருகிறார் விஷால். பொலிஸ் அதிகாரியாக இருந்தாலும் அவரும் மதுகுடிக்க இடமில்லாமல் அலைகிறார் என்று காட்ட இயக்குநர் ராஜேஷைத் தவிர வேறு யாராலும் முடியாதென்றே தோன்றுகிறது.

நகைச்சுவைப் படமென்ற போர்வையில் இவை அனைத்தையும் செய்திருப்பதால் தப்பித்துக்கொள்ளலாம். நீரவ்ஷாவின் ஒளிப்பதிவு படத்துக்குப் பலம். காட்சிகள் மற்றும் பாடல்கள் என எல்லா இடங்களிலும் அவருடைய இருப்பு தெரிகிறது. இமான் இசையில் பாடல்கள் பரவாயில்லை ரகம். பின்னணி இசையிலும் பரவாயில்லை.

ஒவ்வொருவருக்கும் தங்கள், வாழ்வில் நட்புக்கு எவ்வளவு இடம், இல்லறத்து க்கு எவ்வளவு இடம் என்று பிரித்து வாழ்கிற அறிவு இருக்கிறதென்றே சொல்லலாம். ஆனால் இயக்குநர் ராஜேஷ்க்கு மட்டும் அந்த அளவுகோல் தெரியாமல் போனது வியப்பு. ஆனாலும் இதையே இன்றைய இளைஞர்களின் பெரிய சிக்கல் என்பது போலச் சித்திரித்து ஒரு முழுநீளப்படத்தை எடுக்கும் அவருடைய தைரியம் வியப்புக்குரியதுதான்.

3,6 மற்றும் 12 மாததவணை காலப்பகுதியில்
உங்கள் தெரிவுப்படி மீளச்செலுத்தலாம்
ரூபா.5மில்லியன்வரை
பெற்றுக்கொள்ள முடியும்
நம்பமுடியாத குறைந்தவட்டி வீதத்தில்
ரூபா.1மில்லியனுக்கு மாதாந்தவட்டி ரூபா.13,990 மட்டுமே
SINGER FINANCE நாடுங்கள்
உங்கள் வாகனபுத்தகத்தை கொடுத்து
உங்கள் பணத்தை பெற்றுக்கொள்ளுங்கள்


தொடர்புகளுக்கு
தனு 077 9 357 124
தர்ஷன் 077 7 009 666
சுஜந்தன் 077 7 391 449
இல.86, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றங்களும் பொறுப்புக்கூறலும்!

தமிழர் தாயகத்தில் மகிந்த ஆட்சிக்காலத்தில் அரங்கேற்றப்பட்ட போர்க்குற்றங்கள், மனிதவுரிமை மீறல்கள் தொடர்பாக உள்ளக விசாரணையை முன்னெடுப்பதில் இலங்கை அரசு முனைப்புக் காட்டிவரும் நிலையில் ஐ.நாவின் செப்டெம்பர் மாத அமர்வின் போது சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கை குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த அறிக்கையின் பிரதியொன்று நேற்றையதினம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் வழுங்கப்படவுள்ளதாக முன்னர் இரகசியத்தகவல் வெளியாகியிருந்த போதும் இக்கட்டுரை அச்சுக்கு செல்லும் வரை ஜனாதிபதியிடம் அறிக்கை கையளிக்கப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருக்கவில்லை.



இருப்பினும் இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை சனல் - 4 ஊடகம் ஒருசிலமாதங்களுக்கு முன்னரே வெளிப்படுத்தியிருந்தது.

உள்ளக விசாரணையை முன்னெடுப்பதில் இலங்கை அரசு உறுதியாகவுள்ளதாகக் கூறப்படும் நிலையில் இறுதிப் போரில் இடம்பெற்ற மனிதவுரிமைமீறல்கள் குறித்து ஐ.நாவின அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை சனல - 4 ஊடகம் வெளியிட்டது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தது.

சர்வதேச விசாரணையை முன்னெடுப்பதன் மூலமே போரில் என்ன நடந்தது என்பதை வெளிப்படுத்த முடியும் எனவும் குற்றம்சாட்டப்பட்ட தரப்பு விசாரணைகளை முன்னெடுக்கும் போது நீதியை நிலைநாட்டுவது அல்லது உண்மையை வெளிக்கொணர்வது என்பது கேள்விக்குறியான விடயம் என்பதையும் தமிழர் தரப்பு பல சந்தர்ப்பங்களில் நேரடிச் சாட்சியங்கள் ஊடாகவும் அமைப்பு ரீதியாகவும் வெளிப்படுத்தியிருந்தன.

ஈழத்தமிழரின் நியாயமான இந்தக் கருத்தை ஆதரிக்கும் வகையிலும் இனப்படுகொலையை அரங்கேற்றிய மகிந்தவை மின்சார நாற்காலியில் ஏற்ற வேண்டும் எனவும் தமிழகத்திலுள்ள ஈழ உணர்வாளர்கள் தொடர்ந்தும் வலியுறுத்தி வந்தனர்.

தற்போதும் அவர்களின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படவில்லை. தமது கொள்கையில் உறுதியாக உள்ளதை நாடாளுமன்றத் தேர்தல் முடிவுகள் வெளியிடப்பட்ட பின்னர் பா.ம.க. நிறுவுநர் டாக்டர் ராமதாஸ், ம.தி. மு.க. பொதுச் செயலாளர் வைகோ போன்றவர்களின் கருத்துக்கள் ஊடாக அறிய முடிந்தது.

அதுமட்டுமின்றி இந்திய ஊடகங்களும் குறிப்பாக பத்திரிகைகள் மகிந்தவின் தோல்வியை தமிழருக்கு கிடைத்த மாபெரும் வெற்றியாகக் கொண்டாடியிருந்தன தங்களது எழுத்துக்கள் ஊடாக.



இலங்கையில் இடம்பெற்ற போரின்போது தமிழினப்படுகொலை இடம்பெற்றது என்பதை சர்வதேச நாடுகளுக்கு உணர்த்தும் வகையில் வடக்கு மாகாணசபையினால் மிகவும் முக்கியமான தீர்மானம் ஒன்றுகொண்டுவரப்பட்டு நிறைவேற்றப்பட்டிருந்தது.

இத்தீர்மானத்தின் ஊடாக இனப்படுகொலையை தமிழினம் எதிர்கொண்டது உண்மையென்பதை அம்பலப்படுத்தியிருந்தது வடக்கு மாகாணசபை.

வடக்கில் வாழும் மக்களின் பேராதரவைப் பெற்றுதெரிவு செய்யப்பட்ட மக்களவை என்ற ரீதியிலும் இனப்படுகொலையை எதிர்கொண்ட மக்களால் தெரிவு செய்யப்பட்ட சபை என்ற ரீதியிலும் வடக்கு மாகாணசபையின் இத்தீர்மானம் சர்வதேச நாடுகளால் ஏற்றுக்கொள்ளக்கூடிய மிகவும் காத்திரமான ஆவணமாகவும் மத்திய அரசிற்கு பெரும் தலையிடியை ஏற்படுத்தியதாகவும் அமைந்திருந்தது.

இந்தத் தீர்மானத்தின் அடிப்படையிலும் யுத்தகாலத்தில் பல கொடுமைகளை கண்ணால்கண்ட சாட்சியங்களின் வாக்கு மூலங்களின் அடிப்படையிலும் செப்டெம்பர் மாத அமர்வின் போது மகிந்த ஆட்சிக்காலத்தில் அரங்கேற்றப்பட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கப்படும் என நம்பமுடியும். இது இவ்வாறிருக்க,

ஜனாதிபதித் தேர்தலின் பின் நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு ஆசனத்தைப் பெற்ற போதும் தான் எதிர்பார்த்த பதவியைப் பெறமுடியாமல் அல்லற்படும் மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் நடந்த அராஜகங்களுக்கு எதிராக சர்வதேச விசாரணை நடத்த இடமளிக்க வேண்டும்.

நல்லாட்சி, பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்துக்கான நடவடிக்கைகளை இலங்கையின் புதிய அரசாங்கம் முன்னெடுக்கவேண்டும் என்பதை சூசகமாக உணர்த்தும் வகையில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுப்பி வைத்த வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டிருந்தார்.

இலங்கையில் நிலையான அமைதியையும் செழிப்பையும் கட்டியெழுப்ப ஜனாதிபதி, பிரதமர் அரசாங்கம் மற்றும் மக்கள் அனைவரும் ஆதரவளிக்க வேண்டும் என்றும் ஐ.நா. பொதுச் செயலாளர் தனது வாழ்த்துச் செய்தியில் வலியுறுத்தியிருந்தார்.



இலங்கையில் இடம்பெற்ற போரின்போது அப்பாவிப் பொது மக்கள் பல்லாயிரக்கணக்கில் கொத்துக் கொத்தாக கொன்றொழிக்கப்பட்டனர் என்பதை சனல்-4 போன்ற சர்வதேச ஊடகங்கள் அழிக்க முடியாத ஆவணங்களாக உலகத்தின் எந்த மூலையில் இருப்பவர்களும் அறிந்து கொள்ளக் கூடிய வகையில் காணொலியாக வெளியிட்டிருந்தன.

இந்தக் காணொலி ஆதாரங்களையும் நேரடிச் சாட்சியங்களையும் வைத்து சர்வதேச விசாரணையை முன்னெடுக்க வேண்டும் என்ற தமிழரின் கோரிக்கைக்கு அமைவாகவும் பொறுப்புக்கூறல் ஊடாகவே இலங்கையில் நிரந்தர சமாதானத்தையும் நல்லிணக்கத்தையும் கட்டியெழுப்பமுடியும் என்பதையும் ஐ.நா. பொதுச் செயலாளர் உணர்த்தியுள்ளார்.

பொறுப்புக்கூறல் ஊடாக போர்க் குற்றங்களில் ஈடுபட்டவர்களைத் தண்டிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்என்பதை உணர்த்தும்வகையில் ஐ.நா.பொதுச் செயலாளரின் வாழ்த்துச் செய்தியை நோக்க முடியும்.

போர்க்குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ள நபர்களை அரசு தப்பிக்க விடாது தடுத்து நிறுத்தும் அதேவேளை அப்பாவித்தனமாகக் படுகொலை செய்யப்பட்ட பல்லாயிரக்கணக்கான தமிழர்களின் ஏக்கங்களை சுமந்தவர்களாக உள்ள தமிழ் மக்கள், தெரிவு செய்த பிரதிநிதிகளின் கைகளில் உள்ள மிகப்பெரும் பொறுப்பு என்பதை உணர்வதும்பொறுப்புக்கூறலை வலுப்படுத்தும்.

எஸ்.ஆர்.கரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# facebook

## நன்றியுள்ள காக்கை



மேகலாவுக்கும் சரவணனுக்கும் அர்ச்சனா என்ற 2 வயது மகள் இருந்தாள், அர்ச்சனாவுக்கு வீட்டின் முற்றத்தில் வைத்து சோறு ஊட்டினார் அவளின் அம்மா

முற்றத்தில் சோறு ஊட்டுவதை மரத்தில் நின்று பார்த்த ஏராளமான காகங்கள் கூடிவிட்டன.

காக்காவைக் காட்டிக் கொண்டே மகளுக்கு சோறு ஊட்டுவாள் மேகலா. ஆனால் காக்காவுக்கு சோறு போடுவதில்லை.

அப்போது அடுப்பில் விசில்... சத்தம் கேட்கவே, அர்ச்சனாவை கீழே இறக்கிவிட்டு, வீட்டிற்குள் ஓடினாள் மேகலா.

அர்ச்சனாவின் தளிர்நடையால் அவள் நடக்கும் அழகோ தனி தான்.

அம்மா உள்ளே போனதும், அர்ச்சனா கண்ணால் சிரித்தபடி தளிர்நடை நடந்தபடி, சோற்றை அள்ளி காக்காவை நோக்கி நீட்டினாள். காகங்கள் அவளை நெருங்கி வர, "காக்கா இந்தா... காக்கா இந்தா..." என்று சோறு போட்டாள்.

உள்ளே சென்ற மேகலா திரும்பி வர, அர்ச்சனாவை திட்டி விட்டு,

"அரிசி விக்கிற விலைக்கு இதுகளுக்கு வேற சோறு போடணுமாக்கும். உன் சாப்பாட்டை காக்காவுக்கு தியானம் பண்றியா?" காக்கைகளை விரட்டினாள்

அர்ச்சனாவுக்கு நாய், பூனை, காக்கா, எறும்பு எல்லோருமே நண்பர்கள்தான். கையில் என்ன பண்டம் வைத்திருந்தாலும் போட்டு விடுவாள். அவளுக்கு என்ன தெரியும்...!?

அதட்டிக் கொண்டே சோறூட்டிய மேகலா , விளையாட்டுச் சாமான்களை அர்ச்சனாவிடம் கொடுத்துவிட்டு, வீட்டு வேலைகளைக் கவனிக்க வீட்டுக்குள் சென்றுவிட்டாள்.

அர்ச்சனா முற்றத்தில் விளையாட்டு சாமான்களை பரப்பி விளையாடிக் கொண்டிருந்தாள்.

திடீரென அர்ச்சனாவின் கூச்சலும், காக்காக்கள் கத்தும் சத்தமும் கேட்டு வெளியே ஓடி வந்தாள் மேகலா.

அங்கே குரங்கு ஒன்றை காக்கை கூட்டம் விரட்டி விரட்டி கொத்திக் கொண்டு இருந்தது.

"அம்மா என் டப்பா..." என்று அழுத அர்ச்சனா, அம்மாவை கட்டிக் கொண்டாள். ஒரு நொடியில் நடந்ததை புரிந்து கொண்டாள் மேகலா.

தன் மகள் விளையாடிய பாத்திரத்தில் 'சாப்பிட ஏதேனும் இருக்குமோ?' என எண்ணி குரங்கு பாத்திரத்தை தூக்கிக் கொண்டு ஓடியிருக்கிறது. இதைப் பார்த்த காகங்கள் குரங்கினை விரட்டி கொத்து கின்றன என்பதைப் புரிந்து கொண்டாள்.

மகள் மற்ற ஜீவன்களுடன் நட்பாக இருந்தது, அவளுக்கு ஒரு இடையூறு நேர்ந்தபோது உதவியாக அமைந்ததை எண்ணி ஆச்சிரியப்பட்டாள் மேகலா.

அன்று முதல் மகளுக்கு சோறூட்ட வரும் மேகலா முதலில் காகங்களை 'க்கா...க்கா...' எனக் கூப்பிட்டு சாதம் வைத்த பின்னரே மகளுக்கு உணவூட்டினாள்! நாய் மட்டுமல்ல நாம் பாசம் காட்டும் எல்லா உயிரினங்களும் நன்றியுள்ளவையே...

## வெட்டுக்கிளியும் ஆந்தையும்

அது ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டில் ஒரு இரக்கமற்ற ஆந்தை ஒன்று வாழ்ந்து வந்தது. ஒரு நாள் மதிய வேளையில் மரப்பொந்து ஒன்றில் அந்த ஆந்தை தூங்கிக் கொண்டிருந்தது.

அந்த நேரத்தில் புல்தரையின் கீழே வெட்டுக்கிளி ஒன்று பாட்டுப் பாடிக்கொண்டே வந்தது. வெட்டுக்கிளியின் அந்த பாட்டுச்சத்தம் ஆந்தையின் தூக்கத்தை கெடுத்தது. உடனே ஆந்தை அந்த வெட்டுக் கிளியிடம், "கொஞ்சம் பாடுவதை நிறுத்து" என்று கேட்டது.

வெட்டுக்கிளியோ அதை கேட்காமல் அந்த மரத்தின் கீழே பாடிக்கொண்டிருந்தது. மேலும் ஆந்தையைப் பார்த்து, "நீ கண் தெரியாத குருட்டு பறவை ! பகலில் வருவது கிடையாது. எல்லோரும் இரவில் தூங்கிய பின்புதான் நீ வெளியே வருவாய்" என்று திட்டியது.

தினமும் ஒரே மாதிரியான உணவினை சாப்பிட்டுவந்த ஆந்தைக்கு அந்த வெட்டுக்கிளி சாப்பிட வேண்டும் என்ற ஆசை வந்தது. தந்திரத்தால்தான் வெட்டுக்கிளியை அடக்க வேண்டும் என்று தீர்மானித்து.

"நண்பனே, என்னைத் தூங்கவிடாமல் நீ செய்ய விரும்பினால் செய்துவிட்டுப் போ. ஆனால் விழித்துக் கொண்டிருப்பவர் களுக்கு இனிமையாய் இருக்கும் பொருட்டு உன் சங்கீதம் உபயோகப் பட்டுமே ! உன் சங்கீதம் இனிமையானது. அதை அதை இன்னும் மெருகேற்ற என்னிடம் ஓர் அமிர்தம் இருக்கிறது. அந்த அமிர்தத்தை இரண்டு துளி நீ சாப்பிட்டால் போதும். உன் குரலும் அமிர்தமாய் விடும். மேலே வா தருகிறேன்", என்றது ஆந்தை.

ஆந்தையின் நயவஞ்சக பேச்சைக் கேட்டு மயங்கிய வெட்டுக் கிளி மரத்தில் ஏறி ஆந்தையின் அருகில் சென்றது.

அருகில் வந்த வெட்டுக்கிளியை ஆந்தை பிடித்து நசுக்கிக் கொன்றது.

**நீதி : பயமுறுத்தலை விட நயவஞ்சகம் பலமானது ...**

## facebook (f) :.பேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 467

Search for people, places and things Nagendram Home

சர்மி சர்மிளா




சித்தியா சித்தி




தெய்வம் கஜன்





சங்கர் ஜில்லா




தேவா துஷ்யந்தன்




அஜந்தன் அரிமா




நீங்கள் பார்த்த :.பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valam.puri.16 எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்னல் வேக மனிதன் உசேன் போல்ட்

கரீபியன் தீவுவாசிகளுக்கு கிரிக்கெட்டும் தடகளமும் இரண்டு "கால்கள்'. சிறுவன் உசேன் போல்ட்டுக்கு கிரிக்கெட் மீது காதல். எட்டு வயசுக்கு ஓங்கு தாங்காக ஒரு தென்னைமரம் போல வளர்ந்திருந்த உசேன் வேகமாக ஓடி வந்து பந்து வீசினால், ஸ்டம்ப்கள் தெறிக்கும். ஆனால், போல்ட்டின் விக்கெட்டை அவனது பள்ளி ஆசிரியர் ஒருவர், "சிக்கன்' ஆசை காட்டிச் சாய்த்தார்.

"நீ பள்ளிகளுக்கு இடையிலான ஓட்டப்பந்தயத்தில் கலந்துகொள்' என இழுத்தார். "அதெல்லாம் எனக்குச் சரிவராது சார்' என போல்ட் மறுக்க, "பந்து வீசும்போது நீ ஓடிவரும் வேகம் பிரமாதம் போல்ட். ஓடினால் இன்று நீ ஜெயிப்பாய்.

ஜெயித்தால், உனக்கு அருமையான மதிய உணவு ஏற்பாடு செய்கிறேன்' என ஆசிரியர் சொல்ல, போல்ட்டின் கண்களில் சிக்கன், வறுத்த உருளைக் கிழங்கு, அரிசிச் சோறு எல்லாம் மிதந்தன. அதே நினைப்புடன் பந்தயத்தில் கலந்துகொண்டான். முதல் வெற்றி. அடுத்தடுத்து பல பந்தயங்கள். ஒவ்வொன்றிலும் "விளையாட்டாகத்தான் ஓடத் தொடங்கினான் போல்ட். வீட்டில் சின்னச் சின்னதாக பரிசுப் பொருட்களும் கோப்பைகளும் குவிந்தன.

11 வயதிலேயே தடகளத்தில் அழுத்தமாகத் தடம்பதித்த பின்னரும், கிரிக்கெட் கனவு விடவே இல்லை. ஒருநாள் அவனது தந்தை வெல்லஸ்லி சொன்ன வார்த்தைகள் போல்ட் மனதை, 180 டிகிரி மாற்றிப் போட்டது. "கிரிக்கெட் என்பது குழு விளையாட்டு.

நீ நன்றாக விளையாடினாலும் உன் டீம் தோற்றுப்போகலாம். அதில் நிறைய அரசியல் உண்டு. தேர்வாளருக்கு உன்னைப் பிடிக்கா விட்டால், நீ அணியிலேயே இருக்க முடியாது. ஆனால், தடகளத்தில் நீதான் எஜமான். உன் சாதனைகளே அனைத்தையும் தீர்மானிக்கும்.'

தடகளத்தில் 200 மீற்றர், 400 மீற்றர் பந்தயங்களில் கவனம் செலுத்த ஆரம்பித்தான் போல்ட். இயற்கையிலேயே ஓட்டத் திறமை கொண்டிருந்ததால், பயிற்சிகள் குறித்து அதுவரை போல்ட் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை. ஆனால், மாநில அளவில் ஒரு பந்தயத்தில் கெய்த் ஸ்பென்ஸ் என்கிற சிறுவன் போல்ட்டை அசால்ட்டாகப் பின்னுக்குத் தள்ள, தோல்வி அதிகம் கசந்தது. "இது மறுபடியும் நிகழக் கூடாது.'

அந்தச் சமயத்தில் 1996-ம் ஆண்டு ஒலிம்பிக்கின் தடகளப் போட்டியின் ஒளிபரப்பைப் பார்க்கும் வாய்ப்பு கிடைத்தது போல்ட்டுக்கு. ஒலிம்பிக் என்பது எவ்வளவு பெரிய நிகழ்வு, அதில் ஜெயிப்பது எத்தனை அற்புதமான சாதனை. குறிப்பாக, அமெரிக்கத் தடகள வீரர் மைக்கேல் ஜான்சன், 200 மீற்றர் பந்தயத்தில் 19.32 விநாடிகளில் செய்த சாதனையைக் கண்ட போல்ட் சிலிர்த்தான்... "அந்த இடத்தில் நானும் ஒருநாள் நிற்பேன்.'

14 வயதில் அயல்நாடுகளில் சர்வதேச ஜூனியர் லெவல் பந்தயங்களில் கலந்துகொள்ளும்போது போல்ட் தடுமாறினான். சர்வதேச சவாலைச் சமாளிக்க முடியாமல் கிடைத்த தோல்விகள் முதலில் பயமுறுத்தின.

தன்னம்பிக்கையில் தடுமாற்றம். 2002-ம் ஆண்டு ஜமைக்காவில் கிங்ஸ்டன் நகரத்தில் உலக ஜூனியர் சம்பியன்ஷிப் தடகளப் போட்டிகள் நிகழவிருந்தன. உள்ளூரிலேயே தோற்று விடுவோமோ எனப் பயந்த போல்ட், தன் வீட்டுக் கொல்லைப் புறத்தில் உட்கார்ந்து அழ ஆரம்பித்தான்.




தாய் ஜெனிபர் வந்து அரவணைத்தார். "முயற்சியே செய்யாமல் ஒதுங்கிப்போகாதே. அதன் முடிவு என்னவென்றாலும் தைரியமாக ஏற்றுக்கொள்' என அவர் சொன்ன வார்த்தைகள் போல்ட்டின் முதுகுத்தண்டை நிமிர்த்தின.

கிங்ஸ்டன் மைதானத்தில் 200 மீற்றர் ஃபைனல் பந்தயத்துக்காக காலடி எடுத்துவைத்த போது, "போல்ட்... போல்ட்... லைட்னிங் போல்ட்' என மக்கள் உற்சாகப்படுத்தினார்கள்.

போட்டியில் 20.61 விநாடிகளில் கடந்து தங்கம் வென்ற போல்ட், 200 மீற்றரில் மிகக் குறைந்த வயதில் (15), உலக ஜூனியர் சம்பியன் என்ற பெருமையை எட்டினான்.

2006-ம் ஆண்டு கொமன் வெல்த் போட்டிக்கான 4X100 தகுதிச் சுற்றில் கலந்துகொள்ள கிங்ஸ்டன் மைதானத்துக்கு வந்த போல்ட்டுக்கு, மீண்டும் தசைப்பிடிப்பு ஏற்பட்டது. போட்டியில் இருந்து விலகி, வெளியேற வேண்டிய சூழல். ஜமைக்கர்கள் பரிகசித்துக் கத்த ஆரம்பித்தார்கள். "இனி எல்லாம் அவ்வளவு தானா? நிஜமாகவே நான் இந்த விளையாட்டுக்குத் தகுதியானவன்தானா?' என போல்ட் புழுங்க, கோச்மில்ஸ் அமைதியாகச் சொன்னார்.

"வெற்றியில் கொண்டாடுவதும், தோல்வியில் எட்டி உதைப்பதும் மக்களின் இயல்புதான். நீ அவர்களுக்காக ஓடாதே. உனக் காக ஓடு. உனக்கு என ஒரு இலட்சியத்தை, இலக்கை உருவாக்கு. அதை நோக்கிச் செயற்படுவது எளிதாக இருக்கும்.

புதிய கதவு திறந்ததுபோல் இருந்தது. சிறுவயதில் சிக்கன் தேவைப்பட்டது. இப்போது போல்ட்டுக்குப் பணம் தேவை. அம்மாவுக்கு, வாஷிங் மெஷின் அப்பாவுக்கு, புதிய கார் பிறகு ஒரு வீடு. புதிய இலட்சியம். பழைய தோல்விகள், முதுகில் பிரச்சினை, கால் வலி எல்லாவற்றையும் மூளையில் இருந்து தூக்கி எறி ஓடு. உறுதியாக, வேகமாக... இன்னும் வேகமாக!

அதற்குப் பின் போல்ட் வாழ்க்கையில் நிகழ்ந்தது எல்லாம் தடதட மாற்றங்கள் பளபள வெற்றகள். எல்லாம் ஓர் உத்வேகப் பாடல் அவகாசத்தில் நிகழவில்லை. படிப்படியாக... ட்ராக் ட்ராக்காக. அதற்கு போல்ட் எடுத்த ஒரு புத்திசாலித்தனமான முடிவும் முக்கிய காரணம். 200 மீற்றர் பந்தயத்தில் மட்டுமே கவனம் செலுத்திவந்த போல்ட், 100 மீற்றரிலும் கலந்துகொள்ள முடிவெடுத்தார்.

மில்ஸ் ஒப்புக்கொள்ளவில்லை. அவர் 400 மீற்றரில் ஓடச் சொல்ல, அதற்கான கடினமான பயிற்சிகளை நினைத்தாலே, போல்ட்டுக்கு கண்கள் செருகின.

2007-ம் ஆண்டு... ஜமைக்கன் சம்பியன்ஷிப் 100 மீற்றர் பந்தயத்தில் 10.03 விநாடிகளில் கடந்து, தன்னை நிரூபித்தார் போல்ட். போல்ட்டின் 100 மீற்றர் முடிவுக்கு மில்ஸ் ஒப்புக்கொண்டார். நூறில் போல்ட் காட்டிய வேகம், அவரது இருநூறில் அதீத முன்னேற்றத்தைக் கொண்டுவந்தது. 2008-ம் ஆண்டு நியூயோர்க்கில் நடந்த ரிபோக் கிராண்ட் பிரிக்ஸில், போல்ட் உலகின் கவனத்தைத் தன் பக்கம் திருப்பினார். 100 மீற்றரில் புதிய உலக சாதனை. 9.72 விநாடிகள்... உலகின் அதிவேக மனிதன்!

நினைக்கவே இனித்தது. அதே ஆண்டு பீஜிங் ஒலிம்பிக் கில் போல்ட் தனக்குப் போட்டியாக நினைத்தது டைசன் கே என்கிற அமெரிக்க வீரரை. ஆனால், டைசன் 100 மீற்றர் அரை இறுதியிலேயே தோற்றுப் போக, போல்ட் இறுதிப் போட்டியில் எந்தவித இறுக்கமும் இல்லாமல் ஓடி மின்னலாக ஜெயித்தார்... லைட்னிங் போல்ட். கடைசி 10 மீற்றர் தூரத்தைக் கடக்கும்போதே, இரண்டு கைகளையும் பக்கவாட்டில் நீட்டிக் கொண்டாட ஆரம்பித்துவிட்டார். 9.69 விநாடிகள் என உலக சாதனை வேறு.

இடது கையை மேலே சொர்க்கத்தை நோக்கி நீட்டி, வலது கையை மடக்கி அம்பு விடுவது போல ஸ்டைல் காட்ட, அந்த நொடியில் உலகத்துக்கு போல்ட் கிறுக்குப் பிடித்தது. அதுதான் போல்ட்டின் சிக்னேச்சர் போஸ்!

அடுத்து 200 மீற்றர் இறுதிப் போட்டியில் 19.30 விநாடிகளில் கடந்து மைக்கேல் ஜான்சனின் 12 வருட சாதனையை ஓரம் கட்டினார். குழுப் போட்டியான 4X100 மீற்றர் பந்தயத்திலும் 37.10 விநாடிகள் என புதிய உலக சாதனை. போல்ட்டுக்கு மூன்று ஒலிம்பிக் தங்கப் பதக்கங்கள்!

உலகம் போல்ட்டை உச்சத்தில் தூக்கிவைத்துக் கொண்டாடியது. மீடியா, வாயைப் பிடுங்கவும் தவறவில்லை. "டைசன் கே தோற்றுப்போனதால்தான் நீங்கள் ஜெயித்தீர்களா?' என ஒருவர் கேள்விகேட்க, போல்ட் எந்த அதிர்வும் இல்லாமல் சொன்ன பதில், "டைசன் கேவை அடுத்த முறை தோற்கடிக்கிறேன்.'

சொன்னதையே செய்தார். 2009-ம் ஆண்டு பெர்லின் உலக சம்பியன்ஷிப் போட்டியில் 100 மீற்றர் ஃபைனலில் புதிய உலக சாதனை நிகழ்த்தினார் போல்ட் - 9.58 விநாடிகள். இரண்டாம் இடத்தில் டைசன் கே - 9.71 விநாடிகள். அதே நிகழ்வில் 200 மீற்றரிலும் 19.19 விநாடிகளில் புதிய உலக சாதனையை போல்ட் படைத்தார்.

"ஒருமுறை போதாது. மீண்டும் ஒலிம்பிக்கில் "டிரிபிள் கோல்டு' மேஜிக்கை நிகழ்த்த வேண்டும்' என்ற வெறியுடன் 2012-ம் ஆண்டு லண்டன் ஒலிம்பிக்கில் போல்ட் களமிறங்கினார். தொடக்கம் தவறாக அமைந்துவிடுமோ என உள்ளுக் குள் உதறல் இருந்தாலும், எந்தத் தவறுக்கும் இடம் தரவே இல்லை. மீண்டும் மூன்று தங்கங்கள். 100 மீற்றர், 200 மீற்றர், 4X100 மீற்றர்.

2012-ம் ஆண்டு ஒலிம்பிக் கில் போல்ட்டுக்குத் தகுதிச் சுற்றில் சவால்விட்டவர் சக நாட்டைச் சேர்ந்த யோஹன் பிளேக். இரு வருக்குமான மோதல், களத்தில் எதிரொலித்தது. 200 மீற்றர் ஃபைனலில் இறுதி 10 மீற்றரில் இரண்டாவதாக வந்துகொண்டிருந்த பிளேக்கை நோக்கி,

போல்ட் தன் இடது கை ஆள்காட்டி விரலை வாயில் வைத்து "உஷ்ஷ்ஷ்' என சைகை காட்டிய படி வெற்றிக்கோட்டைக் கடந்தார். மில்ஸ் அதற்காக உசேனைத் திட்டினார். "சேட்டைகள் ஏதுமின்றி ஒரே ரிதத்தில் நீ ஓடியிருந்தால், இன்னொரு புதிய உலக சாதனை படைத்திருப்பாய்.'

2017-ம் ஆண்டு போல்ட் ஓய்வு பெறலாம். வரும் 2016-ம் ஆண்டு ரியோ ஒலிம்பிக் அவருக்கு இறுதி வாய்ப்பு. மீண்டும் மூன்று தங்கங்கள் வாங்கி ஹட்ரிக் சாதனை செய்யத் தயாராகிக்கொண்டிருக்கிறார். 100 மீற்றரில் 9.5 விநாடிகளுக்குக் குறைவாக, 200 மீற்றரில் 19 விநாடிகளுக்குக் குறைவாக ஓடி, தன் உலக சாதனையை தானே முறியடிக்க வேண்டும் என்பதே போல்ட்டின் கோல்டன் இலக்கு.

'I am a living legend' 2012-ம் ஆண்டு ஒலிம்பிக் வெற்றிகளுக்குப் பிறகு போல்ட் உதிர்த்த வார்த்தைகள் இவை. தன்னம்பிக்கையின் உச்சம் அல்லது தலைகனத்தின் மிச்சம் என எப்படி வேண்டுமானாலும் இதை எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அது 100 சதவிகிதம் நிஜம்!

## 100 மீற்றரும்... 41 அடியும்...

100 மீற்றர் ஓட்டத்தில் போல்ட் ஸ்டைல் இதுதான்... 6 அடி, 5 அங்குல உயரத்தின் காரணமாக போல்ட்டின் தொடக்கம் எப்போதும் சற்று மந்தமாகவே இருக்கும். முதல் 30 மீற்றரில் உடலை முன்னோக்கிச் செலுத்தி, தலையைக் குனிந்தபடி நிலையான வேகம் எடுப்பார். 50 மீற்றரில் தன் வலமும் இடமும் எத்தனை பேர் இருக்கிறார்கள் என மைக்ரோ நொடியில் கணிப்பார். கடைசி 40 மீற்றரில் போல்ட்டின் வேகம் அசாத்தியமானதாக இருக்கும். பொதுவாக ஒரு வீரர் 45 அடி ஓடி 100 மீற்றரை அடைந்தால், போல்ட்டுக்குத் தேவைப்படுவது வெறும் 41 அடி மட்டுமே!

## புல்லட் போல்ட்!

ஜிம் பயிற்சி, எப்போதும் போல்ட் விரும்பாத ஒன்று. ஆனால், தவிர்க்க முடியாதது. "ஜிம்மில் இருக்கும்போது எல்லாம் அழகான பெண்களை நினைத்துக்கொள்வேன். நான் பீச்சுக்குச் செல்லும்போது அவர்களைக் கவரும் வகையில் என் உடல் இருக்க வேண்டும் என்ற நினைப்புடனேயே பயிற்சி செய்வேன்' - இது போல்ட் ஸ்டேட்மென்ட்.


2008-ம் ஆண்டு பீஜிங் ஒலிம்பிக்கில் போல்ட்டுக்குப் பெரிய பிரச்சினையாக இருந்தது உணவு. சீன உணவுகள் சரிப் பட்டுவரவில்லை. பீஜிங்கில் அவரது வயிற்றை நிரப்பியது சிக்கன் நட்ஜெட்ஸ் மட்டுமே. ஒரு நாளைக்கு நான்கைந்து பக்கெட் நட்ஜெட்ஸை அவர் விழுங்க, "போல்ட் தங்கம் வாங்கியதன் பின்னணி ரகசியம், சிக்கன் நட்ஜெட்ஸ்தான்' என்றுகூட செய்தி கிளம்பியது.

2006-ம் ஆண்டு தொடங்கி இப்போது வரை ஜெர்மனி நிறுவனம் Puma போல்ட்டின் பிரதான ஸ்பான்ஸர். வெர்ஜின் மீடியா, சுவிஸ் வாட்ச் நிறுவனம் Hoblot மொபைல் கேம் நிறுவனம் Rock - live , நிஸான் மோட்டார்ஸ், விசா ஆகிய நிறுவனங்களுக்கும் மொடலிங் செய்கிறார். 2014-ம் ஆண்டு போர்ப்ஸ் வெளியிட்ட உலகின் அதிகம் சம்பாதிக்கும் 100 விளையாட்டு வீரர்களின் பட்டியலில் போல்ட்டுக்கு 45-வது இடம். அந்தப் பட்டியலில் இடம் பெற்றுள்ள ஒரே தடகள வீரர் போல்ட்!

ஓய்வுக்குப் பிறகு, தனக்குப் பிரியமான மான்செஸ்டர் யுனைடெட் காற்பந்து அணியில் இணைந்து விளையாட வேண்டும் என்பது போல்ட்டின் ஆசை.

போல்ட் பெயரில் வெளி யிடப்பட்ட அப்பிள் கேம் அப்ளிகேஷன், ஜமைக்காவில் நம்பர் வன் இடத்தில் இருக்கிறது.

Tracks and Records என்ற பெயரில் உணவகம், ஆடை தயாரிக்கும் நிறுவனம் நடத்தி வருகிறார் போல்ட். இரண்டு கைகளையும் வானத்தை நோக்கி நீட்டி போல்ட் கொடுக்கும் போஸ், வைரல் பிரபலம். அதை 'To Di World' என்பார்கள். போல்ட்டின் அந்த போஸ் கொண்ட ஆடைகள் உலக அளவில் செம பேஷன்! (க)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org